Vol. LV Issue No. 16

# துக்ளக்

நிறுவிய ஆசிரியர்: சோ

THUGLAK Tamil Weekly 1-5-2024 ₹ 20






## EVM- முறைகேடு சாத்தியமா?

7 – ஆம் பக்கம்

# ELEMENTS-II

## Comfort Homes For Senior Living

## at VALASARAVAKKAM

ELEMENTS
SENIOR LIVING




**Elements Senior Living Services**

- Healthy Veg Food Options
- Housekeeping & Maintenance
- Events & Recreations
- Round The Clock Safety & Security
- 24 x 7 Paramedical Care
- Library & Lounge

Services by VEDAANTA RETIREMENT COMMUNITIES

78268 78268

www.elementsseniorliving.com

ELEMENTS - II RERA NO.: TN/29/BUILDING/0468/2022

GT REALTY | Bharathi HOMES

துக்ளக்
ஆசிரியர்: எஸ்.குருமூர்த்தி
Website : www.thuglak.com
Email : thuglak45@gmail.com
Vol. LV No.16 1.5.2024
தபால் பெட்டி எண் : 2173
காரியாலயம் : 166, (பழைய எண் 46),
கிரீன்வேஸ் சாலை, சென்னை - 600028.
Advt. Phone : 044-2493 6914

**எச்சரிக்கை-1**

தேர்தல்களில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்துக்குப் பதில், வாக்குச் சீட்டு முறை வரவேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கை, சென்றவாரம் விசாரணை செய்தது உச்ச நீதிமன்றம். மின்னணு வாக்களிப்பு பற்றிய சந்தேகங்களையும், குற்றச்சாட்டுக்களையும் நிராகரித்த நீதிமன்றம், தனது விவரமான தீர்ப்பை விரைவில் வழங்கப் போவதாகக் கூறியிருக்கிறது. இனி, தேர்தலில் தோல்வியுற்றால் ராஹுல் போன்ற தலைவர்கள் வாக்குப் பதிவு இயந்திரத்தின் மீது பழி போட முடியாது.

**எச்சரிக்கை-2**

தமிழகத்தில் நடந்த தேர்தல்களில் வாக்களித்த ஏராளமானோர், இந்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கச் சென்றபோது, தங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் இடம் பெறவில்லை என்று கூறியிருக்கிறார்கள். இந்தக் குமுறல் கோவை உட்பட பல தொகுதிகளில் மக்களிடம் இருந்து வெளிப்பட்டுள்ளது. இதுபற்றி துக்ளக் அலுவலகத்துக்கும் பல புகார்கள் வந்துள்ளன. இதுதவிர, வாக்குப் பதிவு சதவிகிதம் குறித்து, மாறி மாறி தேர்தல் கமிஷன் அளித்த புள்ளி விவரங்களும் பலரிடையே சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. தென் சென்னை தொகுதியில் சில பூத்களுக்குள் புகுந்து, தி.மு.க.வினர் கள்ள ஓட்டுப் போட்டதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் உரிய விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

**எச்சரிக்கை-3**

இரண்டு ஆண்டுகளுக்கு முன் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட 'அவர் தந்த அனுபவங்கள்' விரைவில் மீண்டும் தொடங்கும்.

# இந்தி கட்சிகள் வாக்குறுதி - ஒரு ஒப்பீடு

சென்ற ஆண்டு தடபுடலாக அமைந்த 28 கட்சிகளின் இந்தி கூட்டணி ஒன்று சேர்ந்து, கூட்டணி அரசு அமைத்தால், இன்னின்னது செய்வோம் என்று கூறி குறைந்தபட்சத் திட்டம் எதையும் அதனால் வெளியிட முடியவில்லை. பஞ்சாப், ஹரியானா, உ.பி., ம.பி., மேற்குவங்கம், அஸ்ஸாம், கேரளா ஆகிய மாநிலங்களில் இந்தி கூட்டணிக் கட்சிகளுக்கு இடையே குடுமிப்பிடி சண்டை. கூட்டணியாக ஒன்று சேர்ந்து என்னென்ன செய்வோம் என்பதைக் கூறமுடியாத நிலையில், ஒவ்வொரு கட்சியும் தனித்தனி வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கின்றன. அந்த வாக்குறுதிகளை அட்டவணையிட்டுப் பார்த்தால், எந்த ஒரு வாக்குறுதியிலும் அக்கட்சிகளுக்குள் கருத்து ஒற்றுமை இல்லை. திட்டத்திலோ, ஸீட் ஒதுக்குவதிலோ கூட்டு சேராவிட்டாலும், தங்களை கூட்டணி என்று கூறிக்கொள்ளும் விசித்திரமான இந்தி கூட்டணியிலுள்ள முக்கியமான கட்சிகளின் வாக்குறுதிகளை ஆய்வு செய்து தருகிறோம்.

**இலவசங்கள்:** காங்கிரஸ், ராஷ்ட்ரிய ஜனதா தளம் [RJD] ஆகிய இரண்டும் ஒவ்வொரு தனிநபருக்கும் ஆண்டுக்கு ரூ.1 லட்சம் தருவோம் என்கின்றன. தி.மு.க. ரூ.12,000 தருவோம் என்கிறது. கம்யூனிஸ்ட்கள் [CPI, CPM], திரிணாமூல் காங்கிரஸ் [TMC], சமாஜ்வாதி கட்சி [SP] கள் அதை ஏற்கவில்லை. TMC 10 சமையல் காஸ் சிலிண்டர்கள், 5 கிலோ தானியம் தருவோம் என்கிறது. இதை மற்றவர்கள் ஏற்கவில்லை. 200 யூனிட் மின்சாரம் இலவசமாகத் தருவோம் என்கிறது RJD. இதையும் மற்றவர்கள் ஏற்கவில்லை. விவசாயக் கடனை ரத்து செய்வோம், விவசாயத் தொழிலாளிக்கு 5000 ரூபாய் பென்ஷன் தருவோம், இலவச ரேஷன் தருவோம் என்கிறது SP. இவற்றை மற்ற கட்சிகள் ஏற்கவில்லை. இந்தி கூட்டணியில் இலவசங்களில் கூட ஒற்றுமை இல்லை.

**ஊரக வேலைவாய்ப்பு உறுதித் தொகை:** ஒரு நாளைக்கு ரூ.400 என்கின்றன காங்கிரஸ், தி.மு.க., TMC மூன்றும். இல்லை ரூ.700 என்கின்றன CPI/CPM. RJD, SP இரண்டும் ரூ.400, ரூ.700 இரண்டையும் ஏற்கவில்லை.

**அரசு வேலைவாய்ப்பு:** 30 லட்சம் பேருக்கு அரசு வேலை தருவோம் என்கிறது காங்கிரஸ். தி.மு.க., CPI/CPM, TMC, RJD, SP எதுவும் காங்கிரஸின் வாக்குறுதியை ஏற்கவில்லை.

**கச்சத்தீவு:** கச்சத்தீவை மீட்போம் என்கிறது தி.மு.க.. ஆனால் காங்கிரஸ், CPI/CPM, TMC, RJD, SP எதுவும் தி.மு.க.வின் கச்சத்தீவு வாக்குறுதியை ஏற்கவில்லை.

**நீட் தேர்வு:** நீட் தேர்வை ரத்து செய்வோம் என்கிறது தி.மு.க.. ஆனால், காங்கிரஸ், CPI/CPM, TMC, RJD, SP எதுவும் தி.மு.க. வாக்குறுதியை ஏற்கவில்லை.

**குடியுரிமைச் சட்டம்** [CAA]: CAA -வை ரத்து செய்வோம் என்கின்றன தி.மு.க., CPI/CPM, TMC. ஆனால் காங்கிரஸ், RJD, SP அதை ஏற்கவில்லை.

**பொது ஸிவில் சட்டம் [UCC]:** UCC கூடாது என்கின்றது தி.மு.க., TMC. ஆனால் காங்கிரஸ், CPI/CPM, RJD, SP இது பற்றி மௌனம் சாதிக்கின்றன. ஏற்கவில்லை.

**அரசிய சாஸனப் பிரிவு 370:** CPI/CPM இரண்

டும் அரசியல் சாஸனப் பிரிவு வேண்டும் என்கிறது. இது பற்றி மௌனம் சாதிக்கும் காங்கிரஸும், தி.மு.க. வும், CPI/CPM, TMC, RJD, SP அனைத்தும் காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து வேண்டும் என்று மட்டுமே கூறுகின்றன.

**தேசிய குடிமக்கள் ரெஜிஸ்டர் [NRC]:** தி.மு.க., TMC மட்டுமே NRC-யை எதிர்க்கின்றன. இதுபற்றி மௌனமாக இருக்கும் காங்கிரஸ், CPI/CPM, RJD, SP போன்ற கட்சிகள் அதை ஏற்கவில்லை.

**ஒரே நாடு ஒரே தேர்தல்: [ONOP]:** ஒரே நாடு ஒரே தேர்தல் முறையை தி.மு.க. மட்டுமே எதிர்க்கிறது. இது பற்றி மௌனம் சாதிக்கும் காங்கிரஸ், CPI/CPM, TMC, RJD, SP கட்சிகள் அதை ஏற்கவில்லை.

**பழைய பென்ஷன் திட்டம் [OPS]:** CPI, RJD இரண்டும் OPS திட்டம் மீண்டும் வரவேண்டும் என்று கூறுகின்றன. CPM உள்பட காங்கிரஸ், TMC, RJD, SP முதலான கட்சிகள் இதை ஏற்கவில்லை.

**ஆளுநர் நியமனம்:** ஆளுநர் பதவி ஒழிய வேண்டும் என்று CPI கூறுவதை மற்றவர்கள் ஏற்கவில்லை. மாநிலங்களின் ஆலோசனைப்படி ஆளுநர்களை நியமனம் செய்யவேண்டும் என்கிறது தி.மு.க., CPM. இதை காங்கிரஸ், RJD, SP ஏற்கவில்லை.

**விவசாயப் பொருள்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை [MSP]:** காங்கிரஸ் MSP கொடுப்போம் என்று கூறுகிறது. மற்றக் கட்சிகள் இதை ஏற்காமல், இதுபற்றி மௌனம் காக்கின்றன. மேலும் காங்கிரஸே, விவசாயிகள் கோரும் 23 பொருள்களுக்குமான MSP-ஐத் தருவோம் என்றோ, எம்.எஸ்.ஸ்வாமிநாதன் கூறியது போல அகவிலைக்கு மேலாக 50% விலை தருவோம் என்றோ கூறவில்லை. காங்கிரஸின் வாக்குறுதிக்கும், விவசாயிகளின் கோரிக்கைக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் உள்ளது. தேர்தல் அறிக்கை வெளியிடாத ஆம் ஆத்மி கட்சி, 23 விவசாயப் பொருள்களுக்கும் குறைந்தபட்ச விலை தருவோம் என்று வாயால் கூறியிருக்கிறது.

ஆம் ஆத்மி கட்சியைப் போலவே உத்தவ் தாக்கரேவின் சிவசேனா, தேசியவாதக் காங்கிரஸ் கட்சிகள் தேர்தல் அறிக்கை வெளியிடவில்லை. சில்லறைக் கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளை நாம் கணக்கில் எடுக்கவில்லை.

ஆக, எந்த வகையிலும் இந்தி கூட்டணிக் கட்சிகளுக்குள் எந்த வாக்குறுதியிலும் ஒற்றுமை இல்லை. இக்கட்சிகள் பதவிக்கு வந்தால், ஒரு கட்சியின் வாக்குறுதியை அடுத்த கட்சி ஏற்காது. ஏதாவது ஒரு கட்சி தன் வாக்குறுதியை நிறைவேற்றக் கோரினால், அடுத்த கட்சி தடுக்கும். எங்கள் வாக்குறுதி முதலில், அடுத்ததுதான் உங்கள் வாக்குறுதி என்று கூறும். இந்தக் கூட்டணி ஆட்சிக்கு வந்தால், 1996 முதல் 1998 வரை 5 பிரதமர்கள் பதவி ஏற்று சில மாதங்கள், சில நாட்களில் பதவியை விட்டு இறங்கியது போல் அலங்கோலமான ஆட்சிதான் நடக்கும். இந்தி கூட்டணி ஆட்சிக்கு வருவதற்கு எந்த வாய்ப்பும் இல்லை என்றாலும், வந்தால் என்ன ஆகும் என்று கூறவே அக்கட்சிகளின் வாக்குறுதிகளை ஒப்பிட்டுக் காட்டினோம்.

முடிவாக ஒரு திராவிட மாடல் தமாஷ். தி.மு.க., எந்த வாக்குறுதியையும் தன் பெயரில் கொடுக்கவில்லை. இந்தி கூட்டணி இதைச் செய்யும், அதைச் செய்யும் என்று கூறி, கச்சத்தீவு மீட்பு வரை எல்லா வாக்குறுதிகளையும் ஆட்சிக்கு வராத கூட்டணி மீது போட்டு தப்பித்துக் கொண்டு விட்டது. ●

## லஞ்சத்தால் ஐ.நா. சபையை வளைத்த சீனா

**தொ**டக்கம் முதலே அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கு 'ஆமாம் சாமி' போட்டு வந்த ஐ.நா. சபையில், கடந்த 10-15 ஆண்டுகளாக அமெரிக்கா, மேற்கு நாடுகளின் செல்வாக்கு குறைந்து, சீனாவின் செல்வாக்கு அதிகமாகி வருகிறது என்று மேற்கு நாட்டு ஊடகங்கள் கூறிவந்தன. இந்த நிலையில், ஐ.நா. சபையில் சீனாவின் திடீர் செல்வாக்கிற்குக் காரணம், அது ரகசியமாக லஞ்சம் கொடுத்து ஐ.நா. சபைத் தலைவர்களை வளைத்ததுதான் என்று, பிரிட்டிஷ் நாடாளுமன்ற வெளியுறவுக் குழுவின் முன் போட்டு உடைத்து, உலகையே அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறார் ஐ.நா. மனித உரிமை அமைப்பில் பணியாற்றிய எம்மா எமிலி என்ற ஐ.நா. சபை அதிகாரி.


எம்மா எமிலி

ஐ.நா. சபையின் மனித உரிமைக் கழக அலுவலக - Office of the High Commissioner for Human Rights [OHCHR] ஆணையர் அவர். அவருக்கு சபையின் நடப்புகள் மட்டுமல்லாமல், OHCHR நடப்புகள் அவருக்கு அத்துப்படி. அவரது அதிரடி வாக்குமூலத்தால், ஏற்கெனவே மங்கிவரும் ஐ.நா. சபைக்கு பெரும் தலைக்குனிவு என்பதில் சந்தேகமே இல்லை. எம்மா எமிலி என்ன கூறினார், அதன் விளைவுகள் என்ன?

### மேற்கத்திய செல்வாக்கில் ஐ.நா. சபை

ஐ.நா. பொதுச் சபையில்தான், உலகம் எந்தத் திசையில் செல்ல வேண்டும் என்பது பற்றி உலக நாடுகள் விவாதம் செய்கின்றன. குறிப்பாக, Millennium Development Goals [MDG] என்ற 21-ஆம் நூற்றாண்டில் உலகம் கடைப்பிடிக்க வேண்டிய தொலைநோக்குக் கொள்கைகளை, பொதுச் சபைதான் விவாதித்து தீர்மானித்தது. ஐ.நா. சபையின் முக்கிய அங்கம் OHCHR என்ற மனித உரிமைப் பாதுகாப்பு அமைப்பு. MDG மற்றும் OHCHR அமைப்புகளுக்கு லஞ்சம் கொடுத்துச் சீனா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துகிறது என்று கூறுகிறார் எமிலி. மனித உரிமைப் பிரச்னையை வைத்து வல்லரசு நாடுகள், வளர்ந்துவரும் நாடுகளை மிரட்டி வந்தன என்பது உலகுக்கே தெரியும். அரசியல் பிரச்னையான மனித உரிமையைப் பொருளாதாரத் துறைக்கும் நீட்டித்து, திருப்பூர், சிவகாசியில் குழந்தைத் தொழிலாளி பிரச்னையை

எழுப்பி, நமது பொருளாதார வளர்ச்சியைக் குறைப்ப தற்கும் OHCHR அமைப்பை வல்லரசுகள் பயன் படுத்தின.

### லஞ்சத்தால் ஐ.நா. சபையை வளைத்த சீனா

வல்லரசாகி வரும் சீனா, ஒரு படி மேலே சென்று ஐ.நா. சபை அமைப்புகளுக்கு நேரடியாகவே லஞ்சம் கொடுத்து, அவற்றை வளைக்கிறது என்ற புதிய குற்றச் சாட்டு, ஒட்டுமொத்த ஐ.நா. சபையையே தலைகுனிய வைக்கும் அதிர்ச்சியான செய்தி. எமிலி கொடுத்த வாக்குமூலத்தின் முக்கிய அம்சங்களை பிரிட்டிஷ் அரசாங்க இணையதளம் வெளியிட்டிருக்கிறது (1). ''ஐ.நா. சபையின் முக்கிய OHCHR, சீனாவுக்கு ஆபத் தான சகாயங்களைச் செய்கிறது. ஐ.நா. சபையைத் தன் சுயநலனுக்குப் பயன் படுத்துகிறது'' என்கிறார் எமிலி. சீனாவின் மனித உரிமை மீறல்களை ஐ.நா.வின் OHCHR கண்டு கொள்ளவில்லை என்றும் குற்றம் சாட்டுகிறார் அவர். சபையின் நடப்புகளையும், முடிவு களையும் (சீனா விரும்பியபடி) செய்து முடிக்க, அடுத்தடுத்து பதவிக்கு வந்த சபைத் தலைவர்களுக்கு சீனா லஞ்சம் கொடுத்தது என்று எமிலி, பிரிட்டிஷ் நாடாளுமன்றக் குழு முன் கூறியதை, பட்டவர்த்தன மாகப் பதிவிட்டிருக்கிறது பிரிட்டிஷ் அரசாங்கம். தான் ஐ.நா.வுக்கு கொடுக்கும் நிதியை, தைவானுடன் உறவுள்ள நாடுகளுக்கு ஐ.நா. அமைப்புகள் செலவிடக் கூடாது என்று சீனா கூறியது. அதை நடைமுறைப் படுத்தினர் ஐ.நா. அதிகாரிகள் என்றும் குற்றம் சாட்டி யிருக்கிறார் எமிலி.

கொரோனாவை சீனா செயற்கையாக உருவாக்கியது என்ற குற்றச்சாட்டை விசாரிக்க விடாமல், சீனா தடுப்பதற்கும் ஐ.நா. சபையின் தலைமை உதவியது என்கிறார் எமிலி. ஊழலில் சம்பந்தப்பட்டிருக்கும் இன்றைய ஐ.நா. சபை செக்ரட்டரி ஜெனரல் அன்டோனியோ குட்டரஸ், இவை குறித்து மௌனம் காக்கிறார் என்று நேரடியாகவே குற்றம் சாட்டுகிறார் அவர். ''நம் நாடு சிறுபான்மையினரிடம் பாரபட்சம் காட்டுகிறது. காஷ்மீரில் மனித உரிமைகளை மீறுகிறது. வரும் தேர்தல் நாணயமாக நடக்குமா என்ற கேள்விக் குறி இருக்கிறது'' என்றெல்லாம் குட்டரஸ் பேசினார். அதன் அடிப்படையில் நம் எதிர்க்கட்சிகள், ஊடகங்கள் மோடியைச் சாடினர். இதுவரை எந்த ஐ.நா. செக்ரட்டரி ஜெனரலும் கூறாத குற்றச் சாட்டுக்களை, அவர் ஏன் நம் மீது வீசினார் என்பது இப்போதுதான் புரிகிறது. சீனாவிடம் பெற்ற லஞ்சம்தான் அவரை அப்படிப் பேச வைத்திருக்கிறது என்பது வெளிப்படை. நம் ஊடகங்கள், எதிர்க்கட்சி அறிவுஜீவிகள் இனி ஐ.நா. அமைப்புகள் கூறும் குற்றச்சாட்டுகளை வைத்து மோடியைச் சாடி னால், அவர்களும் சீனா-குட்டரஸ் கூட்டாளிகள் என்று தான் அர்த்தமாகும்.

### அமெரிக்கா உருவாக்கிய பஸ்மாசுரன்

ரஷ்யாவை அழிக்க வேண்டும் என்ற உள் நோக்கம் கொண்ட அமெரிக்கா, சீனாவை ஊக்கு வித்தது. தொழிலாளிகளைப் பிழிந்து மலிவாகப் பொருள்களை உற்பத்தி செய்து தங்களுக்கு ஏற்றுமதி செய்ய உதவும் சர்வாதிகார ஆட்சி முறை நடக்கும் சீனாவைக் கண்மூடித்தனமாக ஆதரித்தது அமெரிக்கா. 25 ஆண்டுகள் சீனாவுடன் அமெரிக்கா கொஞ்சிக் குலாவியது. அமெரிக்கத் தொழில்கள், தொழிலதிபர் களும் லாபம் ஈட்டும் ஒரே நோக்கத்துடன் சீனாவுடன் நெருங்கி, தொழில்நுட்பங்களை வாரிவழங்கியதால், அமெரிக்காவில் சீனாவுக்கு பெரும் செல்வாக்கு ஏற் பட்டது. இதனால், நாளடைவில் அதன் பொருளா தாரமே சீனாவைச் சாரும் நிலை உருவானது. அமெரிக்காவின் சிந்தனை அமைப்புகளுக்கு சீனா நிதி (லஞ்சம்) கொடுத்து, அவர்களைத் தனக்குச் சாதகமாக மாற்றியது என்று தலைசிறந்த ஹூவர் இன்ஸ்டிட்டியூட் ஆய்வுக் கட்டுரை எழுதியது (2).

இப்படி அமெரிக்காவின் ஹீரோவாகி விட்ட சீனாவை எதிர்த்து, முதல் முறையாகக் குரல் கொடுத்தது அமெரிக்காவின் முன்னாள் அதிபரான டொனால்டு ட்ரம்ப்தான். அதன் பிறகு அமெரிக்கா விழித்துக் கொண்டது. அது கொஞ்சம், காலம் கடந்த நிலை. அமெரிக்காவுக்கே போட்டியாக மாறிய சீனா, தன்னை உருவாக்கிய சிவன் தலையிலேயே கை வைக்க முயன்ற பஸ்மாசுரன் போல் ஆகியது. சீனாவுக்கு மாற்று இந்தியாவைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில்தான், இன்று நம்மை நாடுகிறது அமெரிக்கா.

### நமது கடமை, உரிமை

ஜனநாயக பாரதம், சர்வாதிகார சீனாவைப் போல் ரகசியமாக லஞ்சம் கொடுத்து நம் செல்வாக்கைப் பெருக்க முடியாது. உலக நாடுகளிடையே நமக்குப் பெருகிவரும் நற்பெயரை வைத்து உலகத்தின் கருத்தைத் திரட்டித்தான், ஐ.நா. அமைப்புகளில் நடக்கும் அட்டூழியங்களை நாம் அம்பலப்படுத்த முடியும். நம்மால் மட்டுமே அதைச் செய்ய முடியும். ஐ.நா. சபையால் அநீதி இழைக்கப்பட்ட நமக்கு மட்டுமே இதற்கான தார்மீக உரிமை இருக்கிறது, கடமையும் இருக்கிறது. ஐ.நா. அமைப்புகளை துஷ்பிரயோகம் செய்த அமெரிக்கா, மேற்கத்திய நாடுகள் இந்த தார்மீக அதிகாரத்தை இழந்துவிட்டன. உலகம் தலைகீழாக மாறிவரும் நிலையில், ஐ.நா. சபையைத் திருத்தி அமைக்க நமது நாட்டுக்கு ஸ்திரமான அரசும், வலுவும், திறமையும் உள்ள பிரதமர் அவசியம். இந்த நிலையில், அடுத்த 5 ஆண்டுகள் நரேந்திர மோடி பிரதமராகத் தேர்வானால்தான், உலக அளவில் பாரத நாட்டின் செல்வாக்குத் தொடரும். அப்போதுதான் ஐ.நா. சபையை மாற்றி அமைக்க உலகின் கருத்தை நம்மால் திரட்ட முடியும்.

[1]https://committees.parliament.uk/committee/78/foreign-affairs-committee/news/200916/written-evidence- whistleblower-allegations -of-un-coverup-of-its-special-favours-to-the-prc/

[2] https://www.hoover.org/research/chinas-influence-american-interests-think-tanks ●

# கோடிகள் புரண்ட தேர்தல் களம்!

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களில் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த எவருமே, தேர்தல் விதிமுறைகளுக்கு உட்பட்டு செலவு செய்திருக்க வாய்ப்பே இல்லை. 99 சதவிகிதத்தினரின் தேர்தல் செலவுகள், அனுமதிக்கப்பட்ட அளவை மீறியதாகவே இருக்கும் என்பது தேர்தல் களத்தில் இருந்து நாம் திரட்டிய தகவல்களிலிருந்து தெரிய வந்துள்ளது. ஒரு வேட்பாளர் அதிகபட்சம் 95 லட்சம் ரூபாய் வரை தேர்தல் பணிகளுக்காகச் செலவிடலாம். ஆனால் கட்சிக்காரர்களுக்கு 'பூத் செலவு' என்ற பெயரில் மூன்று தவணைகளாகத் தரப்படும் தொகையே, குறைந்தபட்சம் ரூ. 5 கோடி முதல் அதிகபட்சமாக 10 கோடி ரூபாய் வரை இருக்கும் என்று விவரமறிந்தோர் கூறுகிறார்கள்.

முதல்கட்டத் தேர்தல் நடைபெறும் மாநிலமாக தமிழகம் அறிவிக்கப்பட்டதால், அரசியல் கட்சி வேட்பாளர்கள் சுமார் 15 நாட்கள் ஓட்டுக் கேட்டுப் போனால் போதும் என்ற நிலை இருந்ததால், ஓட்டுக் கேட்டுப் போகும் போது நாள்தோறும் ஏற்படும் செலவு ஓரளவு குறைந்துள்ளது. அப்படியிருந்தாலும் இந்த வகையான செலவே சிலருக்கு ஓரிரு கோடிக்குள்ளும், பெரிய தலைவர்கள் பிரசாரத்திற்குச் சென்ற தொகுதிகளில் இது இரு மடங்காக அதிகரித்ததாகவும் கேள்வி.

ஓட்டுக் கேட்டு வேட்பாளர் போகும்போது, கொடி பிடித்துக் கொண்டு உடன் வருபவர்களில் பலருக்கு 'பேட்டா' என்ற முறையிலும், ஆரத்தி தட்டில் பணம் போடும் வகையிலும், பேண்டு வாசிப்பது, ஆட்டோ மூலம் ஒலி பெருக்கியில் அறிவித்துச் செல்வது ஆகியவைகளிலும் ஏற்படும் இந்த செலவு கூடுதலாகவும் போக வாய்ப்புண்டு என்கிறார்கள்.

இறுதிக் கட்டத்தில் வாக்காளர்களுக்கு பணப் பட்டுவாடா என்பது, நடந்து முடிந்த இந்தத் தேர்தலிலும் அமோகமாக நடந்துள்ளது. என்ன ஒரு குறை என்றால், அ.தி.மு.க. சார்பில் எல்லா தொகுதிகளிலும் பணப்பட்டுவாடா செய்யப்படவில்லை. 7 அல்லது 8 தொகுதிகளில் மட்டும்தான் ரூ.250, ரூ.300 என்று தரப்பட்டதாக - குறிப்பாக மேற்கு மாவட்டத் தொகுதிகளில் இருந்து தகவல்கள் கிடைத்தன.

தி.மு.க. சார்பில் சில தொகுதிகளில் மட்டும்தான் வாக்காளர்களுக்கு 'கவனிப்பு' போகவில்லை. மற்ற இடங்களில் வழக்கம்போல் நடந்தது என்கிறார்கள். ஆனால், ஒரே சீராக தொகை இருக்கவில்லை என்று கேள்வி. தி.மு.க.வுக்குச் சுலப வெற்றி என்று கணிக்கப்பட்ட தொகுதிகளில், 'பொன் வைக்கிற இடத்தில் பூ வைக்கிற மாதிரி' தலா ரூ.300 தரப்பட்டிருக்கிறது என்று நமக்குத் தகவல். 'கடும் போட்டியை தி.மு.க. எதிர்கொள்ளும்' என்று அச்சு மற்றும் காட்சி ஊடகங்கள் கணித்த தொகுதிகளில், ரூ.500 வரை (சில இடங்களில் பரிசுப் பொருட்களுடன் சேர்த்து) வினியோகம் நடந்துள்ளது. சேலம், கோவை, நாமக்கல், ஈரோடு தொகுதிகளில் 'பண வினியோகம்' நடைபெற்றதை சில வாக்காளர்கள் கூறியதோடு, நமது செய்தியாளரும் இதை உறுதிப்படுத்தினார்.

தேர்தல் சமயத்தில் நாம் சந்தித்த அ.தி.மு.க., தி.மு.க. முக்கியஸ்தர்கள் சிலர், ''நடுத்தர நிலையில் உள்ளவர்கள் இனி தேர்தலில் போட்டியிடுவது என்பதே சாத்தியமில்லாததாகி விட்டது. 10 கோடி ரூபாயைச் செலவிட முடியும் என்றால் சட்டசபைத் தேர்தலில் நிற்பது பற்றியும், 30 கோடி ரூபாய் வரை முடியும் என்றால்தான் எம்.பி. ஸீட் கேட்பது குறித்தும் சிந்திக்க முடியும் போலிருக்கிறது. ஓட்டுக்குப் பணம் தந்தாலும், அந்தக் கட்சி தோற்கும் என்ற நிலை, அடுத்தடுத்து இரு தேர்தல்களில் நிகழ்ந்தால் ஓட்டுக்குப் பணம் தருவது நிற்பதற்கு வழி வகுக்கும். இது தவிர, தேர்தல் நேரத்தில் கட்சிக்காரர்கள் பணம் எதிர்பார்ப்பது புதிய கலாசாரமாக உருவாகியிருக்கிறது'' என்று ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

'ஜனநாயக' முறைப்படி, இன்றைய தேர்தல்கள் நடைபெறும் லட்சணம் இதுதான்!

**– சகாதேவன்**




# வாக்குப் பதிவு இயந்திர சர்ச்சை புதிது அல்ல!

வழக்கம்போல் 2024- நாடாளுமன்றத் தேர்தல் சமயத்திலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVM) குறித்து சில அரசியல் கட்சிகள் சந்தேகங்களை எழுப்பி, வாக்குச் சீட்டு முறைக்கே மீண்டும் போக வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். பிரதமர் மோடி உள்பட சில பா.ஜ.க. தலைவர்கள் '400 தொகுதிகளுக்குக் குறையாமல் பா.ஜ.க. வெல்லும்' என்று சொன்னதைப் பிடித்துக் கொண்டு, '400 தொகுதிகளை வெல்கிற வகையில் ஓட்டுப் பதிவு இயந்திரங்களைத் தயார் செய்து விட்டார்கள்' என்று தொல்.திருமாவளவனில் துவங்கி, கம்யூனிஸ்ட்டுகள் வரை அலறுகிறார்கள். மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் குறித்த சர்ச்சை புதிதே அல்ல. சுருக்கமாக EVM கடந்து வந்த பாதையைப் பார்த்தால் இது புரியும்.

இந்தியாவில் முதல் பொதுத் தேர்தலில் இருந்து சுமார் 40 ஆண்டுக்காலம் ஓட்டுச் சீட்டு மூலம் மக்கள் வாக்களிக்கும் முறையே பின்பற்றப்பட்டு வந்தது. மின்னணு வாக்குப் பதிவு முறையை விட மிகக் கடுமையான குற்றச்சாட்டுக்களை, ஓட்டுச் சீட்டின் மூலம் வாக்குப் பதிவு என்கிற முறை பல தடவை சந்தித்தது. கள்ள ஓட்டுப் போடுவதில் துவங்கி, வாக்குச் சாவடி மையத்தையே ஒரு குறிப்பிட்ட கட்சி கைப்பற்றிக் கொண்டு, அதிகாரிகளை மிரட்டிப் பணிய வைத்து அல்லது வெளியே துரத்தி விட்டு, ஓட்டுச் சீட்டில் தங்கள் சின்னத்தைக் குத்தி, ஓட்டுப் பெட்டியில் போட்டு விட்டுப் போவது வரை, பல கூத்துக்கள் வெவ்வேறு மாநிலங்களில் அரங்கேறியுள்ளன.

2006-ல் தி.மு.க. ஆட்சியின் போது நடந்த சென்னை மாநகராட்சித் தேர்தலின்போது, பல வாக்குச் சாவடிகளில் தி.மு.க. நிகழ்த்திய அராஜகங்கள் பலருக்கு மறந்திருக்கலாம். அப்போது சென்னையில் 99 வார்டுகளுக்கு மறுதேர்தல் நடத்த, சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி கலிஃபுல்லா பிறப்பித்த உத்தரவு பிரசித்தமான ஒன்று. பழைய வாக்குச் சீட்டு முறையை தி.மு.க.வும் ஆதரிப்பது குறிப்பிடத்தக்கது.

வாக்குச்சீட்டு முறையில் நடைபெறும் முறைகேடுகள் மட்டுமின்றி, வாக்குச் சீட்டு முறையினால் வாக்குப்பதிவு மற்றும் முடிவுகள் அறிவிப்பதில் ஏற்படும் கால தாமதமும், மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் மூலம் நீங்கும் என்பது அதன் முக்கியமான சாதகமான அம்சமாகக் கூறப்பட்டது. மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் மூலம் ஒரு நிமிடத்துக்குள் 4 பேர் ஓட்டளித்து விட முடியும். வாக்குச் சீட்டு முறையின்போது, தேர்தல் முடிவுகள் தெரிவதற்கு மூன்று நாட்கள் முதல் ஒரு வார காலம் கூட ஆகியிருக்கிறது. ஆனால் மின்னணு இயந்திர வாக்குப் பதிவு மூலம் முடிவுகளை விரைவில் அறிய முடிகிறது.

1977-ல் மின்னணு வாக்கு இயந்திரம் குறித்த சிந்தனை தேர்தல் கமிஷனுக்கு உதித்தது. 1980- ஆகஸ்ட் மாதம், மாதிரி இயந்திரத்தின் பரிசோதனையை அரசியல் கட்சிகள் முன்னிலையில் தேர்தல் கமிஷன் செய்து காட்டியது. பிறகு 1982-ல் கேரள மாநிலம் பரவூர் சட்டசபை தொகுதி இடைத்தேர்தலில், மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் மூலம் தேர்தல் நடந்தது. ஆனால் சில கட்சிகள் தெரிவித்த சந்தேகம், ஆட்சேபம், மற்றும்

அதன் சட்டப்பூர்வமின்மை காரணமாக, உச்ச நீதிமன்றம் அத்தேர்தலை ரத்து செய்தது. இதையடுத்து 1989 -ஆம் ஆண்டு, மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தில் திருத்தம் செய்து, மின்னணு வாக்குப் பதிவை தேர்தல் முறையில் கொண்டு வர வழி செய்யப்பட்டது. 1998-ல் மூன்று மாநிலங்களைச் சார்ந்த 25 சட்டசபைத் தொகுதிகளிலும், 1999-ல் 45 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் EVM பயன்படுத்தப்பட்டு, பிறகு 2004-ல் நாடு முழுவதும் இது அறிமுகமானது.

அப்போது முதல் EVM-ல் பொத்தானை அழுத்தி வாக்களிக்கும் இந்த முறை பல விமர்சனங்களையும், எதிர்ப்புகளையும் கடந்தே வந்துள்ளது. பாமரர்களுக்கு இது புரியாது என்ற வாதம் முதல், யாருக்கு வாக்கைச் செலுத்தினோமோ அவர்கள் கணக்கில்தான் அது விழுந்ததா என்ற சந்தேகம் வரை திரும்பத் திரும்பப் பேசப்படுகிறது. இத்தகைய சந்தேகங்களை முன் வைத்து தொடரப்பட்ட பல வழக்குகளை டெல்லி உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் நிராகரித்துள்ளன.

1990-ல் தொழில்நுட்ப வல்லுநர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டு, மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் மூலம் வாக்களிக்கும் முறையை செம்மைப்படுத்த அக்குழு அளித்த பரிந்துரைகள் நடைமுறைக்கு வந்தன. 2006, 2010, 2013 - ஆகிய ஆண்டுகளில் இந்த இயந்திரங்களில் அவ்வப்போது மாறுதல்கள் வந்துள்ளன.

கடந்த காலத்தில் பா.ஜ.க. தலைவர் அத்வானி, காங்கிரஸின் திக்விஜய் சிங் ஆகியோரும், கடந்த 2019-தேர்தல் முடிவுக்குப் பிறகு ராஹுல் காந்தியும் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் குறித்து அவநம்பிக்கை தெரிவித்துள்ளனர். இத்தகைய கருத்துக்கள் அவர்கள் சார்ந்த கட்சி தோல்வியுற்ற சமயத்தில் தெரிவிக்கப்பட்டவை.

தலைமைத் தேர்தல் கமிஷனர் பொறுப்பு வகித்த ஆர்.எஸ். பெரிசாஸ்திரி, குரேஷி ஆகியோர் மின்னணு வாக்குப் பதிவு முறையை வலுவாக ஆதரித்து கருத்துக் கூறியுள்ளனர். 'வெளியில் இருந்து இயக்கி, இயந்திரத்துக்குள் முடிவை மாற்ற (HACK) முடியும் என்றால், இதை அறிமுகப்படுத்திய கட்சி அல்லவா தொடர்ந்து வென்றிருக்க வேண்டும்? மாறி, மாறி பல கட்சிகளும் எப்படி ஜெயிக்கின்றன?' என்று கேட்டார் குரேஷி. குறை கூறும் கட்சிகளுக்கு தேர்தல் கமிஷனும் அறைகூவல் விடுத்தது. மோசடி செய்ய முடியும் என்று தொழில்நுட்ப ரீதியாக நிரூபிக்க இதுவரை எவரும் முன்வரவில்லை.

**– நிருபன்**


**SRIMATHA CANCER CARE**

(Secular Institution dedicated to the care of indigent patients with terminal cancer and renal failure)

Admn. Office : SMCC Towers, No. 1/808, Pillaiyar Koil Street, Thoraipakkam, Chennai - 600 097.

Tel : 044-42110496, 91762 08165, 81488 04012, 86106 15845

Email : dvijayasree.smcc@rediffmail.com, srimathacancercare@gmail.com | ISO 9001 : 2015



ஸ்ரீமாதா கேன்சர் கேர் அறக்கட்டளை மருத்துவ உலகத்தால் இனி குணப்படுத்த முடியாது என கைவிடப்பட்டு, மரணத்தின் வாயிலில், வறுமையில் சிக்கி தவிக்கும் ஏழை புற்று நோயாளிகளுக்கு "ஒரு அன்பு சரணாலயம்" "இறையே சரண்" என்று வருவோரை அன்புகாட்டி ஆதரவு கரம் நீட்டி இலவசமாக உணவு, தங்குமிடம், மருத்துவ வலி தணிப்பு சிகிச்சை கொடுத்து அவர்களது வாழ்க்கையை ஒரு வலியில்லாத பயணமாக மாற்றி தருவதே எங்கள் இலக்கு.

SRIMATHA CANCER CARE

UPI PAYMENTS ACCEPTED HERE

SCAN QR CODE WITH YOUR PSP APP

or Pay to VPA

Srica.05@cmsidfc

- ரூ.1,00,000/- நிதி கொடுத்து நீங்கள் ஒரு நிரந்தர காப்பாளர் ஆகலாம் (அல்லது) உங்கள் பெயரை "கொடையாளர் சுவரில்" பதிவு செய்து கொள்ளலாம்.
- ரூ.60,000/- கொடுத்து வருடத்திற்கு ஒரு முறை இரண்டு நோயாளிகளை தத்தெடுத்து அவர்களது அனைத்து செலவுகளையும் ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளலாம்.
- ஒருநாள் காப்பகத்தின் பராமரிப்பு செலவாக ரூ.15,000/- அளிக்கலாம்.
- ஒரு நாள் சாப்பாட்டு செலவாக ரூ.5,000/- அளிக்கலாம்.
- ஒரு நாள் ஒரு நபருக்கு இலவச டயாலிசிஸ் செய்ய ரூ.1,500/- அளிக்கலாம்.

தங்களது நன்கொடைகளை SRIMATHA CANCER CARE என்ற பெயரில் காசோலையாகவோ, வரையோலையாகவோ, உங்களது முழு முகவரியுடன், கைப்பேசி / தொலைபேசி எண்ணையும் எழுதி SRIMATHA CANCER CARE, "SMCC TOWER", 1/808, Pillaiyar Koil Street, Thoraipakkam, Chennai - 600 097 என்ற முகவரிக்கு அனுப்பலாம். தாங்கள் அளிக்கும் நன்கொடைகளுக்கு 80(G) பிரிவின் கீழ் வருமான வரி விலக்கு உண்டு.

Account Holder Name : SRI MATHA CANCER CARE

Bank Name : BANK OF BARODA, Indira Nagar Branch

Current Account No. 75310200000098

IFS Code : BARBOVJINNG (5th Digit is 'ZERO')



Founder & Managing Trustee

Dr. Hon. D.VIJAYASREE

B.Com., L.L.B. (Hons.)

The Doctor of Cancer Care Service

The Doctor of Social Works

91762 08165


வயநாடு கப்
மக்களே! இந்த சண்டையில் யார் ஜெயித்தாலும் இண்டி கூட்டணிக்குத் தான் வெற்றி! வந்து வேடிக்கை பாருங்கள்! கேரளாவைக் காக்க ஸ்டாலின் அழைக்கிறேன்.
ராகுல்
பினராயி விஜயன்
இண்டியா கூட்டணி
ஸ்டாலின்
நான் பயங்கரவாதி அல்ல - கெஜ்ரிவால்
என்னை நம்புங்க. நான் பயங்கரவாதி இல்லை. பயங்கர ஊழல் செஞ்சா பயங்கரவாதியா? மற்ற ஊழல் தலைவர்களுக்கு கொடுக்கிற உரிய மரியாதையை சட்டப்படி எனக்கும் குடுங்க.
கெஜ்ரிவால்
உதயநிதியையும் மற்ற அமைச்சர்களையும் சமமாக நடத்துவேன் என்றும், தகுதியுள்ள பெண்கள் - தகுதியில்லாத பெண்கள் என்று வேறுபாடு பார்க்க மாட்டேன் என்றும், ஹிந்துக்களையும் சிறுபான்மையினரையும் ஒரே மாதிரி நடத்துவேன் என்றும் சமத்துவ உறுதிமொழி ஏற்கிறேன்.
ஸ்டாலின்
உறுதிமொழியை யாரோ மாத்தி எழுதிக் கொடுத்திருக்காங்க. பாவம் தெரியாம படிக்கிறார்.
பா.ஜ.க.வுக்கு இந்த தடவை 150 சீட் தான் கிடைக்கும்.
அதெல்லாம் ரொம்ப ஜாஸ்தி. நமக்கு கிடைச்ச மாதிரி ஐம்பது சீட்டுக்கும் குறைவா கிடைச்சு, எதிர்க்கட்சி அந்தஸ்தும் போகணும். காங்கிரஸ் கதி பா.ஜ.க.வுக்கும் வரணும்.
ராகுல்
சோனியா
சத்யா




**சி.சிவகுமார், கீழக்காட்டூர்**

**கே:** 'மோடி இதற்கெல்லாம் கியாரண்டி தருவாரா' என்று ஸ்டாலின் பட்டியலிட்டுள்ளதைப் படித்தீர்களா?

**ப:** ''மோடி அரசைப் பற்றி பொய்ப் பிரசாரம் செய்யும் தீயசக்தி (தி.மு.க.) பதில் கூறமுடியுமா'' என்று 100 கேள்விகளைக் கொண்ட பட்டியலை வெளியிட்டிருக்கிறதே பா.ஜ.க.! அதைப் படித்தீர்களா? தேர்தல் சமயத்தில் கேள்விகளுக்குப் பதில் கேள்விகளே.

**கே.சஞ்சீவிபாரதி, அவ்வையார்பாளையம்**

**கே:** மதம், ஜாதியை அரசியல்வாதிகள் முன்னிலைப்படுத்தக் காரணம் என்ன?

**ப:** வேறு எதையும் முன்னிறுத்தத் தெரியாதவர்கள், கையில் கிடைத்ததைத்தானே முன்னிறுத்த முடியும்?




**எஸ்.எல்.ஜார்ஜ் அருண், சொக்கன் குடியிருப்பு**

**கே:** வாக்குச் சாவடிகள் கூடுவதற்கும், சுங்கச் சாவடிகள் கூடுவதற்கும் வித்தியாசம் என்ன?

**ப:** வாக்குச் சாவடிகள் கூடினால் வேட்பாளர்களுக்குச் செலவு கூடும். சுங்கச் சாவடிகள் கூடினால் அரசாங்கத்துக்கு வருமானம் கூடும்.

**கிருஷ்ணவேணி, ஈரோடு - 2**

**கே:** என் கேள்வியைப் பரிசுக்கு உரிய கேள்வியாகத் தேர்வு செய்யா விட்டால், ஆர்.எஸ்.பாரதி மூலம் மானநஷ்ட வழக்கு போடுவேன். சரியா?

**ப:** இப்படி மிரட்டுவதைப் பார்த்தால், நீங்கள் பெண்ணுரிமைவாதி போலத் தெரிகிறதே!

**எல்.ஆர்.சுந்தரராஜன், சென்னை - 91**

**கே:** உமது நிருபர்களின் தேர்தல் கருத்துக் கணிப்பு உங்களுக்கு முற்றிலும் ஏற்புடையதா?

**ப:** தான் ஏற்காத உண்மைகளையும் மறைக்காமல் வெளியிடுவதுதானே துக்ளக்?

**எம்.ஏ.நிவேதா, திருச்சி - 15**

**கே:** மனைவியிடம் நல்ல பெயர் வாங்குவது எப்படி?

**ப:** மனைவி பேச்சைக் கேட்காவிட்டாலும், எல்லோரிடமும் ''என் மனைவி கூறியபடிதான் நான் நடப்பேன்'' என்று கூறுவது.

**டி.என்.ரங்கநாதன், ஸ்ரீரங்கம்**

★ **கே:** சுயமரியாதை எது? அது எதில் அடங்கியுள்ளது?

**ப:** பதவியில் அமர்ந்தால்தான் சுயமரியாதை கிடைக்கும். கூவத்தூர், அறிவாலயம் போன்ற இடங்களில் சுயமரியாதையை விட்டால்தான் பதவி கிடைக்கும். சுயமரியாதையை விட்டுக் கிடைக்கும் பதவியில் அடங்கியிருப்பதுதான் சுயமரியாதை.

**ஆர்.உமா காயத்ரி, திசையன்விளை**

**கே:** உங்களுக்கு மிகவும் பிடித்தது மக்களா? ஓட்டு இயந்திரமா?

**ப:** வாக்கு இயந்திரத்தைத் தூஷித்துக் கொண்டு தேர்தலில் நிற்கும் ராஹுலைப் போல அல்லாமல், வாக்கு இயந்திரத்தைத் தூஷிக்காமல் அதில் வாக்களிக்கும் மக்கள்.

**ஜி.செல்வா, சிதம்பரம்**

**கே:** இந்தி கூட்டணியில் பிரதமர் வேட்பாளரை அறிவிக்காதது ஏன்?

**ப:** பிரதமர் என்பது சஸ்பென்ஸாக இருந்தால், அவர் யார் என்று தெரிந்து கொள்ளவாவது மக்கள் வாக்களிப்பார்கள் என்ற நப்பாசையால், வேட்பாளரை அறிவிக்கவில்லையோ!

**ம.வசந்தி, அவரப்பாக்கம்**

◆ **கே:** நல்லவர்களுக்கு ஓட்டு கேட்பது பெருமையாக இருப்பதாகக் கமல் கூறியுள்ளாரே?

**ப:** நல்லவர்களுக்கு ஓட்டுக் கேட்பது பெருமைதான். ஆனால் ராஜ்யசபா பதவி தருபவர்கள்தான் நல்லவர்கள் என்பது நமக்கு இப்போதுதான் தெரியும்.

**எஸ்.சிவப்பிரகாசம், விருத்தாசலம்**

**கே:** 'நான் தேர்தலில் போட்டியிடாதது தியாகம் அல்ல; வியூகம்' என்கிறாரே கமல்ஹாஸன்?




**ப:** அது சாதாரண வியூகம் அல்ல. லோக் சபைத் தேர்தலில் போட்டியிடாமல் ராஜ்ய சபை சீட்டுக்கு கையேந்திய பிரம்மாண்டமான வியூகம்.

**வண்ணை கணேசன், சென்னை**

**கே:** சுயநலம், பொறாமை, பழிவாங்குதல் - எது மோச

மானது?

**ப:** சுயநலம். கட்டுக்கடங்கா சுயநலத்தால் பொறாமை, பொறாமையால் பழிவாங்கல். இப்படி ஒன்றிலிருந்து அடுத்தது என்று கூறுவது நானல்ல. கீதையில் இரண்டாம் அத்யாயம் சுலோகம் 63-ல் கிருஷ்ணர் கூறுகிறார்.

**மு.மதனகோபால், ஓசூர்**

**கே:** மீண்டும் பருவ இதழ்களின் விலையேறி விட்டதே! வாசகர்கள் எப்படித் தாங்குவார்கள்?




**ப:** துக்ளக் விலை ஏறவில்லையே! உங்களுக்கு ஏன் கவலை?

**ஆர்.ஜெ.சிவப்பிரசாத், சென்னை - 78**

**கே:** தேர்தல் அறிவிப்பிற்குப் பின் இந்த வயதிலும் மோடி இந்தியா முழுக்க பறக்கிறாரே! எங்கிருந்து வரும் அந்த உடல்பலம்?

**ப:** உடலைத் தவறாகப் பயன்படுத்தாமல், மனக் கட்டுப்பாட்டுடன் இருந்தால் உடல் பலம், மன பலம் இரண்டும் நெடுநாள் நீடித்திருக்கும்.

**பாலா, சென்னை - 59**

**கே:** மோடிக்கு நீங்கள் ஆதரவாக இருப்பது ஏன்?

**ப:** எல்லோரும் மோடியை துவேஷத்தால் தூற்றிய தால்தான் அவரை துக்ளக்கில் தீவிரமாக ஆதரித்தார் சோ. மோடியைத் தூற்றுவது அப்படியே தொடருவதால், துக்ளக்கும் அவரை ஆதரிப்பது தொடர்கிறது.

**அரங்க சேகர், சென்னை - 59**

**கே:** தேர்தல் களத்தில் 'துக்ளக்' தி.மு.க.வுக்குச் சாதகமாகச் சொல்கிறதே?

**ப:** கருத்தில் துக்ளக் பா.ஜ.க., மோடி ஆதரவுப் பத்திரிகை என்பது ஒரு பக்கம். தேர்தல் களத்தில் துக்ளக் தி.மு.க.வுக்கு ஆதரவாக இருக்கிறது என்பது இன்னொரு பக்கம். துக்ளக் சுதந்திரமான பத்திரிகை என்பதற்கு இதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டும்?

**பி.சி.ரகு, பள்ளிச்சேரி**

**கே:** தேர்தலில் யாருக்கு வெற்றி வாய்ப்பு?

**ப:** மின்சாரத்தைத் துண்டித்து விட்டு, இருட்டில் பணப் பட்டுவாடா செய்யும் வேட்பாளருக்குத்தான் வெற்றி வாய்ப்பு. அதைத் தேர்தல் கமிஷன் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்து தடுத்தால்தான், எதிர் வேட்பாளருக்கு வெற்றி வாய்ப்பு.

**வாசுதேவன், பெங்களூரு - 67**

**கே:** வாழை இலையில் உண்பது, பஃபே பிளேட்டில் சாப்பிடுவது - வித்தியாசம்?

**ப:** வரவேற்றவர் நம்மை உபசரித்து, பரிமாறி நாம் உண்பது - வாழை இலையில். யாரும் உபசரிக்காமல், நாமே பரிமாறிக் கொண்டு நாமே உண்பது - பஃபே பிளேட்டில்.

**பி.கே.ஜீவன், கும்பகோணம் - 1**

**கே:** உங்கள் பத்திரிகை கருத்துக் கணிப்பே தமிழகத்தில் தி.மு.க. பெரும்பான்மை இடங்களில் வெல்லும் என்கிறபோது, பா.ஜ.க.வின் வெற்றி வாய்ப்புகள் எப்படி?

**ப:** ''பா.ஜ.க. வெற்றி பெறும் அளவுக்கு நீங்கள் வாக்களிக்கவில்லை என்றால், தி.மு.க. வெற்றி பெற்று விடும் ஜாக்கிரதை'' என்று வாக்காளர்களை எச்சரிக்கிறது நம் கருத்துக் கணிப்பு.

**தாமஸ் மனோகரன், புதுச்சேரி - 10**

**கே:** 'ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்' என்ற காமராஜின் வாதம் தி.மு.க.வுக்கும், அ.தி.மு.க.வுக்கும் மட்டுமே பொருந்துமா?

**ப:** காமராஜ் காலத்துக்குப் பிறகு உருவான திராவிடக் கழகங்கள் வேறு எந்தக் குட்டையில் ஊறிய மட்டைகள்? அதே குட்டையில் ஊறிய மட்டைகள் தானே!

**பா.ஜெயப்பிரகாஷ், அரண்மனைப்புதூர்**

**கே:** 'பிராமணியத்தை ஒழித்தால்தான் மக்களிடையே சமத்துவம் உருவாகும்' என்ற கன்னட நடிகர் சேட்டன் குமார் கருத்து சரியா ஸார்?

**ப:** டாக்டர் ஈ.வெ.ரா. கொடுத்த பிராமணிய ஒழிப்பு சமத்துவ மருந்தை, நூறு ஆண்டுகளாகச் சாப்பிட்டு வந்த தமிழகம், இன்னும் சமத்துவத்தைத் தேடிக் கொண்டிருக்கிறது. இது சேட்டன் குமாருக்குத் தெரிய வாய்ப்பில்லை.

**ரெ.ஜெயப்பிரகாஷ், குருங்குளம்**

**கே:** 'ஹிந்தி தெரிந்தால் எம்.பி. ஆகலாம். தமிழ் தெரிந்தால் எம்.எல்.ஏ. ஆகலாம்' என்று அமைச்சர் துரைமுருகன் கூறியுள்ளது குறித்து?




**ப:** கதிர் ஆனந்துக்கு ஹிந்தி தெரியும் என்பதைச்

# BLB Proudly Launches

BLB® PLEDGED TO ETHICS


## Shanmugapriya Nagar & Mahadheera Nagar

DTCP Apprl No: 66/2022
RERA : TN/01/Layout/7212/2022

DTCP Apprl No: 62/2022
RERA : TN/01/Layout/9441/2022

## Two New Premium housing plot projects
# near Kelambakkam

- Close to OMR and OMR bypass
- Abundant Ground Water
- Black Top Roads
- Pollution Free Locale
- Before Casa Grand Multistorey Flats
- Several Schools, Colleges nearby
- Clear Title. Reliable Promoter
- Parks, Avenue Trees and Street Lights




26 Years of Spreading Prosperity

**BLB Estates Private Limited**
21, Chinniah Street, T.Nagar, Chennai - 17
044-35242577 / 94999 77 111
www.blbestates.com / contact@blbestates.com

Investing in Values

சூசகமாகக் கூறுகிறாரோ துரைமுருகன்!

**ஆர்.ஜி.காயத்ரி, திசையன்விளை**

**கே:** 'சுதந்திரமாகச் செயல்படத்தான் பா.ஜ.க. கூட்டணியிலிருந்து விலகினோம்' என்று கூறுகிறாரே எடப்பாடி?

**ப:** இஸ்லாமிய பயங்கரவாத பி.ஃஎப்.ஐ. தொடர்புள்ள எஸ்.டி.பி.ஐ., இஸ்லாமிய தீவிரவாதம் பேசும் ஒவைசியுடன் கூட்டணி வைத்துக்கொள்ள, பா.ஜ.க.விடமிருந்து சுதந்திரம் வேண்டுமே! அதனால்தான் அவர் பா.ஜ.க. கூட்டணியிலிருந்து விலகினார்.

**என்.நாகராஜன், வரகூர்**

**கே:** தாங்கள் சி.ஏ. எஸ்.குருமூர்த்தி என்று ஏன் போட்டுக் கொள்ளவில்லை?




**ப:** வக்கீல் சோ என்று நீங்கள் ஏன் போட்டுக் கொள்ளவில்லை என்று நீங்கள் எப்போதாவது சோவைக் கேட்டிருக்கிறீர்களா?

**என்.இளங்கோவன், மயிலாடுதுறை**

**கே:** பாபா ராம்தேவ் தெரிவித்த மன்னிப்பை ஏற்க மறுத்து, 'அவருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு உத்தரவு பிறப்பிக்கப்படும்' என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது பற்றி?

**ப:** பிரசாந்த் பூஷண், ராஜ்தீப் சர்தேசாய், ராஹுல், கெஜ்ரிவால், தருண் தேஜ்பால் ஆகியோர் மன்னிப்புக் கோரியதை ஏற்றுக்கொண்டது உச்ச நீதிமன்றம். ராம்தேவ் அதிர்ஷ்டக் கட்டை.

**தே.மாதவராஜ், கோயமுத்தூர் - 45**

● **கே:** 'ஊழல் செய்வதில் தி.மு.க. காப்புரிமை' வாங்கியதாக பிரதமர் மோடி குற்றம் சுமத்துகிறாரே?

**ப:** விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்குத்தானே காப்புரிமை கிடைக்கும். 1970-களில் சர்க்காரியா கமிஷன், தி.மு.க.வின் ஊழலை விஞ்ஞான ஊழல் என்று சர்ட்டிஃபிகேட் கொடுத்து, தி.மு.க. ஊழலுக்கு காப்புரிமை பெற்றுவிட்டது. அதைத்தான் மோடி குறிப்பிட்டிருக்கிறார்.

**ஆர்.ஹரிகோபி, நியூடெல்லி - 75**

**கே:** பல்வேறு சிரமங்களுக்கு ஆளாக நேரிடும் தேர்தல் ஓட்டுப் பதிவுப் பணிகளிலிருந்து, பெண் ஊழியர்களுக்கு ஏன் விலக்கு அளிக்கக் கூடாது?

**ப:** 'பெண்களைச் சிரமங்களுக்கு உள்ளாக்கும் வேலைகளில் அவர்களுக்கு விதிவிலக்கு' என்று பெண்கள் மீது பச்சாதாபப்பட்டு யாராவது கூறினால், 'ஐயோ பெண்ணுரிமை பறிபோகிறது. ஆணாதிக்கம்' என்று பெண்ணுரிமைவாதிகள் கூச்சலிடும் காலம் ஸார் இது. பேசாமல் இருங்கள். நமக்கேன் வம்பு.

**ஆழ்வார் கண்ணன், நாங்குநேரி**

**கே:** மமதா, ஸ்டாலின் - ஒற்றுமை வேற்றுமை என்ன?

**ப:** ஒற்றுமைகள்: இருவரும் இந்திக் கூட்டணித் தலைவர்கள். இருவரும் ஏராளமாகப் பணம் கொடுத்து பிரசாந்த் கிஷோரிடம் ஆலோசனை பெற்றவர்கள். வேற்றுமைகள்: ஆணான ஸ்டாலினை முடி, முக சர்ஜரி செய்து அழகுபடுத்திக் கொள்ளச் சொன்ன கிஷோர், பெண்ணான மமதாவை அழகுபடுத்திக் கொள்ளச் சொல்லவில்லை. மமதா இந்திக் கூட்டணியிலிருந்து காங்கிரஸைத் தூக்கி எறிந்தார். அந்தக் காங்கிரஸைக் கட்டி அரவணைத்தார் ஸ்டாலின்.

**ந.சண்முகம், திருவண்ணாமலை**

**கே:** 'நான் ஆட்சிக்கு வந்தால் வட இந்தியர்களை திருப்பி அனுப்பி விடுவேன்' என்கிறாரே சீமான்?

**ப:** இங்கு பிளம்பர், தச்சு, கொத்து, கருமார், சர்வர் போன்ற வளர்ச்சிக்கு அத்தியாவசியமான வேலை செய்யும் வடமாநிலத்தவர்களை வெளியேற்றினால், வட மாநிலங்களில் ஏதாவது ஒரு சீமான் கிளம்பி அங்கு உயர்ந்த வேலை, தொழில்களில் இருக்கும் தமிழர்களை வெளியேற்றுவார். இங்கு அவர்களுக்கு பிளம்பர், தச்சு, கொத்து, கருமார், சர்வர் வேலை கொடுப்பார் சீமான்.

**அ.குணசேகரன், புவனகிரி**

**கே:** பணத்திற்காக விலை போகும் வாக்காளர்களுக்கு தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

**ப:** ''உங்கள் ஓட்டுக்கு வேட்பாளர் கொடுக்கும் பணம், உங்களிடமிருந்து கொள்ளை அடித்தது. அதை வாங்கிக் கொள்ளுங்கள். ஆனால் ஓட்டுப் போடாதீர்கள்'' என்று கூறுவேன். ஏன்? ''தர்மம் தவறியவர்களிடம் தர்மப்படி நடக்க வேண்டியதில்லை''

**★ ● ◆- இக்குறியிட்ட கேள்விகள் முறையே 500, 400, 300 - ரூபாய்களைப் பரிசுகளாகப் பெறுகின்றன.**


**சந்தாதாரர்கள் கவனத்திற்கு...**

**சந்தா விவரங்களுக்கு 044 - 45919107 மற்றும் 9840909525 என்ற தொலைபேசி எண்களைத் தொடர்பு கொள்ளவும். இணைய தளத்தில் படிக்க மற்றும் இணைய தளத்துக்கு சந்தா செலுத்த விரும்புவோர்** www.thuglak.com **என்ற இணைய தளத்தைத் தொடர்பு கொள்ளவும்.**



SriKanchi Mahaswami TRUST
vidyamandir
EDUCATE ● ENLIGHTEN ● EMPOWER

# SRI KANCHI MAHASWAMI VIDYA MANDIR

(CBSE AFFILIATED UPTO CLASS – XII)
DR.L.M.SINGHVI VEDA VIDYA PITHAM (Units of SRI KANCHI MAHASWAMI TRUST)
NO. 1, SHANKAR NAGAR, RAJAKILPAKKAM, TAMBARAM EAST, CHENNAI-73. Mobile No: 8870143888, 8870666996
Our website : www.srikanchimahaswamividyamandir.org/ www.srikanchimahaswamividyamandir.edu.in

## CBSE + VEDAM (UNIQUE SCHOOL) SINCE 2011
## FULLY RESIDENTIAL ONLY FOR VEDIC STUDENTS

Sri Kanchi Mahaswami Vidya Mandir is the largest vedic modern educational institution inspired by the philosophy of His Holiness Pujyasri Chandrasekarendra Saraswathi Mahaswamigal of the venerated Sri Kanchi Kamakoti Peetam. It has **180 students** as of date pursuing both CBSE and Vedic education. We are pleased to inform that since the first year viz 2016, we had sent students to the CBSE class X and class XII board examination the Vidya Mandir has registered 100% results. The success of the dual education system needs no further certification.

**Vedam wise strength**

| Vedam | No. of Vidyarthis | No. of Adhyapakars |
|---|---|---|
| Rig | 21 | 2 |
| Yajur | 154 | 8 |
| Sama | 5 | 1 |

**Class wise strength – Dual education alone**

| Class | No. of students | Class | No. of students |
|---|---|---|---|
| III | 4 | VIII | 21 |
| IV | 9 | IX | 21 |
| V | 21 | X | 21 |
| VI | 23 | XI | 19 |
| VII | 25 | XII | 16 |

- " காஞ்சி கோஷ் " - ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 2500 வருட வரலாறு மற்றும் காஞ்சிபுரத்தின் சிறப்புகள் அமையப்பெற்ற நிரந்தர அருங்காட்சியகம் (MUSEUM) உள்ளது
- ஸ்ரீ காமாக்ஷி அம்மன் கோவிலில், பிரதிபௌர்ணமி, பூரம் நட்சத்திர தினத்தில் மாலை 6.00 மணிக்கு தங்கரத உலா நடைபெறும்.
- ஸ்ரீ வாராஹி அம்மனுக்கு பிரதி பஞ்சமி தினத்தில் விசேஷ பூஜை நடைபெறும்.
- பிரதி பிரதோஷ தினத்தில் ஸ்ரீ மகாலிங்க சுவாமி கோவிலில் விசேஷ பூஜை நடைபெறும்.
- மஹா பெரியவாளுக்காக ஒரு பிரத்யேக மண்டபம் அமைக்கப் பெற்று அதில் ஒரு போட்டோ கேலரி மற்றும் பெரியவா உபயோகப்படுத்திய பொருட்கள் பார்வைக்கு உள்ளது. அனுஷ நட்சத்திர தினத்தில் மாலை 6.00மணிக்கு பெரியவா பாதுகைகளுக்கு விஷேஷ பூஜை நடைபெறும்.
- இலட்ச உத்திராட்சத்துடன் கூடிய சிவலிங்கம் உள்ளது.
- ஸ்ரீமதி M.S.சுப்புலக்ஷ்மி அவர்களுக்கு பிரத்யேக சிலையும் போட்டோ கேலரியும் அமைக்கப்பட்டுள்ளது.
- "அனுக்ரஹ வர்ஷா " - மஹாஸ்வாமிகளின் வாழ்க்கை மற்றும் உபதேசங்கள் கொண்ட கண்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

**VEDIC ADMISSION 2024-2025**

Registration is now open for CBSE + VEDAM for the next academic year 2024-2025 for classes III, IV, V, VI & VII (Rig, Yajur) Please contact 9600083203 for registration of Vedic admission.
For more details contact: 9600123327 / 9894555244 / 9600083203 or mail us @ skmsvm.trustoffice@gmail.com / skmsvm.vedicstudentdivision@gmail.com

**பார்வை நேரம் (TEMPLE)**

காலை 8.00 மணி முதல் 10.45 மணி வரை
மாலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை

**அருங்காட்சியகம் (MUSEUM) பார்வை நேரம் :**

பிரதி சனி, ஞாயிறு கிழமைகள் :
மாலை 5.00 மணி முதல் 8.00 மணி வரை

**குறிப்பு :**

மஹா பெரியவா பக்தர்களும், வேத அபிமானிகளும் அவசியம் தரிசிக்க வேண்டிய ஒரு அறிய இடம்

We are able to provide high quality wholesome food to veda vidyarthis. 600 donors with annual contribution of Rs.18000/- can fully take care of the annual Bhojanashala expenses of Rs.1 crore per year. We appeal to the devotees of the Mahaswami of Kanchi and those committed to societal good to participate in the Annadhanam by contributing Rs.18,000/- per annum. One can give in multiples of Rs.1500/- to cover one month's expenditure of a Vidyarthi. All contributions are eligible for exemption u/s 80G of the Income Tax Act, 1961. Details for bank transfer is mentioned below:

**DONATIONS ARE ACCEPTED FOR ANNADHANAM!**

**Cheque/DD shall be drawn favouring "SRI KANCHI MAHASWAMI TRUST"**

| | | |
|---|---|---|
| Account Name | : | Sri Kanchi Mahaswami Trust |
| Type of Account | : | Savings Bank Account |
| Bank Name & Address | : | Indian Bank, King Circle Branch, Mumbai-400 022 |
| Account No. | : | 6091702986 IFSC code : IDIB000K038 |

Visit our website – www.srikanchimahaswamividyamandir.org for online donations. After transfer of funds, please send an e-mail to skmsvm.trustoffice@gmail.com providing address and contact number of the donor and the purpose of contribution.

**Voice of god (7 volumes) spiritual books are available with us for sale in English, Hindi, Telugu, Kannada and Marathi languages.**

For more details contact: E-mail ID: skmsvm.trustoffice@gmail.com / Whatsapp @ 9840772300
Mobile No: 9600123327 / 9894555244

என்கிறார் ஸ்ரீ கிருஷ்ணர். நாணயமில்லாத வேட்பாளரிடம் பணம் வாங்கியதால், நாணயமாக அவருக்கு ஓட்டு போடவேண்டிய அவசியம் இல்லை. அதர்மத்துக்கு அதர்மம்தான் பதில் என்று கிருஷ்ணர் கூறியதை வாக்காளர்கள் கடைப்பிடித்தால்தான், ஓட்டுக்கள் விலை போவது நிற்கும்.

**இரா.வசந்தராசன், கல்லாவி**

**கே:** 'லோக்சபா தேர்தலில் பத்தனம்திட்டா தொகுதியில், பா.ஜ.க. சார்பில் போட்டியிடும் தன் மகன் அனில் அந்தோணி தோல்வி அடைய வேண்டும்' என்று அவரது தந்தையும், முன்னாள் ராணுவ அமைச்சருமான ஏ.கே.அந்தோணி கூறியதாக வந்திருக்கும் செய்தி பற்றி?

**ப:** சோனியா குடும்பத்தை அனில் அந்தோணி எதிர்த்ததால், பாவம், ஏ.கே. அந்தோணி குடும்பமே பிளவுபட்டு விட்டது.

**அ.இரவீந்திரன், மணிகெட்டி பொட்டல்**

**கே:** 'ராஹுல் காந்தி காங்கிரஸ் கட்சியை விட்டு ஒதுங்குவது, கட்சியின் எதிர்காலத்தை மாற்றும்' என்று பிரசாந்த் கிஷோர் கருத்து தெரிவிப்பது பற்றி?

**ப:** ராஹுல் விலகியிருப்பது கட்சியின் எதிர்காலத்தை மாற்றும் என்று மட்டும்தானே கூறுகிறார் பிரசாந்த் கிஷோர். அதற்கு மேல் ஒரு படி சென்று, அப்படி காங்கிரஸ் மாறுவது நம் நாட்டின் எதிர்காலத்துக்கும், ஜனநாயகத்துக்கும் கூட அவசியமானது என்று கூறி வருகிறது துக்ளக்.

**எஸ்.மகாலட்சுமி சிவகுமார், கிச்சிப்பாளையம்**

**கே:** 'விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும். தமிழ் ஈழம் அமைக்க பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும்' என்று வைகோ கோரி இருக்கிறாரே? அவரது கூட்டணியில் உள்ள காங்கிரஸ் இது குறித்து எந்தவித கருத்தும் தெரிவிக்காமல் உள்ளது பற்றி?

**ப:** தேர்தலில் நிற்கும் துரை வைகோ கூட அவர் கூறுவதைக் கண்டு கொள்ளவில்லை. ஈழம், ஈழம் என்று ஒரு காலத்தில் உயிரைவிட்ட தி.மு.க., வைகோ கூறுவதைச் சட்டை செய்யவில்லை. காங்கிரஸ் மட்டும் ஏன் கருத்துக் கூறவேண்டும்?

**ராதா, சென்னை - 4**

**கே:** 'ஸ்டாலினுக்கு சூட்டப்பட்ட புகழாரப் பெயர்களை, அவர் அ.தி.மு.க.வின் பழனிசாமிக்குச் சூட்டி மேடையில் பேசுவதைப் பற்றி... (ஞானசூனியம், தற்குறி, துரோகி,கொத்தடிமை, விஷவாயு, அரசியல் அமாவாசை... என பட்டியல் நீண்டு கொண்டே போகிறது)?

**ப:** ''அண்டங்காக்கா, எருமைத் தோலன், காண்டா மிருகத் தோலன், பனை ஏறி, மரமேறி, நாடான், சாணான், நனைச்ச பனை, கட்டைப் பீடி காமராஜர், கோமாளி ராஜா, அறிவிலி, அலி, வெறுந் தலைவன்'' - இப்படி காமராஜை விமர்சனம் செய்தார் கருணாநிதி. அதைவிட எடப்பாடி பற்றிய ஸ்டாலினுடைய விமர்சனம் மோசமாக இல்லை என்று தோன்றுகிறது.

**மு.பாஸ்கரன், புதுச்சேரி - 3**

**கே:** 'தேசிய கட்சி அந்தஸ்தைத் தக்க வைக்குமா மார்க்ஸிஸ்ட்' என்று ஏ.கே.பாலன் கூறுவது சரியா?

**ப:** கம்யூனிஸ சித்தாந்தப்படி, அதற்கு தேசியம் என்பது குறுகிய மனப்பான்மை. தனித்தனி தேசங்களின் கம்யூனிஸ்ட் கட்சிகள், உலக அமைப்பின் கிளைகள்தான். நம் கம்யூனிஸ்ட் கட்சிகளும் அதுபோன்ற கிளைகளே. சுதந்திர தேசியக் கட்சிகள் அல்ல. இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு தேசியக் கட்சி என்ற அந்தஸ்து போனாலும், எல்லாவற்றிலும் மேலான உலக கம்யூனிஸத்தின் கிளை என்ற விசால அந்தஸ்து தொடருமே.

**மு.தமிழ்ப்பாண்டியன், ஊரப்பாக்கம்**

**கே:** கேள்விகளுக்கு பதில் சொல்லும் சோ - பாணி, குருமூர்த்தி பாணி - இரண்டிற்குமிடையே ரொம்பவும் வித்தியாசம் இருக்கிறதே?

**ப:** சோ பாணியில் சோ மாத்திரமே பதில் கூறமுடியும். வேறு யாராலும் முடியாது. நான் என் பாணியில்தான் பதில் கூறமுடியும். சோ-வின் பன்முகத் திறமை காரணமாக, எனக்கும் சோவுக்கும் எழுதும் பாணியில் ஏராளமான வித்தியாசம் தெரிந்தாலும், சித்தாந்த ரீதியாக ரொம்ப வித்தியாசம் கிடையாது. அதுபோல் எனக்கும், என்னைவிட மிகவும் விஷயமறிந்த அருண் ஷோரிக்கும் இடையே கருத்து வித்தியாசம் மிகவும் குறைவு. நாங்கள் எழுதும் பாணியில் பெரும் வித்தியாசம் இருந்தது.

**எஸ்.ரமேஷ், ஸ்ரீவில்லிபுத்தூர்**

**கே:** கடலூர் பாராளுமன்றத் தொகுதி வேட்பாளர் இயக்குனர் தங்கர்பச்சான், வெற்றி பெறுவார் என்று ஆரூடம் சொன்ன கிளி ஜோஸியர் கைது பற்றி?




**ப:** ஆரூடம் சொன்ன குற்றவாளி கிளிதானே? அதை அல்லவா கைது செய்ய வேண்டும்? அந்தக் கிளிக்கு கடலை வாங்கிக் கொடுத்த குற்றத்துக்காகவா ஜோஸியரைக் கைது செய்தார்கள்? ●

# கடும் போட்டி நிலவும் தொகுதிகளில் சூதாட்டம்

❖ கொங்கு மண்டலத்தில் குறிப்பாக கரூர், நாமக்கல், ஈரோடு, திருப்பூர், கோவை ஆகிய மாவட்டங்களில் எப்போதுமே தேர்தல் நேரத்தில் அரசியல் சூதாட்டம் நடத்தப்படுவதுண்டு. உறவினர்கள், நண்பர்களுக்கிடையே பெட் கட்டுவது மட்டுமின்றி, தொழில் முறையிலான சூதாட்டமும் அந்தப் பகுதியில் சூடு பிடிப்பது வழக்கம். இந்த வேட்பாளர் ஜெயிப்பார்; அந்த வேட்பாளர் தோற்பார். மாநில அளவில் தி.மு.க. கூட்டணிக்கு இத்தனை இடங்கள் வரும்; அ.தி.மு.க. கூட்டணிக்கு இத்தனை இடங்கள் கிடைக்கும்; பா.ஜ.க. கூட்டணி இத்தனை இடங்களில் ஜெயிக்கும் என்று சூதாட்டம் களைக்கட்டும். இந்த முறையும் அதற்கு விதிவிலக்கு இல்லையாம். கடும் போட்டி நிலவும் தொகுதிகளில் இந்த சூதாட்டத்தின் தொகை கன்னாபின்னாவென்று அதிகரித்துள்ளதாம். குறிப்பாக இந்த முறை தமிழகத்திலேயே அதிக அளவிலான சூதாட்ட பணப் புழக்கம், கோயம்புத்தூர் தொகுதியின் மீதே அமைந்திருப்பதாகக் கேள்வி.


சிவசாமி வேலுமணி

❖ தூத்துக்குடி அ.தி.மு.க. வேட்பாளர் சிவசாமி வேலுமணி ஆரம்பத்தில் மிக உற்சாகமாக தேர்தல் களத்திற்கு வந்தாராம். துவக்க நாட்களில் கட்சிக்காரர்களுக்குப் பணம், பூத் கமிட்டிக்கு பணம், ஆரத்தி எடுப்பவர்களுக்கு பணம், அவர் பிரசாரம் செய்கின்ற பகுதிகளில் கூட்டம் காட்டுவதற்காக அழைத்து வரப்படுகிற வாக்காளர்களுக்கு பணம்... என்று வாரி வழங்கினாராம். ஆனால் போகப் போக பல்வேறு தரப்பில் இருந்தும் 'இந்த தொகுதியில் கனிமொழி வெல்வது உறுதி' என்ற வார்த்தைகளைத் தொடர்ந்து கேட்க, கேட்க அதிலும் அ.தி.மு.க. வினரே அப்படி பேசுவதை கேட்டதும் செலவை குறைத்துக் கொண்டாராம். இறுதி நேரத்தில் தி.மு.க. 300 ரூபாய் பணம் கொடுத்தால், நான் 250 ரூபாய் பணம் கொடுப்பேன் என்று கூறிவந்த சிவசாமி வேலுமணி, கடைசி நேரத்தில் பணத்தை எடுக்க மறுத்து விட்டாராம்.


ஆற்றல் அசோக்குமார்

❖ ஈரோடு பகுதியில் அ.தி.மு.க. வேட்பாளராகக் களமிறங்கி இருப்பவர் ஆற்றல் அசோக்குமார். இவர் மொடக்குறிச்சி பா.ஜ.க. எம்.எல்.ஏ. சரஸ்வதியின் மருமகன் ஆவார். அ.தி.மு.க. வேட்பாளர்களிலேயே 500 கோடி ரூபாய்க்கு மேல் சொத்து மதிப்பு காண்பித்த பணக்கார வேட்பாளர் என்று செய்திகளில் அடிபட்டவர் அசோக்குமார். ஆனால் தேர்தல் செலவுகளில் அவர் சுணக்கம் காட்டியதால், ஈரோடு தொகுதிக்கு பொறுப்பாக இருந்த முன்னாள் அமைச்சர்கள் அவரிடம் கொஞ்சம் காரசாரமாகப் பேசியிருக்கிறார்கள்.

இதையடுத்து கோபமடைந்த அசோக்குமார் 'நான் இப்போதே தேர்தல் போட்டியிலிருந்து விலகிக் கொள்கிறேன். உடனே பத்திரிகையாளர்களை அழைத்து நான் வாபஸ் வாங்கும் விஷயத்தை தெரிவித்துக் கொள்கிறேன்' என்று பதிலுக்கு எகிறி விட்டாராம். பின்னர் வேறு சில முன்னாள் அமைச்சர்கள் இந்த விஷயத்தில் தலையிட்டு, அசோக்குமாரை சமாதானம் செய்துள்ளனர். இதனால் ஈரோடு தொகுதியில் இறுதிக்கட்ட தேர்தல் பணிகளில், அ.தி.மு.க.வினர் பெரிய அளவில் ஈடுபாடு காட்டவில்லை என்று கூறப்படுகிறது. 'அ.தி.மு.க. உறுதியாக ஜெயிக்கக் கூடிய இந்த தொகுதியில் அசோக்குமார் தோல்வியடைந்தால், அதற்கு முழுமுதற் காரணம் அவராகவே இருப்பார்' என்றார் ஈரோட்டை சேர்ந்த அ.தி.மு.க. பிரமுகர் ஒருவர்.

❖ கிருஷ்ணகிரி பகுதியில் நாம் தமிழர் கட்சி வேட்பாளராக களம் இறக்கப்பட்டிருப்பவர் வித்யா ராணி வீரப்பன். இவர் சந்தன கடத்தல் வீரப்பனின் மகள் ஆவார். சிறிது காலம் பா.ஜ.க.வில் இருந்தவர், தற்போது நாம் தமிழர் கட்சியில் சேர்ந்து கிருஷ்ணகிரி வேட்பாளராக நிற்கிறார். இங்கு போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் கோபிநாத், அ.தி.மு.க. வேட்பாளர் ஜெயபிரகாஷ், பா.ஜ.க. வேட்பாளர் நரசிம்மன் ஆகிய மூவருமே தெலுங்கு, கன்னடம் என்று பிற மொழியை தாய்மொழியாகக் கொண்டவர்கள். எனவே தமிழை தாய் மொழியாகக் கொண்டவர் வித்யா ராணி மட்டுமே என்றொரு பிரசாரம் அங்கே மறைமுகமாக நடத்தப்பட்டுள்ளது. மேலும் வன்னிய சமூகத்தினர் இங்கு கணிசமாக உள்ளதால் 'நமது மாவீரனின் புதல்வி' என்ற பிரசாரமும் அச்சமூகத்தினர் மத்தியில் வைக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழகத்திலேயே நாம் தமிழர் கட்சி அதிக வாக்குகளைப் பெறும் தொகுதியாக கிருஷ்ணகிரி இருக்கும் என்று ஒரு பேச்சு இருக்கிறது.


வித்யா ராணி

**–எஸ்.ஜே.இதயா**

# தொடரும் வன்முறை கலாசாரம்

'2024 நாடாளுமன்றத் தேர்தலில் பிராமணர்கள் அனைவரும் கட்டாயம் வாக்களிக்க வேண்டும்' என்று வேண்டுகோள் விடுத்த சீதாராமன் என்பவர் சிலரால் தாக்கப்பட்டுள்ளார். தஞ்சை மாவட்டம் சாலியமங்கலம் அருகில் உள்ள களஞ்சேரி என்ற கிராமத்தில் வேதபாடசாலை நடத்தி வருபவர் சீதாராமன். 'வரும் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும். தி.மு.க.வை தோற்கடிக்க வேண்டும்' என்று தனது வாட்ஸ்அப் குரூப்பில் ஆடியோ பதிவிட்ட சீதாராமனை, சிலர் (14.4.2024) தாக்கியுள்ளனர். இது குறித்து அறிய களஞ்சேரியில் ஸ்ரீவேத வித்யா குருகுலம் (களஞ்சேரி வேத பாடசாலை) நடத்தி வரும் சீதாராமனை சந்தித்துப் பேசினேன்.



சீதாராமன்

**ஜி.கே.சீதாராமன் கூறியது:** ''பொதுவாகத் தேர்தல் நாளன்று லீவு கிடைத்தால் கோயில், குளம்னு சுற்ற போய் விடுகிறார்கள். 2024 தேர்தலில் அனைவரும் (பிராமணர்கள்) வாக்களிக்க வேண்டும் என்பது எனது விருப்பமாக இருந்தது. அதற்காக எனது வாட்ஸ்அப் குரூப்பில் ஆடியோ ஒன்றை போட்டேன். நாம் முழுமையாக வாக்களிக்க வேண்டும். இப்போதும் தெய்வ நிந்தனைகள் தொடர்கிறது. பிராமணர்களுக்கு செருப்பு மாலை போட்டதால்தான் ஜெயித்தேன் என்று பேசுகிறார்கள். கோவிலை இடிக்கிறார்கள். காறி துப்புகிறார்கள். தேவதைகளுக்கு நல்லது செய்ய விட மாட்டேன் என்கிறார்கள்.

''வேறு மதத்தை பிரசாரம் செய்கிறார்கள். சம்பந்தம் இல்லாத கலாசாரத்தைப் புகுத்துகிறார்கள். பணத்தால் ஓட்டை வாங்கி மந்திரி ஆகிறார்கள். பொய்யும் புளுகும் பேசுகிறார்கள். இம்சைகள் தொடர்கிறது. எனவே இவை எல்லாம் மாற தாமரை சின்னத்தில் ஓட்டுப் போடுங்கள். நம்மில் சிலர் காசு பணத்திற்காக செயல்படுகிறார்கள். அதுபோல செய்யக் கூடாது. ராட்சஸ குணம் மாற வேண்டும்! என்று பேசிய ஆடியோவை வாட்ஸ்அப் குரூப்பில் போட்டேன். 35,000 பேர்களுக்கு இந்த ஆடியோ சென்றது. இதற்கு நல்ல ரெஸ்பான்ஸ் இருந்தது (இந்த வாட்ஸ்அப் குரூப் முடக்கப்பட்டுள்ளது)'' என்றார்.

இந்நிலையில் வாக்கிங் சென்ற போது சிலர் தாக்கிய சம்பவம் பற்றி சீதாராமன் கூறியது: ''காலையில் ஆற்றங்கரையோரம் வாக்கிங் சென்று திரும்பும்போது பைக்கில் வந்த இருவர், 'நீதான் சீதாராமனா?' என்று பேசியபடி தலையில் தாக்கினர். பின்பு அருகில் இருந்த புதருக்குள் இழுத்துச் சென்று வயிற்றில், உயிர்நிலையில் எட்டி உதைத்தனர். போதையில் இருந்த ஒருவர் அடித்தார். இன்னொருவர் அதை தடுத்தார். தலைவர் வார்ன் மட்டும் தான் பண்ணச் சொன்னார் என்று ஒருவர் சொல்ல, இன்னும் பத்து நாளைக்கு வாயை பொத்திட்டு இருக்கணும் என்று சொல்லியபடி சென்றனர்.



ஸ்ரீவேத வித்யா குருகுல மாணவர்கள்...

'நிலைகுலைந்து போன நான், எனது உறவினர்களுக்கு ஃபோன் செய்தேன். அதற்குள் அங்கிருந்த ஊர் மக்கள் ஐயருக்கு என்ன ஆனது? என்று ஒன்று கூடினர். அம்மாப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேன்'' என்றார்.

சீதாராமன் தாக்கப்பட்ட சம்பவம் அறிந்த களஞ்சேரி மக்கள், வேத பாடசாலையில் ஒன்று கூடினர். வேத பாடசாலையில் 40 - க்கும் மேற்பட்ட மாணவர்கள் வேதம் பயில்கின்றனர். களஞ்சேரியில் உள்ள மக்களுக்கு சீதாராமன் பல்வேறு சேவைகளைச் செய்துள்ளார். விவசாயமும் செய்து வருகிறார். முதியோர் இல்லம் நடத்தி வருகிறார். 'சனாதன தர்மம் தழைக்க வேண்டும். தெய்வ நிந்தனைகள் ஒழிக்கப்பட வேண்டும். தாமரை மலர வேண்டும்' என்பது சீதாராமனின் விருப்பம். மர்ம நபர்களால் தாக்கப்பட்ட சீதாராமனை ஹிந்து அமைப்பைச் சேர்ந்தவர்கள் சந்தித்து ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

'ராட்சஸன்' என்கிற வார்த்தை சிலருக்கு கோபத்தை ஏற்படுத்தியிருக்கலாம் என்று பார்க்கப்படுகிறது. வி.சி.க.வைச் சேர்ந்தவர்கள் இந்த செயலில் ஈடுபட்டிருக்கலாம் என்று ஊரில் சிலர் சந்தேகிக்கின்றனர். 2006 - ல் அ.தி.மு.க. கூட்டணியில் வைகோ இருந்தார். தி.மு.க.விற்கு எதிராக மிகத் தீவிரமாக பிரசாரம் செய்தார். 2006 தேர்தல் முடிவுகள் வெளியான நிலையில் சென்னையில் வைகோ வீடு தாக்கப்பட்டது. பட்டாசு வெடித்து வைகோ பயமுறுத்தப்பட்டார். தி.மு.க.வை எதிர்ப்பவர்களுக்கு இது போன்ற படங்கள் காட்டப்படுகின்றன. அது களஞ்சேரியிலும் தொடர்கிறது. பிராமணர்கள் மீது கை வைத்தால், சர்வ நாசம் ஏற்படும் என களஞ்சேரியில் உள்ள மக்கள் கூறினர். சமூக சேவகர், மக்களுடன் தொடர்பில் இருப்பவர் சீதாராமன். வாட்ஸ்அப் குரூப்பை முடக்கியது ஏன் என்று தெரியவில்லை.



**- எஸ்.பி.சண்முகம்**

# தமிழக - புதுச்சேரி இணைப்பு சாத்தியமா?

தமிழ்நாட்டு அரசியலில் அவ்வப்போது பேசப்படும் விஷயங்கள் என்று சில உண்டு. முன்பு காவிரிப் பிரச்னையைப் பற்றிப் பேசிப்பேசி மாய்ந்து போன காலம் ஒன்றிருந்தது. அது ஒரு முடிவுக்கு வந்து விட்டாலும், தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் காலங்களில் காவிரி பிரச்னை மீண்டும் விஸ்வரூபம் எடுக்கும். இப்போது அதைப் பற்றி யாரும் அவ்வளவாகப் பேசுவதில்லை. இது தவிர, தமிழக அரசியல்வாதிகள் திடீர் திடீரென்று சேதுசமுத்திரத் திட்டம் என்பார்கள். சேது சமுத்திரத் திட்டம் சாத்தியமில்லை என்று ஆனபிறகு அதைப் பற்றியும் பேச்சு குறைந்து விட்டது. இருக்கவே இருக்கிறது. கச்சத் தீவு விவகாரம். இதுவும், தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை கொளுத்திப் போட்டதால் அண்மையில் பற்றி எரிந்தது. இது போல் பேசப்படும் விஷயங்களில் ஒன்றுதான் புதுச்சேரி (பாண்டிச்சேரி என்பது பழைய பெயர்)யை தமிழ்நாட்டுடன் இணைப்பது பற்றிய பேச்சும்.




சில தினங்களுக்கு முன் ஹிந்துவில் வெளிவந்த பேட்டியில் என்.ஆர். காங்கிரஸ் தலைவரும், புதுச்சேரி முதல்வருமான ரங்கசாமி, புதுச்சேரியை தமிழ்நாட்டுடன் இணைக்க வேண்டும் என்று மீண்டும் கூறியிருக்கிறார். புதுச்சேரி, இந்தியாவின் எட்டு யூனியன் பிரதேசங்களில் ஒன்றாக இருக்கிறது. முன்பெல்லாம் சில புதுச்சேரி அரசியல்வாதிகள், 'புதுச்சேரி மத்திய அரசின் மேற்பார்வையிலேயே தொடர்ந்து இருக்க வேண்டும். அப்போதுதான் மத்திய அரசின் நிதி புதுச்சேரிக்கு கிடைத்து, புதுச்சேரி வளம் பெறும்' என்று கூறி வந்தார்கள். இப்போது புதுச்சேரி முதல்வரான என்.ஆர்.ரங்கசாமியே புதுச்சேரியைத் தமிழகத்துடன் இணைக்க வேண்டும் என்று கூறுகிற அளவுக்கு காலம் மாறியிருக்கிறது.

டெல்லி, சண்டிகர் போன்ற யூனியன் பகுதிகளெல்லாம் ஒரே நிலப்பகுதிக்குள் அமைந்தவை. ஆனால் புதுச்சேரியின் விவகாரம் அப்படியல்ல. புதுச்சேரியைச் சேர்ந்த 'மாஹி' என்ற ஒன்பது சதுர கிலோமீட்டர் கொண்ட நிலப்பரப்பு கேரளாவில் மய்யழி ஆற்றின் கரையில் உள்ளது. இதுபோல் 'ஏனாம்' என்ற சிறு நிலப்பரப்பு ஆந்திர மாநிலத்தில் உள்ளது. ஆந்திராவிலுள்ள கோதாவரி ஆற்றின் முகத் துவாரப் பகுதியில் உள்ளது. இவை தவிர, தமிழ்நாட்டுக்குள்ளேயே இருக்கும் காரைக்காலும் புதுச்சேரியைச் சேர்ந்ததுதான். இப்படி புதுச்சேரி யூனியன் பிரதேசம் என்பது புதுச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனாம் என்ற தனித்தனி நிலப்பகுதிகளாக உள்ளன.

இன்றைக்கும் புதுச்சேரி மக்கள் மத்தியில், புதுச்சேரி தனி யூனியன் பிரதேசமாகவே தொடர வேண்டும் என்றும், புதுச்சேரி தமிழ்நாட்டுடன் இணைய வேண்டும்' என்றும் இரண்டு விதமான கருத்துக்கள் நிலவுகின்றன. புதுச்சேரி தமிழ்நாட்டுடன் இணைய வேண்டுமா, வேண்டாமா என்பது பற்றி வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று கூட ஒரு காலத்தில் கூறப்பட்டது.

புதுச்சேரியைத் தமிழ்நாட்டுடன் இணைக்க வேண்டும் என்றால், இதற்கு அரசியல் கட்சிகள் மட்டும் இதைப் பேசினால் போதாது. மத்தியில் பெரும்பான்மை பெறும் ஆளும் கட்சி, நாடாளுமன்றத்தில் இதற்கு மஸோதா கொண்டு வந்து அதைச் சட்டமாக்க வகை செய்ய வேண்டும். தற்போது மத்தியில் ஆளும் கட்சியாக இருக்கும் பா.ஜ.க., புதுச்சேரி குறித்து என்ன நிலைப்பாடு கொண்டுள்ளது என்பது தெரியவில்லை. மீண்டும் பா.ஜ.க. மத்தியில் ஆட்சியைப் பிடித்தால், புதுச்சேரி - தமிழ்நாடு இணைப்பு குறித்து ஏதேனும் முடிவெடுக்குமா என்பது பற்றியும் தெளிவில்லை. புதுச்சேரி, காரைக்கால் இரண்டையும் தமிழ்நாட்டுடன் இணைத்து விடலாம். ஆனால் மாஹி, ஏனாம் பகுதிகளின் நிலை என்னவாகும்? இவை கேரளாவுடனும், ஆந்திராவுடனும் இணைக்கப்படுமா என்றெல்லாம் கேள்விகள் எழுகின்றன.

புதுச்சேரி அரசியல் கட்சிகள் இணைப்புப் பற்றிப் பேசுவது போல், சண்டிகர் மக்கள் 'நாங்கள் பஞ்சாபுடன் இணைவோம்' என்றோ, டெல்லி மக்கள் 'நாங்கள் உ.பி.யுடன் இணைவோம்' என்றோ கூற ஆரம்பித்தால் என்ன ஆவது? இவை தவிர தாத்ரா நாகர் ஹவேலி, டாமன், டையு போன்ற யூனியன் பிரதேசங்களும் அருகிலுள்ள மாநிலத்துடன் இணைவோம் என்று கூறலாமே? யூனியன் பிரதேசமாக இருந்த கோவா, தனி மாநிலமானது ஒரு தனிக்கதை. பல மாநிலங்களில் துண்டுபட்டுக் கிடக்கும் புதுச்சேரி இணைப்பில் உள்ள பிரச்னைகளைப் பார்க்கும்போது, அது தனித்திருப்பதே இன்றைய நிலையில் பொருத்தமானது என்று படுகிறது.



**– சந்திரன்**

# மஹாராஷ்டிரம்

## – வித்தியாசமான தேர்தல் களம்

மிக அதிக அளவில் (80) தொகுதிகளைக் கொண்ட உத்தரப் பிரதேசத்துக்கு அடுத்தாற்போல, 48 மக்களவைத் தொகுதிகளைக் கொண்ட மஹாராஷ்டிர மாநிலத்தின் தேர்தலை அரசியல் நோக்கர்கள் உற்றுப் பார்ப்பதில் ஆச்சரியம் ஏதும் இல்லை. 2014, 2019 தேர்தல்களில் மோடி செய்த சாதனையே இந்தத் தடவையும் நீடிக்குமா?

பா.ஜ.க.வும், சிவசேனாவும் இணைந்து 2019 தேர்தலில் 41 இடங்களைக் கைப்பற்றி, சாதனை படைத்தது. பவாரின் தேசியவாத காங்கிரஸ் 5 இடங்களிலும், காங்கிரஸ் ஒரே ஒரு இடத்திலும் வென்றன. ஒவைசியின் கட்சி, அது போட்டியிட்ட ஔரங்காபாதில் வெற்றி பெற்றது. வஞ்சித் பஹுஜன் ஆகாடி (விபிஏ) என்ற கட்சி ஒரு இடத்தில் கூட வெல்ல முடியவில்லை. ஆனால், பல தொகுதிகளில் அது இரண்டாவது அல்லது மூன்றாவது இடத்தைப் பிடித்தது. 17 தொகுதிகளில் அதன் வேட்பாளர்கள் 80 ஆயிரத்துக்கும் மேலான வாக்குகளைப் பெற்றார்கள். இதனால் அப்போது பாதிக்கப்பட்டது காங்கிரஸ்தான். சுஷில் குமார் ஷிண்டே, அஷோக் சவான் ஆகிய முன்னாள் முதலமைச்சர்கள் உட்பட, அதன் 9 வேட்பாளர்கள் மண்ணைக் கவ்வுவதற்கு வஞ்சித் கட்சிதான் காரணம். அப்போது, காங்கிரஸ்-பவார் கட்சிகள், வஞ்சித் கட்சி, பா.ஜ.க.வின் பி டீம் என்றும், தங்களைத் தோற்கடிப்பதற்காக வஞ்சித் கட்சியுடன் பா.ஜ.க. ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதாகவும் ஆதாரமற்ற குற்றச்சாட்டைச் சுமத்தினார்கள்.

டாக்டர் அம்பேத்கரின் பேரனான பிரகாஷ் அம்பேத்கரின் தலைமையில் இயங்கும் வஞ்சித் கட்சி, தலித், பழங்குடி, டங்கார், கோலி, பஞ்சாரா போன்ற பல பிரிவு மக்களின் நலனுக்காக 2018-ல் அமைக்கப்பட்டது. பெரிய கட்சிகளைக் கலைக்க வல்ல சிறிய கட்சிகள் தோன்றி மறையும் வரலாறு மஹாராஷ்டிராவுக்கு உண்டு. இந்தத் தடவையும் இது நடக்கலாம். இரு கூட்டணிகள் ஒன்றுக்கொன்று மோதும் களத்தை வஞ்சித் கட்சி மும்முனைப் போட்டிக்களமாக மாற்றியுள்ளது.

சிவசேனாவிலும், தேசியவாதக் காங்கிரஸ் கட்சியிலும் பிளவு ஏற்பட்டுள்ள சூழலில் வஞ்சித் கட்சி, இந்த இரு கூட்டணிகளுக்கும் சவாலாக இருக்குமோ என்ற கேள்வியும் எழுந்துள்ளது. காங்கிரஸ் கப்பலில் இருந்து, பலரும் வெளியேறி விட்டார்கள். சரத் பவாரின் தேசியவாத காங்கிரஸ், சிவசேனா கட்சிகள் பிளவுபட்ட பிறகு அவற்றின் ஆதரவு எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது, இந்தத் தேர்தலில்தான் தெரியவரும்.

சமையல் எரிவாயு சிலிண்டர் சின்னத்துடன் போட்டியிடும் வஞ்சித், இந்தத் தேர்தலிலும் தங்களது வாய்ப்புக்களைக் குலைக்கக் கூடும் என்பதை உத்தவ் தாக்கரே உணர்ந்தார். ஆதலால் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸுடன் வஞ்சித் கட்சிக்கு இருந்த பகையைப் போக்குவதற்காக, மகா விகாஸ் ஆகாடியுடன் வஞ்சித் கட்சியைச் சேர்த்து வைக்க முயற்சி மேற்கொண்டார். தொகுதிப் பங்கீட்டுக்காக அண்மையில் நடந்த பேச்சுக்களில் பிரகாஷ் அம்பேத்கரும், அவரது ஒரு பிரதிநிதியும் கலந்து கொண்டார்கள். ஆனால் உடன்பாடு எட்ட முடியவில்லை. வஞ்சித் கட்சிக்கு வெறும் இரண்டே இடம் மட்டுமே கொடுக்க முன் வந்தார்கள். பிரகாஷ் அம்பேத்கர், அதிக இடங்களைக் கேட்டார். அத்துடன், அவர் வைத்த பல நிபந்தனைகளை, மகா விகாஸ் ஆகாடி ஏற்றுக் கொள்ளவில்லை. பேச்சுக்கள் முறிந்தன. பிரகாஷ் அம்பேத்கர், தனியாக வேட்பாளர்களை அறிவித்தார்.

வஞ்சித் கட்சி, கூட்டணியில் இணைய மறுத்தது, எதிர்க்கட்சிக் கூட்டணியின் சவால்களை அதிகமாக்கியுள்ளது. இது, பா.ஜ.க.வுக்குச் சாதகமான சூழலைத் தோற்றுவித்திருக்கிறது.

சரத் பவாருக்கும் சரி, உத்தவ் தாக்கரேவுக்கும் சரி, இந்தத் தேர்தல் ஒரு பெரிய சவால் என்பதில் ஐயமில்லை. எப்படியாவது தங்கள் நிலையை மக்களிடம் எடுத்துச் செல்ல அவர்கள் படாதபாடு படுகிறார்கள். இந்தத் தேர்தல் அவர்களின் அரசியல் வருங்காலத்தை தீர்மானிக்கப் போகிறது. அத்துடன், அடுத்த ஒரு சில மாதங்களில் நடைபெறவிருக்கும் சட்டப் பேரவைத் தேர்தலிலும் இதன் தாக்கம் இருக்கத்தான் போகிறது.

தேசிய அரசியல் களத்தில் மோடி பிரவேசித்து, நாட்டின் முக்கிய தலைவரான பிறகு ஏற்பட்டுள்ள மாற்றம், மஹாராஷ்டிராவில் உள்ளங்கை நெல்லிக்கனி போல தெரிகிறது. காங்கிரஸ் கட்சி, எந்த சவாலும் இன்றி கோலோச்சிக் கொண்டிருந்த அந்த மாநிலத்தில், இப்போது அந்தக் கட்சிக்கு ஒரு மக்களவை உறுப்பினர் கூட இல்லை. (2019-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட பாலு தனோர்கர் சென்ற ஆண்டு உயிரிழந்தார்.)

ஆம், மஹாராஷ்டிரத் தேர்தல் களம் 2019 -ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, அடையாளம் தெரியாமல் மாறிவிட்டது. கட்சிகள் உடைந்தன. தலைவர்கள் பல கட்சிகளுக்குப் போனார்கள், பா.ஜ.க.வைத் தவிர. 2019-ல் 23 இடங்களை வென்ற பா.ஜ.க., இப்போது இரு வலிமையான சகாக்களுடன் களம் காண்கிறது. மோடியின் வெற்றி இந்தத் தேர்தலிலும் தொடரும் என்பதே பல அரசியல் நோக்கர்களின் கருத்து.



**–ஹெச்.ராமகிருஷ்ணன்**

# 'கனவு மெய்ப்படுகிறது'

'நாங்கள் மத்தியில் ஆட்சி அமைத்தால் திருக்குறளைத் தேசிய நூல் என அறிவிப்போம்' என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது கட்சிக்கான தேர்தல் அறிக்கையில் கூறியுள்ளார். முதலமைச்சர் பல கட்சிகளின் கூட்டமைப்பின் ஓர் அங்கம். அந்தக் கட்சிகளிடம் திருக்குறளைத் தேசிய நூலாக அறிவிப்போம் என்பதற்கான ஒப்புதலைப் பெற்றுள்ளாரா என்று தெரியவில்லை.



தவத்திரு குன்றக்குடி அடிகளார்

இது தொடர்பாக ஓர் அனுபவத்தைச் சொல்கிறேன்.

மறைந்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் 1973 - ஆம் ஆண்டில் 'திருக்குறள் பேரவை' என்னும் ஓர் அமைப்பினைத் தொடங்கினார்கள்.

அடிகளாரோடு நீண்ட காலம் பயணித்தவன் நான். திருக்குறள் பேரவை சார்பில் ஆண்டுதோறும் மாநாடு நடைபெறும். அம்மாநாட்டில் ''திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க வேண்டும் என இந்த மாநாடு மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது'' என்று ஓர் தீர்மானம் நிறைவேற்றப்படும்.

அந்தத் தீர்மானத்தின் இன்றியமையாமையை வலியுறுத்திப் பேசுபவனாகப் பெரும்பாலும் நான்தான் இருப்பேன்.

''எல்லா நூல்களிலும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் அவரது இயல்பு'' எனத் திருவள்ளுவர் குறித்துத் துல்லியமாகக் கணித்துக் கூறியுள்ள பரிமேலழகர் கருத்தையே மையமாக வைத்துப் பேசுவேன். பின்னர் அடிகளார் அவர்கள் மிக அருமையாக அதனை விளக்கிக் கூறுவார்.

இந்தத் தீர்மானம் குறித்து மத்திய அரசிடம் பல வகைகளில் வேண்டுதல் வைக்கப்பட்டது. ''உலகின் எந்த நாட்டிலாவது அந்த நாட்டுக்குரிய தேசிய நூல் இது என அறிவிக்கப்பட்டுள்ளதா? இருந்தால் விவரம் தரவும்'' என மத்திய அரசிடமிருந்து கடிதம் வந்தது.

அந்த வகையில் இருப்பதாக ஏதும் தெரியவில்லை. உலகின் பல நாடுகளில் அந்த நாடுகளின் சமய நூல்களே தேசிய நூல்களாக அறியப்படுகின்றன. நமது இந்தியா அப்படிப்பட்டதன்று. பாரத நாட்டில் இருக்கும் எல்லாச் சமயங்களையும், மொழிகளையும், மாநிலங்களையும், மக்களின் கடவுள் நம்பிக்கையையும், நில அமைப்பு வேறுபாடுகளையும் உள்ளடக்கி இந்திய மக்களை இணைக்கும் நூல் திருக்குறள். மேலும் சொல்லப் போனால் மனித குலத்தை வேறுபடுத்திப் பகைமை வளர்க்கும் எந்த ஒரு கொள்கையையும் திருக்குறள் ஏற்கவில்லை. அதனால்தான் பாரதியார் ''வள்ளுவன்தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'' என்கிறார் எனப் பதில் எழுதியதுடன், திருக்குறள் உலகப் பொதுமறை என்றும் வலியுறுத்தினார் அடிகளார்.

திருக்குறளை உலகப் பொதுமறை என்று கூறக் கூடாது. திருவள்ளுவர் மனிதர். ஒரு மனிதரின் வாக்குப் பொதுமறை ஆகாது, இறைவன் வாக்கே பொதுமறை எனப்படும். அந்தப் பொதுமறை 'திருக்குரானே' என்று ஓர் இஸ்லாமிய அறிஞர் நூல் எழுதி அடிகளாரைக் கண்டித்தார். அதனை இத்துடன் நிறுத்தி அடுத்த செய்திக்குச் செல்கிறேன்.



ஆபிரகாம் லிங்கன்

'இது பொதுமக்கள் கருத்து, மக்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள்' என்ற போர்வையில் சில தலைவர்கள் எடுக்கும் முடிவுகள், நாட்டிற்கு எதிரானவை எனத் திடமாக நம்பும் உறுதிப்பாடுடைய தலைவர்களால், நாடுகள் காப்பாற்றப்பட்டுள்ளன என்பதற்கு வரலாற்றில் நிரம்ப இடமிருக்கிறது.

உதாரணத்திற்கு இரண்டு.

ஜனநாயகத்தின் இருப்பிடம் அமெரிக்கா. ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க அதிபராக இருந்த காலம். ஆஃபிரிக்க நீக்ரோ இன மக்கள் ஆடு, மாடுகட்குக் கீழாக அடிமைகளாக விலைக்கு வாங்கி விற்கப்படும் காலம்.

அடிமை முறை மனித மாண்பிற்கும், தர்மத்திற்கும் விரோதமானது என ஆபிரகாம் லிங்கன் அதற்கு எதிராகச் சட்டம் இயற்றினார். இதனால் கோபப்பட்ட தெற்கு அமெரிக்க ராஜ்யங்களின் தலைவர்கள், நாங்கள் பிரிந்து போகிறோம் எனப் போர்க்கொடி உயர்த்தினர். உள்நாட்டுப் போர் மூண்டது.

லிங்கன் அசரவில்லை. அரைகுறை அடிமைத்தனத்திற்காகச் சமரசம் செய்து கொள்ள வில்லை. விட்டுக் கொடுக்காமல் இந்த ஒரு காரணத்திற்காகப் பிரிந்து போக முடியாது எனக் கூறிப் போரிட்டார். இறுதியில் மனித குலத்தின் மாண்பினைக் காப்பாற்றினார். தலைவனுக்குரிய தனித்தன்மையை நிலை நாட்டினார். இன்று அமெ

ரிக்கா தலை நிமிர்ந்து நிற்பதற்குக் காரணமானார்.

இரண்டாம் உலகப் போரில் ஹிட்லரிடம் ஃபிரான்ஸ் வீழ்ந்தது. ஃபிரான்ஸின் அப்போதைய பிரதமர் மார்ஷல் பெடெய்ன் சரணாகதி அடைய நிச்சயித்தார். மக்கள் ஆதரித்தனர். மக்கள் ஆதரித்தனர் என்றால் அவர்களை வழிநடத்தும் தலைவர்கள் ஆதரித்தனர் என்பது பொருள். ஆனால் சார்லஸ் டிகால் தப்பிச் சென்று லண்டனிலிருந்து கொண்டு பிரெஞ்சு அரசு என்ற பெயரில் போரிட்டு இறுதியில் ஃபிரான்ஸை விடுவித்தார்.

பெரும்பான்மையோர் முடிவு என்பது பொய்த்துப் போனது. போர்ச்சுக்கீசியரே ஆளட்டும் என்று நமது கோவாவில் குரல் எழுப்பப்பட்டது, ஹைதராபாத் மக்கள் விருப்பம் இந்தியா பக்கம் இல்லை என்று நிஜாம் குரல் எழுப்பினார். என்னவாயிற்று? உறுதியான தலைமை வென்றது.

யாராலும் செய்ய முடியாது என்று மக்கள் பெயரால் (மதத்தை முன்னிறுத்தி) சொல்லிக் கொண்டு, தாங்கள் தனிக்காட்டு ராஜாக்களாக உலவி வந்த தலைவர்களை எதிர்த்து, லிங்கன் போன்று பலவற்றைச் சட்டத்தின் துணை கொண்டு அவர்களை பாரதப் பிரதமர் மோடி வெற்றி கொள்ளவில்லையா? நம் கண் முன் நடக்கும் காட்சிதானே!

அத்தைக்கு மீசை முளைக்கட்டும், அப்போது பார்க்கிறேன் என்கிறார் முதலமைச்சர்; அப்பாவாக, பெரியப்பாவாக, சித்தப்பாவாக மூன்று அப்பாக்களாகவும் ஓர் உருவமாக மோடி இருக்கும்போது, திருக்குறள் இந்திய தேசிய நூலாக மட்டும் அல்லாமல் சர்வ தேச நூலாகவும் மாறும் காலம் நெருங்கி விட்டது.

அடிகளார், ம.பொ.சி. முதலான தலைவர்கள் கண்ட கனவு மெய்ப்படுகிறது. அந்தக் காலத்தைக் காணத்தான் போகிறோம். பேருந்தில் துண்டு போட்டு இடம் பிடிக்க நினைக்கும் முதலமைச்சரும் காண்பார்.

**–முனைவர். சாமி. தியாகராசன்**

# புத்தக விமர்சனம்


**நூல்: அவஸ்தையோ அவஸ்தை! ஆசிரியர்: எஸ். எல்.நாணு. பக்கம்: 214. விலை: ரூ.190/-. வெளியீடு: அல்லயன்ஸ் கம்பெனி, 64, ராமகிருஷ்ணா மடம் சாலை, மயிலாப்பூர், சென்னை - 4. ஃபோன்: 044 - 24641314, செல்: 9289281314**

காத்தாடி ராமமூர்த்தி நாடகக் குழுவின் முக்கியஸ்தரான இந்நூலாசிரியர், நாடக நடிகராக மட்டுமின்றி, 28 மேடை நாடகங்கள், நான்கு தொலைக்காட்சித் தொடர்கள், நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், ஏழு குறுநாவல்கள், இரண்டு நாவல்கள்... என்று எழுத்துலகில் இயங்கிக் கொண்டிருக்கிறார். இந்நூலில் இவர் எழுதிய ஒரு சிறுகதையும், நான்கு குறு நாவல்களும் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூலில் முதலில் வரும் சிறுகதைதான் 'அவஸ்தையோ அவஸ்தை! ஒரு ஃபிளாட்டில் வசிக்கும் ஒரு குடும்பத் தலைவரின் அவஸ்தையே, நகைச்சுவை பாணியில் இயற்றப்பட்டுள்ளது. வீட்டின் சமையலறையில், கிழக்கு மூலையில் தான் சமையல் அடுப்பு வைக்கப்படும். ஆனால் இந்த ஃபிளாட்டில் தெற்கு பார்த்து இருப்பதால், அதை மாற்றி அமைக்கும்படி குடும்பத் தலைவி வற்புறுத்துகிறார். குடும்பத் தலைவரோ குறைந்த சம்பளத்தில் பணிபுரியும் வங்கி ஊழியர். இவர் இந்த ரெனவேஷனுக்குப் போடும் பட்ஜெட் ஒன்று அல்லது ஒன்றரை லட்சம் ரூபாய்தான். ஆனால் இதைச் சரிப்படுத்தும் கான்ட்ராக்டர் சுமார் ரூ.7 லட்சம் வரை கணக்குப் போடுகிறார். இதற்காக குடும்பத் தலைவர் எப்படியெல்லாம் அவஸ்தைப்படுகிறார் என்பதை 80 பக்கங்களுக்கு மேல் நகைச்சுவை கலந்து இக்கதை விவரிக்கப்படுவது, வாசகர்களை திரும்பத் திரும்ப படிக்கத் தூண்டும். இது போல இந்நூலில் உள்ள மற்ற நான்கு குறுநாவல்களும் க்ரைம், திரில்லர், சோஷியல்... என்று வேறு வேறு வகையில் அமைந்துள்ளதும் சிறப்பானது.




**நூல்: சிந்திய குருதியில் வந்த சுதந்திரம். ஆசிரியர்: கவிஞர் பாரதன். பக்கம்: 192. விலை: ரூ.190/-. வெளியீடு: நேஷனல் பப்ளிஷர்ஸ், 2, வடக்கு உஸ்மான் சாலை, முதல் மாடி, தி.நகர், சென்னை - 17. ஃபோன்: 044 - 28343385. செல்: 9444047786.**

காந்திய சிந்தனையாளரும், சமய நல்லிணக்கவாதியும், பட்டிமன்ற நடுவருமான இந்நூலாசிரியர், இதுவரை 15 நூல்களுக்கு மேல் எழுதியுள்ளார். இது தவிர 'யூடியூப் சேனலில்' 'சும்மாவா வந்தது சுதந்திரம்' என்ற தலைப்பில் நமக்கு சுதந்திரம் எப்படி கிடைத்தது என்பதை இன்றைய தலைமுறையினருக்கு எடுத்துரைத்து வருகிறார். இந்நூலிலும் நாம் சுதந்திரம் அடைந்தது காந்திஜியின் அஹிம்சை வழியில்தான் என்றாலும், அதிலும் நமது போராளிகள் பலர் வன்முறைக்கு ஆளாகி குருதி சிந்தியுள்ளார்கள். அப்படி சிந்திய குருதி நீரில் விளைந்ததுதான் நமது சுதந்திரப் பயிர் என்பதை இந்நூலில் விளக்கியுள்ளார் ஆசிரியர். அதாவது கொடிக்காகச் சிந்திய குருதி, வைஸ்ராயையே கொன்ற வரலாற்று நாயகன், புதையுண்டு போன புரட்சி வீரன்... இப்படி 13 தலைப்புகளில் ஹிந்துக்கள் முதல் இஸ்லாமியர்கள் வரை, அரிஜன் முதல் அந்தணர்கள் வரை அனைத்து இந்தியர்களும் இந்திய விடுதலைக்காக குருதி சிந்தியுள்ளதை படம் பிடித்துக் காட்டுகிறார். இதில் 'கொடிக்காகச் சிந்திய குருதி' என்ற முதல் கட்டுரையில், காந்தியடிகள் 1942 - ஆகஸ்ட் 8-ல் தன் பொறுமைக்கு முற்றுப்புள்ளி வைத்து, 'வெள்ளையனே வெளியேறு' என்றும், 'செய்! அல்லது செத்து மடி!' என்றும் முழங்கினார். அதன் விளைவாகப் பிஹார் மாநிலத் தலைநகரான பாட்னாவில் நிகழ்ந்த பள்ளி, கல்லூரி மாணவர்களின் போராட்டமும், உயிர் தியாகங்களும் இக்கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ளது. இது படிப்பவர் மனதை நெகிழ வைக்கக் கூடியது. இப்படி ஒவ்வொரு கட்டுரையிலும் இந்திய சுதந்திரப் போராட்ட நிகழ்ச்சிகள் விளக்கப்பட்டுள்ளதை - இன்றைய தலைமுறையினர் அறிவது மிக மிக அவசியமானது.






**– பரக்கத்**

# டாக்டர் அம்பேத்கரை புறக்கணித்த நேருவின் வாரிசுகள்

டாக்டர் அம்பேத்கரின் 134 - ஆவது பிறந்த நாளான 14.04.2024 அன்று, அவரைப் பற்றிய சில அற்புதமான விவரங்களை துக்ளக் வாசகர்களுக்கு நினைவுபடுத்துவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

இந்திய அரசியல் சாஸன சபை (Constituent Assembly) 09.12.1946 அன்று கூடியது. இதற்காக இந்தியாவிலுள்ள ஒவ்வொரு சாஸன சபையால் ( Provincial Assemblies) சிபாரிசு செய்யப்பட்ட நபர்கள் - சாஸன சபை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். இந்த அடிப்படையில், மும்பை சாஸன சபையிலிருந்து (இன்றைய மஹாராஷ்ட்ரா, குஜராத் அடங்கிய) ஏற்கெனவே அங்கு சட்டமன்ற உறுப்பினராக இருந்த, டாக்டர் அம்பேத்கரை அரசியல் சாஸன சபைக்கு ( Constituent Assembly ) தேர்ந்தெடுத்து இருக்க வேண்டும். ஆனால், அது நடக்கவில்லை. இதற்குக் காரணம், அன்றைய பிரதமர் பண்டித நேரு, மும்பை மாஹாணத்தின் முதல்வர் பி.ஜி.கேர் அவர்களிடத்தில் பேசி, டாக்டர் அம்பேத்கரை, சாஸன சபைக்குள் வரவிடாமல் தடுத்து விட்டதுதான்.

இந்த தருணத்தில் ஜோகேந்திர நாத் மண்டல் என்ற தலித் தலைவர், கிழக்கு வங்காளத்திலிருந்து அகில இந்திய ஷெட்யூல்டு காஸ்ட் ஃபெடரேஷன் சார்பாக, அரசியல் சாஸன சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். இவர் டாக்டர் அம்பேத்கரின் நுண்ணறிவை அறிந்து, தனது பதவியைத் திரும்ப பெற்றுக் கொண்டு, அந்த இடத்தில் டாக்டர் அம்பேத்கர், அரசியல் சாஸன சபையின் அதிகாரபூர்வமான உறுப்பினர் ஆக வழிவகுத்தார். அதன்படி அம்பேத்கர் சாஸன சபையின் உறுப்பினர் ஆனார். ஆகவே காங்கிரஸ் கட்சியின் சூழ்ச்சியையும் மீறி அம்பேத்கர், சாஸன சபையின் உறுப்பினரானார் என்பதுதான் நடந்த உண்மை. அரசியல் சாஸன சபையின் அங்கத்தினராக இருந்து மிகச் சிறப்பாகப் பணியாற்றி, தன்னுடைய கடுமையான உழைப்பினால் எல்லோருடைய பாராட்டுகளையும் டாக்டர் அம்பேத்கர் பெற்றார். 8 மாதங்களுக்குப் பிறகு, ஜூலை 1947 இறுதியில் (விடுதலை கிடைப்பதற்கு சில நாட்களுக்கு முன்பு) பண்டித நேரு, சரோஜினி நாயுடுவுடன் மகாத்மா காந்தியைச் சந்தித்தார்.



தன்னைப் பார்க்க வந்த பண்டித நேருவிடம், அரசியல் சாஸனம் வரையும் பணிகள் எவ்வாறு சென்று கொண்டிருக்கின்றன என கேட்டார் மகாத்மா காந்தி. இப்பணி திருப்தியாக இல்லை என பண்டித நேரு கூறி, அரசியல் சாஸனத்தை முறைப்படுத்தி தயார் செய்வதற்காக, சர்வதேச பிரசித்தி பெற்ற சர்.ஐவென்.ஜென்னிங்ஸின் (Sir.Ivon.Jennings, இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பிரபல வழக்கறிஞர்) சேவையை நாட அனுமதி கேட்டார். 1946 டிஸம்பரில் இருந்து ஜூலை 1947 வரை, டாக்டர் அம்பேத்கர் அரசியல் சாஸன சபையில் சாதாரண உறுப்பினராக மட்டுமே இருந்தார். ஆதலால் அரசியல் சாஸனம் தயாரிப்பதில் அவரது சேவைகள் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இருப்பினும், டாக்டர் அம்பேத்கரின் ஆக்கபூர்வமான பணிகளைப் பற்றி ராஜேந்திர பிரசாத், ஜெகஜீவன்ராம், சர்தார் பட்டேல் தவிர, ராஜாஜி மூலமும் மகாத்மா காந்தி அறிந்திருந்தார். ஆகவே 'அம்பேத்கர் நம்மிடத்தில் இருக்கிறபொழுது, சர்.ஐவென்.ஜென்னிங்ஸின் சேவை தேவையற்றது' என்று நேருவிடம் மகாத்மா காந்தி கூறினார்.

பிறகு, ஜனவரி - ஜூலை 1947 - ல் உருவாக்கப்பட்ட அரசியல் சாஸனத்திற்குத் தேவையான மாற்றங்களைச் செய்ய, இச்சபை ஒரு வரைவுக் குழுவை நியமித்தது. கீழ்க் கண்டவர்கள் இக்குழுவின் உறுப்பினர்கள் ஆனார்கள். 1.டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் 2.அல்லாடி கிருஷ்ண சாமி ஐயர் 3.என்.கோபால்சாமி ஐயங்கார் 4.கே.எம்.முன்ஷி 5.சையத் முகம்மது சாதுல்லா 6. சர்.பி.எல்.மிட்டர் மற்றும் 7.டி.பி.கைத்தான். அடுத்த நாள் ஆகஸ்ட் 30, 1947 அன்று, வரைவுக்குழு உறுப்பினர்கள் ஏகமனதாக டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரை வரைவுக் குழுவின் தலைவராக தேர்ந்தெடுத்தார்கள். இப்படித்தான் அரசியல் சாஸன சபையின் வரைவுக்குழு தலைவராக டாக்டர் அம்பேத்கர் வர முடிந்தது. இந்த மறைக்கப்பட்ட உண்மைகளை மக்கள் மன்றத்திற்கு எடுத்துச் செல்லும் கடமை நமக்கு இருக்கிறது.

டாக்டர் அம்பேத்கர் வரைந்த அரசியல் சாஸனத்தின் அடிப்படையில், 1952 - ல் நம்முடைய குடியரசிற்கு, நாடாளுமன்றத் தேர்தல் பிரகடனம் செய்யப்பட்டது. இதன் விளைவாக டாக்டர் அம்பேத்கர், மும்பை வடக்கு லோக்சபா தொகுதியில் போட்டியிட்டார். ஆனால் பிரதமர் நேரு, இந்த தொகுதிக்குச் சென்று, டாக்டர் அம்பேத்கருக்கு எதிராக பிரசாரத்தில் ஈடுபட்டு அவரை படுதோல்வி அடையச் செய்தார்.

டாக்டர் அம்பேத்கர் அமரர் ஆன பிறகும், அவரை புறக்கணிக்கிற போக்கை காங்கிரஸ்காரர்கள் கைவிடவில்லை. நேரு, இந்திரா காந்தி, ராஜிவ் காந்தி ஆகிய இந்த மூன்று பிரதமர்களும் டாக்டர் அம்பேத்கருக்கு பாரத ரத்னா விருது வழங்கவில்லை. 1990 - ல் பாரதிய ஜனதா கட்சியின் ஆதரவால் வி.பி.சிங் பாரதப் பிரதமர் ஆனதற்கு பிறகுதான், அமரர் டாக்டர் அம்பேத்கரின் பிறந்த நாளை நினைவில் கொண்டு, 14.04.1990 அன்று (Posthumously) அவருக்கு பாரத ரத்னா விருது அறிவிக்கப்பட்டது. இந்த வரலாற்றை இன்றைய தலைமுறையினருக்கு தெரிவிக்க வேண்டியது மிக அவசியம். ●

**– எச்.வி.ஹண்டே**

(தமிழக முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர்)

சூரிய சக்தி மின் உற்பத்தியை அதிகரிக்கவும், அதே சமயம் விவசாயிகளுக்கு உதவுவதற்காகவும், மத்திய அரசு பி.எம்.கே.யு.எஸ்.யு.எம்.எஸ். (Pradhan Mantri Kisan Urja Surakshaevam Uththaan Mahabhiyan Scheme) எனப்



சூரியத் தகடுகள்...

கூறப்படுகிறது. உதாரணமாக, பிரதமரின் திட்டத்தில், தமிழக விவசாயிகளிடமிருந்து 420 மெகா வாட் சூரிய சக்தி மின்சாரம் வாங்க இந்தாண்டு பிப்ரவரியில் மின் வாரியம் அழைப்பு விடுத்தது. இதுவரை ஏழு விவசாயி

# சூரிய சக்தி மின் நிலையம்

## – விவசாயிகளுக்கு இயலாமை ஏன்?

படும் பிரதமர் உழவர் சக்தி பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தைத் துவக்கியுள்ளது.

இத்திட்டத்தில், விவசாயிகள் தங்களின் நிலத்தில் சூரியசக்தி மின் நிலையம் அமைக்கலாம். அதில் உற்பத்தியாகும் மின்சாரத்தை பயன்படுத்தியது போக, உபரியை மின் வாரியத்திற்கு விற்கலாம். இதனால் விவசாயிகளுக்குக் கூடுதல் வருவாய் கிடைக்கும்.

### இந்தியாவின் இலக்கு:

உலகெங்கிலும் புவி வெப்பம் அதிகரித்து வரும் நிலையில், பருவ நிலை மாற்றங்களும், அதனால் பல பிரச்னைகளும் ஏற்பட்டு வருகின்றன. இந்த நிலைமையை சமாளிக்க ஒரே வழி, மின்சார உற்பத்திக்கு எரிபொருளாக உபயோகிக்கப்படும் நிலக்கரி, கச்சா எண்ணெய் உபயோகத்தை முழுவதுமாக தவிர்க்க வேண்டும் என்பதை எல்லா நாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன.

நிலக்கரி, கச்சா எண்ணெய் போன்ற எரிபொருட்களுக்கு பதிலாக, சூரிய சக்தி மற்றும் காற்றாலை கொண்டு மின்சாரம் தயாரிக்க, உலகெங்கிலும் பெருவாரியான நாடுகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

வரும் 2070 ஆண்டு, நிலக்கரி மற்றும் கச்சா எண்ணெய் எரி பொருள் உபயோகத்தினால் வெளியேறும் கார்பன் டை ஆக்ஸைடு, சல்பர் டை ஆக்ஸைடு போன்ற விஷவாயு, இந்தியாவில் முற்றிலும் தவிர்க்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி மற்ற நாடுகளுக்கு உறுதி அளித்துள்ளார். இந்த நிலையை அடைவதற்காக சூரிய சக்தி மின்சாரம், காற்றாலை மின்சாரம் உற்பத்திக்கான திட்டங்கள் தற்போது இந்தியாவில் வேகமாக அமல்படுத்தப்படுகின்றன.

2030 - ஆம் ஆண்டு காற்று, சூரிய ஒளி முதலியவற்றில் இருந்து தயாரிக்கப்படும் புதுப்பிக்கப்படக் கூடிய எரிசக்திக்கு (renewable energy) இலக்காக, 500 கிகா வாட் (GW) இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2023 - ஆம் ஆண்டு டிஸம்பர் மாத முடிவில் இந்தியாவில் சூரிய சக்தி மின்உற்பத்தி திறன் 74 கிகா வாட் (GW) என்ற நிலையில் இருந்தது. நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைய வேகமாக சூரிய சக்தி மின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

### சூரிய சக்தி மின்திட்டத்திற்கு விவசாயிகளின் ஆர்வம் குறைவாக இருப்பது ஏன் ?

இந்த திட்டம் ஒரு மகத்தான முயற்சி என்றாலும், நாடெங்கிலும் விவசாயிகளிடமிருந்து எதிர்பார்த்த அளவு ஆர்வம் ஏற்படவில்லை என்று கூறப்படுகிறது. உதாரணமாக, பிரதமரின் திட்டத்தில், தமிழக விவசாயிகளிடமிருந்து 420 மெகா வாட் சூரிய சக்தி மின்சாரம் வாங்க இந்தாண்டு பிப்ரவரியில் மின் வாரியம் அழைப்பு விடுத்தது. இதுவரை ஏழு விவசாயிகள், 11 மெகா வாட் திறனுக்கு மட்டுமே சூரிய மின்சக்தி திட்டம் அமைக்க விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று கூறப்படுகிறது. விவசாயிகளின் ஆர்வம் குறைவிற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து, தேவையுள்ள முறையில் திட்டத்தில் மாற்றம் செய்ய வேண்டியது மிகவும் அவசியம்.

### விவசாயிகளின் நிலைப்பாடு

ஒரு மெகா வாட் திறனுக்கு சூரிய மின்உற்பத்தி அமைப்பு ஏற்படுத்த சுமார் 1 .5 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. ஒரு மெகா வாட் சூரிய மின் சக்தி உற்பத்தி திறன் அமைப்பதற்கு சுமார் 5 கோடி ரூபாய் முதலீடு தேவை. தமிழ்நாட்டில் ஒரு கோடி ஏக்கருக்கு மேல் விளை நிலம் இருப்பினும், விவசாயிகளில் சுமார் தொண்ணூறு சதவிகிதம் விவசாயிகளுக்கு 2 ஏக்கருக்கு குறைவாகவே விளைநிலம் உள்ளது. சுமார் 5,000 விவசாயிகள்தான் 25 ஏக்கருக்கு மேல் விளைநிலம் உள்ளவர்கள் என்று கூறப்படுகிறது.

விளைநிலங்களில், சில அடி உயரத்திற்கு சூரிய பலகங்கள் (solar panel) அமைத்து சூரிய மின்சக்தி உற்பத்தி செய்து, அதற்கு கீழ் பூமியில் விளைநிலத்தில் பயிர் செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இந்த நடைமுறையினால், பயிர் பாதிக்கப்படுமா, எந்த பயிர் எந்த அளவில் பாதிக்கப்படும் என்பது குறித்து தகுந்த முறையில் ஆராய்ச்சி செய்து, விவசாயிகளுக்கு நம்பிக்கை

ஏற்படுத்துமாறு ஆய்வறிக்கை வெளிவரவில்லை. இதனால், விவசாயிகள் விளைநிலங்களில் சூரிய மின்சக்தி நிலையம் அமைக்கத் தயங்குவார்கள் என் பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

மேலும், 2 ஏக்கருக்குக் குறைவாக விளைநிலம் உள்ள விவசாயிகள், தொண்ணூறு சத விகிதத்திற்கு மேல் உள்ள நிலையில், இத்தகைய சிறிய விவசாயிகள் சூரிய ஒளி மின்சக்தி திட்டம் அமைக்க முன்வர மாட்டார்கள் என்பது திட்ட வட்டம். இத்தகைய நிலையில், விவசாயிகளுக்கு உதவுவதற்காக, மாற்று வழிகள் கண்டறியப்பட வேண்டும்.

## மாற்று வழிகள் என்ன ?

தமிழ்நாட்டில் தற்போது சாகுபடி செய்யப்படாத அல்லது சாகுபடிக்கு லாயக்கில்லாத தரிசு நிலம் சுமார் முப்பது லட்சம் ஹெக்டர் உள்ளது என்று கணக் கிடப்பட்டுள்ளது. இந்த நிலங்களை கண்டறிந்து சூரிய ஒளி மின்சக்தி உற்பத்தி செய்ய விவசாயிகளுக்கு வழங்கலாம்.

தமிழ்நாட்டில், மூடப்பட்ட சிறிய, பெரிய தொழிற்சாலைகள் ஏராளமாக உள்ளன. அங்கு நிலம் உபயோகமில்லாமல் வீணாக உள்ளன. 5 வருடத்திற்கு மேல் மூடிக்கிடக்கும் தொழிற்சாலை உள்ள நிலத்தை கையகப்படுத்தி , விவசாயிகளுக்கு சூரிய மின்சக்தி திட்டம் அமைக்க வழங்கலாம். மேலும், பல கல்வி நிலை யங்களில் ஏராளமான நிலம் தற்பொழுது உபயோகமில்லாமல் உள்ளன. 5 வருடத்திற்கு மேல் உபயோகிக்கப்படாத நிலங்களை அரசு கையகப்படுத்தி, சூரிய மின்சக்தி நிலையம் அமைக்க விவசாயிகளுக்கு வழங்கலாம். இந்த ஏற்பாட்டினால், விளை நிலங்களில் சூரிய சக்தி மின் நிலையம் அமைப்பதில் விவ சாயிகளுக்குள்ள தயக்கத்தை தவிர்க்கலாம்.

## விவசாயிகளுக்கு உதவுவது மிகவும் அவசியம் :

நம் நாட்டின் வளர்ச்சிக்கும், செழிப்பிற்கும் விவசாயிகளின் பங்கு மிகவும் அத்தியாவசிய மானது. பருவநிலை மாற்றத் தினாலும், சில சமயங்களில் ஏற்படும் வறட்சியால் அல்லது அதிகமான மழை பெய்வதாலும், பல விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி விடுகிறது. இந்த நிலையில், விவசாயக் குடும்பங்களின் பொருளாதார நிலையை வலுப்படுத்துவது மிக முக்கியம். இதற்காக, சூரிய சக்தி மின்உற்பத்தி செய்வதற்கு விவசாயிகளுக்கு நிலத்தை மலிவான குத்தகையில் அளிப்பதை யாரும் குறை சொல்லக் கூடாது. இந்த நிலங்களை விவசாயிகளுக்கு ஒதுக்கும்போது, அவர்களது விளை நிலங்களுக்கு அருகில் அளிப்பது அவசியம்.

**– என்.எஸ்.வெங்கட்ராமன்**


INDIAN RAILWAYS
BHARAT GAURAV TRAIN

**இந்தியன் இரயில்வேயின்**
**கோடை கால சிறப்பு AC ரயில் சேவை**

புண்ணிய தீர்த்த யாத்திரை
மதுரா-ஹரித்வார் – அயோத்தி-காசி
கயா-ப்ரயாக்ராஜ்-ஆக்ரா-டெல்லி
18-மே 12-நாட்கள்
3AC₹37,300

கீழே குறிப்பிட்டுள்ள சுற்றுலாவில் ஏதேனும் ஒன்றை தேர்ந்தெடுக்கலாம்

காஷ்மீர் ஸ்பெஷல்: ஸ்ரீநகர் - குல்மார்க் - சோன்மார்க் - அமிர்தசரஸ் -ஆக்ரா - டெல்லி
தோ தாம் யாத்திரை: ஹரித்வார் - கேதார்நாத் - ரிஷிகேஷ் - பத்ரிநாத் - ஆக்ரா - டெல்லி
ஹிமாலய நவ சக்தி யாத்திரை: வைஷ்ணோதேவி - சாமுண்டா தேவி - ப்ரஜேஸ்வரி ஜுவாலாமுகி - சிந்த்பூர்ணி - பகளாமுகி - நைனா தேவி கல்கா தேவி - மானஸ தேவி - ஆக்ரா - டெல்லி
முக்திநாத் & திவ்ய தேச யாத்திரை: நைமிசாரண்யம் - போக்ரா - ஜோம்சோம் முக்திநாத் - காத்மாண்டு - பசுபதிநாத் - அயோத்தி

06 ஜூன் 15 நாட்கள்

| 1AC | 2AC | PREMIUM 3AC | ECONOMY 3AC | SLEEPER | AGE 5 TO 11 YEARS CHILD |
|---|---|---|---|---|---|
| ₹69,050 | ₹59,900 | ₹58,000 | ₹55,000 | ₹45,470 | ₹32,000 |

7305858585 | WWW.TRAINTOUR.IN

**ஜன்னல் வழியே:**

# எடப்பாடியின் அபாண்டம்



சில தினங்களுக்கு முன்னால் அ.தி.மு.க.வின் தானைத் தலைவரான எடப்பாடி பழனிசாமி, 'அ.தி.மு.கவைப் பிளக்க பா.ஜ.க., பலமுறை முயற்சி செய்தது' என்று கூறியிருக்கிறார். இந்த விஷயம், பலரை மூக்கில் விரலை வைத்து வியக்க வைத்தது.

அ.தி.மு.க.வில், எடுத்ததற்கெல்லாம் பத்திரிகையாளர்களைக் கூட்டிப் பேசும் ஜெயகுமார் கூட, ஒரு போதும் இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடவில்லை. ஆனால் இந்த எடப்பாடி, பா.ஜ.க மீது இப்படி ஒரு குற்றச்சாட்டைச் சர்வசாதாரணமாகக் கூறியிருக்கிறார். அரசியல் கட்சி என்ற வகையில் பா.ஜ.க. ஒன்றும் புனிதமான கட்சி அல்லதான். ஆனால் அது அ.தி.மு.க.வைப் பிளக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை என்பது ஊர் உலகத்துக்கே தெரியும். சொல்லப் போனால், பிளவுப்பட்ட அ.தி.மு.க.வை ஒன்றுபடுத்தி ஆட்சி தொடர பா.ஜ.க. உதவியது என்பதே உண்மை. இருந்தும் எடப்பாடி ஏன் இப்படி ஒரு பொய்யைத் துணிந்து கூறுகிறார்? இது எடப்பாடியின் புதிய கண்டுபிடிப்பு.

இதற்கான காரணத்தைப் பூதக் கண்ணாடியை வைத்துக் கொண்டு தேட வேண்டியதில்லை. இது தேர்தல் காலம். அ.தி.மு.க., பா.ஜ.க கூட்டணியிலிருந்து விலகி விட்டாலும், அதற்கும் பா.ஜ.க.வுக்கும் கள்ள உறவு இருக்கிறது என்ற பேச்சு அரசியல் வட்டாரத்தில் அடிபடுகிறது. இதற்கு பா.ஜ.க. தலைவரான அண்ணாமலையோ, இதர பா.ஜ.க. தலைவர்களோ, அ.தி.மு.க.வை விமர்சித்துப் பேசாமல் இருப்பதும் ஒரு காரணம். கூட்டணியை விட்டு அ.தி.மு.க.தான் முதலில் விலகி விட்டதாகக் கூறியதே தவிர, பா.ஜ.க., 'நாங்கள் அ.தி.மு.க. கூட்டணியை விட்டு விலகுகிறோம்' என்று இன்று வரை கூறவில்லை. இதனால் அ.தி.மு.க.வுக்கும், பா.ஜ.க.வுக்கும் ரகசியமான கள்ள உறவு தொடர்கிறது என்ற கருத்து சிலரால் முன் வைக்கப்பட ஏதுவாகிறது.

பா.ஜ.க. இன்றுவரை அ.தி.மு.க.வை கடுமையாக விமர்சிக்காததற்கு, இதுநாள் வரை கூட்டணியில் இருந்த கட்சி என்பது தவிர, அ.தி.மு.க. மாநிலக் கட்சியாக இருந்தாலும், எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா காலத்திலிருந்தே தேசியப் பார்வை கொண்ட கட்சியாகவும் இருப்பதால்தான். தவிர, அ.தி.மு.க.வை விட தி.மு.க. வைத்தான் பா.ஜ.க. தீயசக்தியாகக் கருதுகிறது. அதன் முதல் எதிரி தி.மு.க.தான். அதனால் பொதுவாகவே அ.தி.மு.க. விஷயத்தில், பா.ஜ.க. அடக்கி வாசிக்கிறது. இந்த நிலையில், கூட்டணி வேண்டாம் என்று ஊருக்கு முன்னால் கூறிய எடப்பாடிக்குதான் ஏக காலத்தில் தி.மு.க.வோடு, பா.ஜ.க. வையும் எதிர்த்தே ஆக வேண்டிய கட்டாயம். பா.ஜ.க.வை விமர்சிக்க எதுவும் அகப்படாத நிலையில், 'அ.தி.மு.க.வைப் பிளக்க பா.ஜ.க. பலமுறை முயற்சித்தது' என்று ஒரு அபாண்டத்தைத் தூக்கிப் போடுகிறார் எடப்பாடி.

உண்மையில் அ.தி.மு.க. பிளவுபடக் கூடாது என்று பா.ஜ.க.தான் நினைக்கிறது. பன்னீர் செல்வம் கட்சியை விட்டு அதிருப்தியில் பிரிந்தபோது கூட, பா.ஜ.க. மேலிடம் தன்னளவில் இணைத்து வைத்தது. குறிப்பாக ஜெயலலிதா இறந்த பின், சசிகலா, தான் சிறை செல்லும் முன் எடப்பாடியை முதல்வராகப் பதவியில் அமர்த்தி வைத்தது பற்றிக் கூட பா.ஜ.க. பெரிதாக விமர்சனமோ, மாற்றுக் கருத்தோ சொன்னதில்லை.

இப்போது எடப்பாடி பா.ஜ.க. வுடன் கூட்டணி இல்லை என்று கூறிய நிலையில், இயல்பாகவே பன்னீர் செல்வம் அணியை பா.ஜ.க. ஆதரிப்பதில் என்ன தவறு? எடப்பாடி சசிகலாவினால் முதல்வராகத் தேர்வு செய்யப்பட்டுப் பதவி ஏற்றபோது, அந்தச் சமயத்தில் எடப்பாடிக்கு கட்சியில் அப்படி ஒன்றும் பெரிய செல்வாக்கு இல்லை. அவர் முதல்வராக ஆக்கப்பட்டதால்தான் செல்வாக்கு வளர்ந்தது.

எடப்பாடி தரப்பும், பன்னீர் செல்வம் தரப்பும் மாறி மாறி செயற்குழுக்களைக் கூட்டிக் கொண்ட போது கூட, பா.ஜ.க., அ.தி.மு.க. வின் உட்கட்சி சண்டையில் தலையிட்டதில்லை. அப்போது எடப்பாடிக்கு மத்தியில் ஆளும் பா.ஜ.க.வின் தயவு தேவைப்பட்டது. இப்போது அவராகவே பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்று கூறிய பிறகு, இவ்வளவு நாளும் பா.ஜ.க. மீது கூறாத ஒரு குற்றச்சாட்டை எடப்பாடி கூறக் காரணம், தேர்தல் ஜுரம் அவரைப் பிடித்து ஆட்டுவதுதான். வேறென்ன?

**– துர்வாசர்**

# கன்னா பின்னா கனவு

**க**டும் வெயிலில் ஓய்வின்றி பிரசாரம் முடித்த தலைவர்களுக்கு, தேர்தல் முடிவு தெரியும் வரை ஓய்வு கிடைத்துள்ளது. இந்த இடைக் காலத்தை வீணாக்காமல் நன்றாகத் தூங்கி, அவரவர் விருப்பப்படி கனவு காணலாம்.

**உதயநிதி:** அப்பா... எழுந்திருங்க. தேர்தல் ரிசல்ட் வந்துடுச்சு. நாப்பதுக்கு நாப்பதும் ஜெயிச்சுட்டோம். நம்ம கனவு நிறைவேறிடுச்சு. எடப்பாடி, அண்ணாமலை யார் கனவும் பலிக்கலை. உங்க அலையிலே எல்லாம் காலி.

**ஸ்டாலின்:** அப்படியா? நாப்பதிலேயும் ஜெயிச்சுட்டோமா? இந்தியாவைக் காப்பாத்திட்டேனா? நான் சொல்லலை, என்னாலேதான் இந்தியாவைக் காப்பாத்த முடியும்னு? ஆமா.. இண்டியா கூட்டணி எத்தனை இடத்திலே ஜெயிச்சிருக்குது?

**வீரமணி:** 272 - ஐ தாண்டிருச்சுங்க. ஆனா நம்ம அதிர்ஷ்டம் - மமதா, அகிலேஷ், எந்தக் கட்சிக்கும் 40 சீட் கிடைக்கலை. காங்கிரஸுக்கு கடும் எதிர்ப்பு அதனால நீங்கதான் பிரதமர்.

**டி.ஆர்.பாலு:** அண்ணாமலைக்கு டெபாஸிட்டே போயிடுச்சு. அநேகமாக கவர்னரும் ரிசைன் பண்ணுவாருன்னு கேள்வி. பண்ணலைன்னா நாமே டிஸ்மிஸ் பண்ணிடலாம்.

**உதயநிதி:** துரைமுருகனை கவர்னர் ஆக்கிடலாம்பா. இளைஞர் அணிக்கு வழி விடுங்கன்னு சொன்னா கேப்பாரு.

**ஸ்டாலின்:** பா.ஜ.க.வுக்கு எத்தனை ஸீட்?

**தயாநிதிமாறன்:** இன்னும் இருநூறே தாண்டலை. மோடியே ஒரு லட்சம் ஓட்டு பின்தங்கியிருக்காராம். உ.பி.யிலே கூட உங்க அலைதான் அடிக்குது. 'இந்தியா இருக்காது, நாடே பற்றி எரியும்'னு நாம பண்ண பிரசாரத்தை மக்கள் அப்படியே நம்பிட்டாங்க.

**ஸ்டாலின்:** இவ்வளவு பெரிய வெற்றி கிடைக்கும்னு தெரிஞ்சிருந்தா வாக்குறுதிகளை கொஞ்சம் குறைச்சிருக்கலாம். எப்படி சமாளிக்கப் போறேனோ!

**ஆ.ராசா:** அட, நீங்க ஒண்ணு. நிறைவேற்றதா இருந்தாத்தானே அதைப் பற்றிக் கவலைப்படணும்? ஒரு வாரம் கழிச்சு, '98 சதவிகிதம் நிறைவேற்றிட்டோம்'னு சொல்லிடுங்க. அதுக்கப்புறம் எவனும் வாயைத் திறக்க முடியாது.

**எ.வ.வேலு:** வெற்றி விழா டெல்லியிலா? சென்னையிலா?

**வீரமணி:** இதுலே என்ன கஞ்சத்தனம்? அரசுப் பணம்தானே? நாடு முழுக்க நடத்திடுவோம். அதிருக்கட்டும். தளபதி பிரதமரா, துணைப் பிரதமரான்னு இன்னைக்கே தெரிஞ்சுடும். நாம உடனடியா செய்ய வேண்டிய வேலைகள் என்னன்னு இப்பவே முடிவு பண்ணிக்கலாம்.

**மா.சுப்பிரமணியன்:** நீட்டை ஒழிக்கணும். அனைத்துப் பெண்களுக்கும் மாதம் ஆயிரம் அறிவிக்கணும். பெட்ரோல், டீசல் விலையைக் குறைக்கணும்.

**நேரு:** உளறாதீங்க. தேர்தல்தான் முடிஞ்சு போச்சே. அதையெல்லாம் 2026லே பாத்துக்கலாம். திராவிட மாடல் திட்டங்கள் பற்றி சொல்லுங்க.

**மா.சு.:** திராவிட மாடல் திட்டமா? தலைவர் குடும்பத்தோட ஒரு மாசம் வெளிநாடுகளுக்கு சுற்றுப் பயணம் போய், உலகத் தொழிலதிபர்களை சந்திச்சு முதலீடுகளை ஈர்க்கணும். தலைவர் குடும்ப ஆடிட்டருக்கும் தம்பி சபரீசனுக்கும் தகவல் அனுப்பிடறேன். தனி விமானத்துக்கும் சொல்லிடறேன்.



– சத்யா

**உதயநிதி:** செந்தில் பாலாஜிக்கு ஜாமீன் வாங்கி, மத்திய அமைச்சராக்கிடலாம். தேசிய அளவிலே பாட்டிலுக்கு பத்து ரூபா திட்டத்தை நிறைவேற்ற அவராலேதான் முடியும். தி.மு.க.வுக்கும் போதைப் பொருள் வியாபாரத்துக்கும் சம்பந்தமில்லைன்னு எப்படியாவது நிரூபிக்கணும். நம்ம அமைச்சர்களுக்கு எதிரான வழக்குகளை முடிக்கணும்...

**ஸ்டாலின்:** அதெல்லாம் பிரதமர் சீட்லே உட்கார்ந்த பிறகு. அதுக்கு முன்னாலே செய்ய வேண்டியது இருக்குது. எட்டு மந்திரி பதவிகள் வாங்கணும். அவங்க பேரையும் துறைகளையும் லிஸ்ட் போட்டு என் கிட்டே கொடு. இப்பவே டெல்லிக்குப் போறேன்.

**டி.ஆர்.பாலு:** தலைவரே எனக்கு கப்பல் போக்குவரத்துத் துறை. சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றாம எனக்கும் கட்சிக்கும் ஏகத்துக்கும் நஷ்டம். விட்டதைப் பிடிக்கணும். கட்சி நலனுக்காக சீனாவிலே நாலஞ்சு விஸ்கி ஆலை அமைக்கணும்.

**உதயநிதி:** அனைத்து மாநிலங்களிலும் 'ரெட் ஜெயிண்ட்' கிளைகளைத் தொடங்கணும்பா. உரிய நிதி ஒதுக்குங்க.

**வீரமணி:** நீங்க பாட்டுக்கும் ஆரம்பிக்க வேண்டியதுதானே தம்பி! கஜானா சாவி உங்க கையிலே இருக்குது. யார் கிட்டே அனுமதி வாங்கணும்?

**பொன்முடி:** பத்திர நன்கொடை

முறையை கொஞ்சம் சீர்திருத்தி, கொண்டு வந்தா நிதி கொட்டும். தலைவரே, நீங்க மத்தியிலே ஆட்சியைப் பிடிச்சதும், மொதல்லே எதுலே கையெழுத்து போடுவீங்க?

**ஸ்டாலின்:** சி.ஏ.ஏ., சி.பி.பி., சி.சி.சி., ஏ.பி.சி.னு என்னென்னவோ சொல்றாங்க. எல்லாத்திலேயும் கையெழுத்து போடலாம்னு இருக்கேன். இதையெல்லாம் நீக்கணுமா, அமல்படுத்தணும்னா மட்டும் யாராவது ஒரு சீட்டுலே முன்கூட்டியே எழுதிக் கொடுத்துடுங்க. மனப்பாடம் பண்ணிக்கிறேன்.

**திருமாவளவன்:** தலைவரே, தப்பா நினைக்கக் கூடாது. கோவிச்சுக்காதீங்க. டென்ஷன் ஆகாதீங்க. நீங்க பிரதமர் ஆனதும் இந்த வேங்கைவயல் விவகாரத்திலே ஏதாவது செய்ய முடியுமா?

**ஸ்டாலின்:** நாங்க எவ்வளவு பெரிய விஷயங்களைப் பத்தி சீரியஸா டிஸ்கஸ் பண்ணிட்டிருக்கோம். இப்படி ஒரு அல்ப விஷயத்தைப் பற்றி கேள்வி கேட்க உங்களுக்கு வெக்கமா இல்லை?

**சேகர்பாபு:** சிறுபான்மையினருக்கு நன்றி அறிவிப்பு விழாவையும், சனாதன ஒழிப்பு மாநாட்டையும் சேர்த்து நடத்தணும் தலைவரே! அதுக்கு ஒரு 1500 கோடி ரூபாய் பிரதமர் நிதியிலேர்ந்து ஒதுக்கிடுங்க. ஹிந்து அறநிலையத் துறை அமைச்சர்ன்ற முறையிலே சிறுபான்மை நலனுக்கு நான் ஏதாவது செய்யணும்.

**ஆ.ராசா:** என்னை சிறப்புரை ஆற்றக் கூப்பிடுங்க. நமக்கு ஓட்டு போட்ட ஹிந்துக்கள் நாக்கைப் புடுங்கிட்டு சாகற மாதிரி அசிங்கமா நாலு கேள்வி கேட்டாத்தான் என் மனசு ஆறும்.

**வீரமணி:** கலைஞருக்கு ஒரு பாரத ரத்னா விருது ஏற்பாடு பண்ணுங்க தளபதி. பேரு பாரத ரத்னான்னே இருக்கட்டும். ஒன்றிய ரத்னான்னு மாத்திடாதீங்க. அப்படியே பார்லிமென்டுலே கலைஞருக்கு ஒரு பிரம்மாண்ட சிலை வெச்சுடலாம்.

**ஆர்.எஸ்.பாரதி:** எனக்கு எம்.பி. சீட் கூட கிடைக்கலை. ஒரு பத்ம பூஷன் விருதாவது கிடைக்குமா?

**ஸ்டாலின்:** பத்ம விருதுகளை நிர்ணயிக்கிற குழுவுக்கு உங்களையே தலைவரா போட்டுடறேன். திருப்திதானே? பட்டியலை தயார் பண்ணி என் டேபிளுக்கு அனுப்புங்க.

**சேகர்பாபு:** நாடு முழுக்க உண்டியல் இல்லாத எல்லா



கோயில்லேயும் ஏராளமா உண்டியலை வெச்சு ஆன்மீக வளர்ச்சிக்கு பாடுபடணும்ன்றது என் லட்சியம். நானும் உங்க கூட டெல்லி வந்துடறேன் தலைவரே.

**உதயநிதி:** அடுத்த ஒலிம்பிக்ஸ் போட்டிகளை என் தலைமையிலே நடத்த அனுமதி வாங்கிக் கொடுங்கப்பா. 'ஒலிம்பிக்ஸைக் காக்க உதயநிதி அழைக்கிறேன்'னு விளம்பரம் குடுத்துடறேன்.

**நேரு:** ஒரு லட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கி கலைஞர் நூற்றாண்டு உலக மாநாடு நடத்தலாம். அமெரிக்கா, ரஷ்யா, சீன அதிபர்களை வரவழைச்சு தளபதியை பாராட்ட வெச்சா மோடிக்கு வயிறு எரியும்.

**ஆ.ராசா:** அந்த ஆள் வாழ்த்து சொல்ற சாக்குலே உங்களுக்கு ஃபோன் போட்டா பேசாதீங்க தலைவரே. 'டோண்ட் டாக் மோடி'ன்னு இணைய தளத்திலே வைரலாக்குவோம்.

**வீரமணி:** தேசிய அளவிலே சிந்திச்சுப் பார்த்தா, திஹார்லே வாடற சிறுபான்மை தீவிரவாதிகளை காந்தி பிறந்த நாள்லே விடுவிச்சா மதச்சார்பின்மையைக் காப்பாத்த முடியும்னு தோணுது.

**தயாநிதி:** 35 மாநிலத்திலேயும், சன் டி.வி. கிளைகள் ஆரம்பிக்கணும். அதனால, தகவல் தொடர்பு துறையை நான் எடுத்துக்கறேன்.

**பொன்முடி:** ரிசர்வ் பேங்க் கவர்னரா நம்ம ஆள் யாரையாவது போடணும் தலைவரே. கட்சியிலே இருக்கிற ரெண்டாயிரம் ரூபாய் நோட்டுகளுக்கு உடனடியா ஒரு வழி செய்யணும்.


**வீரமணி:** தயவு செஞ்சு தமிழை மறந்துடாதீங்க. இமயமலைக்கு கலைஞர் மலைன்னும் தாஜ்மஹாலுக்கு தமிழ் மஹால்னும் பேர் வெக்கணும்.

**ஸ்டாலின்:** சரி சரி, என்னை தொந்தரவு பண்ணாதீங்க. துணை பிரதமர் யார், மத்திய மந்திரிகள் யார்னு தீர்மானிக்கணும். கொஞ்சம் சிந்திக்க விடுங்க.

**உதவியாளர்: (ஸ்டாலினை எழுப்பியபடி) தலைவரே! மணி எட்டாச்சு எழுந்திருங்க. கேரளாவிலேர்ந்து இண்டியா கூட்டணித் தலைவர்கள் ராஹுலும் பினரயி விஜயனும் ஃபோன் பண்றாங்க. ரெண்டு பேருக்கும் பெரிய மோதலாம். போய் சமரசம் பண்ணுங்க.**

# அய்யாத்துரை மு.க.ஸ்டாலின் ஆன கதை

'**உ**லகத்திற்கே வழிகாட்டும் தலைவராக மு.க.ஸ்டாலின் இருக்கிறார்' என்று அமைச்சர் எ.வ.வேலு கூறுகின்றாரே? என்று, **காட்பாடியிலிருந்து வே.ந.கதிர்வேல்** என்ற வாசகர் கேள்வி எழுப்பியுள்ளார்.



ஜோஸஃப் ஸ்டாலின்

**'மு.க.ஸ்டாலின் உலகுக்கே வழி காட்டுகிறார் என்று கூறுகிறார் எ.வ. வேலு. அதற்குப் பதில் கூறும் முன், எப்படி தமிழுக்கும் தமிழகத்துக்கும் திராவிடத்துக்கும், ஏன் பாரதத்துக்குமே சம்பந்தமில்லாத, ரஷ்ய நாட்டு ஸ்டாலினின் பெயர் கிடைத்தது என்பதைப் பார்ப்பது அவசியம்.**

## அய்யாத்துரையை மு.க.ஸ்டாலின் ஆக்கிய ஜோஸஃப் ஸ்டாலின்

**வ**ல்லரசான சோவியத் யூனியனின் அதிபரும், உலகப் பிரசித்தி பெற்றவருமான ஜோஸஃப் ஸ்டாலினின் பெயரைத்தான் மு.க.ஸ்டாலினுக்கு வைத்தார் கருணாநிதி. 1924 முதல் 1953 வரை 30 ஆண்டுகள் கம்யூனிஸ சோவியத் அதிபராக இருந்தார் ஜோஸஃப் ஸ்டாலின். தமிழில் உச்சரிக்கச் சிரமப்படும் அந்தப் பெயரை எப்படித் தேர்ந்தெடுத்தார் கருணாநிதி? அந்தக் கதையை மு.க.ஸ்டாலினே, 'உங்களில் ஒருவன்' என்று தலைப்பிட்ட தனது வாழ்க்கைச் சரிதப் புத்தகத்தில் கூறியிருக்கிறார். அய்யா தந்தை பெரியார் என்ற பெயரின் முதல் பகுதியான 'அய்யாவையும், பேரறிஞர் அண்ணாதுரை பெயரின் இறுதி பகுதியான 'துரை'யையும் சேர்த்து 'அய்யாத்துரை' என்றுதான் எனக்குப் பெயரிடவிருந்தார் என் தந்தை. ஆனால், நவீன சோவியத் யூனியனை வடிவமைத்த இரும்பு மனிதர் ஜோஸஃப் ஸ்டாலின் மறைவுக்கான இரங்கல் கூட்டம், சென்னை மெரினா பீச்சில் நடந்தது. அதில் பேசிய என் தந்தை 'என் பிள்ளையின் பெயரை ஸ்டாலின் என்று வைக்கப் போகிறேன்' என்று அறிவிக்க, ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற பொதுக்கூட்டத்தில்தான் எனக்கு ஸ்டாலின் என்ற பெயர் சூட்டப்பட்டது' என்கிறார் ஸ்டாலின். எந்த ஜோஸஃப் ஸ்டாலினின் பெயரைத் தன் பிள்ளைக்கு கருணாநிதி வைத்தாரோ, அவரைப் பற்றி பின்பு கோரமான உண்மைகள் வெளிவந்தன. பெயர் வைத்தபோது, உண்மையில் ஜோஸஃப் ஸ்டாலின் யார் என்று தெரிந்திருந்தால் நிச்சயம் அந்தப் பெயரை வைத்திருக்கமாட்டார் கருணாநிதி.

## இரண்டு கோடிப் பேரைப் படுகொலை செய்த ஜோஸஃப் ஸ்டாலின்

**க**ம்யூனிஸ்ட் சர்வாதிகாரியான ஜோஸஃப் ஸ்டாலின் ஈவிரக்கமற்ற படுகொலையாளர். தனது 30 ஆண்டு கால ஆட்சியில், அவர் செய்த படுகொலைகள் ஆயிரமல்ல, பல்லாயிரமல்ல, பல லட்சங்களல்ல. நம்புவீர்களா? இரண்டு கோடி. ''நீங்கள் எவ்வளவு காலம் இப்படி படுகொலைகளைச் செய்துகொண்டே இருப்பீர்கள்?'' என்று அவரது மனைவி லேடி ஆஸ்டர் கேட்டபோது, ''கம்யூனிஸ்ட் சமூகத்தை அமைக்க அத்தியாவசியமான அந்தப் படுகொலைகள், அது அமையும் வரை தொடரும்'' என்று அலட்சியமாகக் கூறினார் ஸ்டாலின். இது நடந்தது 1931-ல் (1). ஆனால் ஜோஸஃப் ஸ்டாலின் ஆட்சியில் இருக்கும் வரை, அவர் கொடும் படுகொலையாளி என்பது ரஷ்யாவுக்குள்ளோ, வெளியிலோ யாருக்கும் தெரியாது. பாவம், கருணாநிதிக்கும் தெரியாது. ஸ்டாலினை உலகமே புகழ்ந்தது. கம்யூனிஸ எதிர்ப்புப் பத்திரிகையான மேற்கத்திய 'டைம்' அவரை 11 முறை அட்டைப் படத்தில் பிரசுரித்தது. அவரது புகழ் எல்லா நாடுகளிலும் பரவியது (2).

அவர் மறைந்த பிறகுதான் கொஞ்சம் கொஞ்சமாக உண்மைகள் வெளிவந்தன. சோவியத் யூனியனின் தலைவர்களே ஸ்டாலினைப் பழித்தனர். ஸ்டாலினுக்குப் பிறகு சோவியத் அதிபரான நிகிடா குருஷேவ், ஸ்டாலின் ஆட்சியைக் கண்டனம் செய்தார். ஸ்டாலினைப் போற்றி ஸ்டாலினிஸத்தை அனுசரித்து வந்த சீனா தவிர, மற்ற நாட்டு கம்யூனிஸ்ட்கள் ஸ்டாலினிஸத்தை வெறுக்க ஆரம்பித்தனர். நம் நாட்டு வலதுசாரிகள் ஸ்டாலினிஸத்தை வெறுத்தனர். இடதுசாரிகள் போற்றினர், இன்றும் போற்றுகின்றனர். கோடிக்கணக்கான பேர்களின் படுகொலை எப்படி படு ரகசியமாக இருந்தது? கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வாதிகாரத்தில் இருந்த சோவியத் யூனியனை இரும்புத்திரை நாடு என்று கூறுவார்கள். அதற்குள் என்ன நடக்கிறது என்பது வெளியிலுள்ள யாருக்கும் தெரியாது, சோவியத் மக்களுக்கும் கூட தெரியாது. ஜனநாயகம் பற்றி வாய் கிழியப் பேசும் கம்யூனிஸ்ட்கள் ஆட்சிக்கு வந்தால் என்ன செய்வார்கள் என்பதை, சோவியத் யூனியன் மட்டுமல்ல, சீனா, கம்போடியா போன்ற கம்யூனிஸ நாடுகளில் கோடிக்கணக்கான மக்கள் படுகொலையானதே இதற்குச் சாட்சியம் கூறும். கம்யூனிஸத்தின் அடிப்படையே உழைக்கும் மக்களின் சர்வாதிகாரம் [dictatorship of the proletariat]. ஜனநாயகம் என்ற வார்த்தையே கம்யூனிஸ சித்தாந்த அகராதியில் இல்லை.

## பாரமான பெருமைப் பெயர்

**ச**ரி, நமது மு.க.ஸ்டாலின் பக்கம் வருவோம். வெளிநாடுகளில் மு.க.ஸ்டாலினை ஏதோ இன்னொரு

ஸ்டாலின் என்றுதான் நினைப்பார்கள். அவர்களுக்கு ஏன் அவருக்கு ஸ்டாலின் என்ற பெயர் வந்தது என்பது தெரிய வாய்ப்பில்லை. படுகொலையாளியான ஜோஸஃப் ஸ்டாலினால் கவரப்பட்ட கருணாநிதி, தன் பிள்ளைக்கு அந்தப் பெயரை வைத்தார் என்று தெரிந்தால், மு.க.ஸ்டாலின் பெயருக்கு வெளிநாடுகளில் பெரும் வரவேற்பு இருக்காது. ரஷ்யாவிலேயே ஸ்டாலின் பெயருக்கு மரியாதை இல்லை. இதைத் தனது அனுபவத்தின் மூலமாக உணர்ந்ததாக மு.க. ஸ்டாலினே கூறியிருக்கிறார். 1989-ல், ''நான் ரஷ்யா போனபோது ரஷ்ய அதிகாரிகள் என் பெயரைக் கூறச் சொன்னார்கள். நான் ஸ்டாலின் என்று கூறியபோது, என்னைப் பலரும் உற்றுப் பார்த்தனர். என்னுடைய பாஸ்போர்ட்டைப் பார்த்த அதிகாரிகள், என்னைத் தங்கள் நாட்டுக்குள் நுழைய விடும் முன் துருவித் துருவிக் கேள்விகள் கேட்டனர். ரஷ்யாவில் பலருக்கு ஸ்டாலினைப் பிடிக்கவில்லை என்பது புரிந்தது'' என்று கூறினார் மு.க.ஸ்டாலின் (3). ஸ்டாலின் என்று பெயர் இருந்ததால் மு.க. ஸ்டாலினை ரஷ்யாவே உள்ளே விடத் தயங்கியது.

## அவப்பெயர்களாகும் புரட்சிப் பெயர்கள்

ஸ்டாலின் போன்ற திடீர் புரட்சிப் பெயர்களுக்கு சிறிது காலம் கிளுகிளுப்பு இருக்கும். பிறகு அந்தப் பெயர்களே பாரமாக மாறிவிடும். பெயர் என்பது நமது பாரம்பரியத்தில், ஒருவரது விலாசத்திற்காகப் போட்டுக்கொள்ளும் அடையாளம் மட்டுமல்ல. தன் குழந்தைக்கு என்ன குணம் இருக்க வேண்டும் என்று பெற்றோர்கள் விரும்புகிறார்களோ, அந்தப் பெயரை இடுகிறார்கள். நமது பாரம்பரியத்தில் எது நல்ல பெயர், எது நல்ல பெயர் இல்லை என்பதைப் பார்த்துத்தான் பெயர் வைத்தார்கள். பல நாடுகளிலும் அப்படித்தான். இந்தோனேஷிய அதிபராக இருந்த சுகர்ணோவின் பெயர் நமது மஹாபாரத கர்ணனின் பெயர். தன் மகன் கர்ணனைப் போல் வீரனாகவும், கொடையாளியாகவும் இருக்க வேண்டும் என்று விரும்பிய அவரது தந்தை, கர்ணனின் விரும்பத்தகாத குணங்கள் தன் மகனுக்கு இருக்க வேண்டாம் என்று கருதியதால், கர்ணனின் பெயரின் முன் 'சு'வைச் சேர்த்து சு-கர்ணோ என்று பெயர் வைத்தார். 'சு' என்றால் 'சுபம்' அல்லது 'நல்லது' என்று அர்த்தம். சுகர்ணோ என்றால் 'நல்ல கர்ணன்' என்று அர்த்தம் (4).

இப்படிப்பட்ட பாரம்பரியத்தை அழித்தது வெறுப்புணர்வால் உருவாகும் புரட்சி சிந்தனைகள்தான். வெறுப்புணர்வால் எழும் புரட்சிகள் வலுவிழக்க, மீண்டும் பண்டைய கலாசாரம் பீறிட்டெழும். இதற்கு உதாரணம், ரஷ்யா மட்டுமல்ல சீனா. கம்யூனிஸ்ட் சீனாவில் 1965 முதல் 10 ஆண்டுகள் நடந்த கலாசாரப் புரட்சியில் சீன பாரம்பரியங்கள் அனைத்தையும் அழிக்கச் சொன்னார் மாசேதுங். சீன சித்தாந்தியான கன்ஃபூஷியஸின் பெயர், சிலைகள், நூல்கள், புத்த விஹாரங்கள், மற்ற கோவில்கள், தெய்வங்கள் எல்லாம் அழிக்கப்பட்டன. அந்தச் சீனாவில் இன்று பீறிட்டு எழுகிறது சீனக் கலாசாரம். பண்டைய சீன கலாசாரத்தை ஒழிக்கக் கிளம்பிய சீன கம்யூனிஸ்ட் கட்சியின் இன்றைய தலைவரான ஜி ஜின்பிங், 2021-ல் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 100-ஆவது ஆண்டு விழாவில் பேசும்போது என்ன சொன்னார்? ''5000 ஆண்டு சீன கலாசாரம் இன்றும், என்றும் சீனாவுக்கு வழிகாட்டும்'' என்று பேசி, உலகையே அதிர்ச்சியில் ஆழ்த்தினார். அந்தப் பேச்சை சீன அரசே வெளியிட்டது (5). அதுமட்டுமல்ல எந்த கன்ஃபூஷியஸ் பெயர் அறவே அழிக்கப்பட்டதோ, அவர் பெயரில் சீன அரசாங்கம் 2013-லிருந்து 2018 வரை உலகம் முழுவதும் 548 கன்ஃபூஷியஸ் இன்ஸ்டிட்டியூட்களையும், 1193 கன்ஃபூஷியஸ் வகுப்பறைகளையும் தொடங்கி நடத்துகிறது (6). அவரது கம்யூனிஸ எதிர்ப்பு சித்தாந்தத்தை, சீன தேசிய சித்தாந்தமாக உலகெங்கும் பரப்பி வருகிறது சீனா. சீன கம்யூனிஸத்தை உதாரணமாகக் கருதும் நமது இடதுசாரிகள், இது பற்றி மௌனம் காப்பது குறிப்பிடத்தக்கது.

கார்ல் மார்க்ஸ், லெனின், ஸ்டாலின், மாசேதுங், சே குவேரா படங்களைப் போட்டு புரட்சிவாத வியாபாரம் செய்துவரும் தமிழக அரசியல் கடைகள் வெகுநாள் ஓடாது என்பதை, புரட்சி செய்த நாடுகளின் சரித்திரம் உணர்த்துகிறது. ஒரு நாட்டின் பாரம்பரியம் என்பது ஒரு மனிதனின் டி.என்.ஏ. போல். புரட்சியால் அதை அழிக்கவோ, மாற்றவோ முடியாது என்கிறது சரித்திரம். திராவிட மாயையில் பாரம்பரியத்தை வெறுத்த கருணாநிதி, எங்கிருந்தோ இறக்குமதி செய்த புரட்சிப் பெயர் இன்று அங்கேயே அவப்பெயராகி விட்டது. புரட்சியாளர் ஜோஸஃப் ஸ்டாலினின் பெயர் ரஷ்யாவில் அவப்பெயரானது போல், ஒரு காலத்தில் பிரபலமாக இருந்து, இப்போது வழக்கொழிந்துவரும் நம் ஊர் புரட்சிப் பெயர்களும் வெகுவிரைவிலேயே அவப்பெயர்களாகும்.

**- எஸ்.ஜி.**



ஜோஸஃப் ஸ்டாலின் செய்த அட்டூழியங்கள் தெரிந்திருந்தால், தமிழார்வலரான கருணாநிதி நிச்சயம் அந்த அவப்பெயரைத் தன் பிள்ளைக்கு வைத்திருக்க மாட்டார். மு.க.ஸ்டாலினின் பெயர் நம் ஊர், 'அய்யாத்துரை'யாக இருந்திருக்கும். வைத்தபோது பெருமையாக இருந்த தனது பெயர், எப்போது பாரமானது என்ற கதையை ஸ்டாலினே கூறி விட்டார். அந்தக் கொடூரன் ஸ்டாலினின் பெயரை வைத்துக் கொண்டு உலகுக்கு வழிகாட்ட முடியுமா மு.க. ஸ்டாலின்? கடவுளுக்கே வெளிச்சம்!


[1] https://www.hawaii.edu/powerkills/USSR.CHAP.1.HTM

[2] https://news.stanford.edu/2010/09/23/naimark&stalin& genocide&092310/

[3] இந்தியன் எக்ஸ்பிரஸ் 14.9.2019

[4] https://www.behindthename.com/name/sukarno

[5]http://english.scio.gov.cn/topnews/2023&10/11/content_116737031.htm

[6]https://www.statista.com/statistics/879340/china&confucius&institutes&and&confucius&classrooms&worldwide/

## பணம் இருந்தால்தான் சேவை செய்ய முடியுமா?

'**நா**ன் பிறருக்கு உதவி செய்ய நினைக்கிறேன். ஆனால் என்னிடம் பணம் இல்லையே! என்ன செய்வது?' என்று **வெண்கரும்பூரிலிருந்து த.நேரு** என்ற வாசகர் கேள்வி எழுப்பியுள்ளார்.

**ப**ணம் இருந்தால்தான் மற்றவர்களுக்கு உதவ முடியுமா என்ற கேள்விக்கு காஞ்சிப் பெரியவர் கூறிய பதிலைத் தருகிறேன். 'வசதியுள்ளவர்கள்தான் மற்றவர்களுக்கு உதவி செய்ய முடியும் என்ற எண்ணம் தவறு. சரீரத்தால் மற்றவர்களுக்குக் கைங்கரியம் செய்வது பெரிய புண்ணியம். அது சித்த சுத்திக்கு ரொம்ப உதவும். வசதியே இல்லாதவர்களும் இவ்விதத்தில் பிறருக்கு சரீர சகாயம் செய்ய முடியும். ஓர் ஒற்றையடிப் பாதைக்குப் போய் அங்கே உள்ள முள்ளை, கண்ணாடியை அப்புறப்படுத்தி வந்தால் கூட போதும். அது பெரிய உதவி. இது மாதிரி சின்ன தர்மங்களை எவரும் செய்யலாம். பணக்காரர், ஏழை என்ற வித்தியாசமில்லாமல் ஒரு பேட்டையில் உள்ள அனைவரும் சேர்ந்து குளம் வெட்டலாம் என்கிறார் காஞ்சி முனிவர். நூற்றுக்கணக்கான அனாதைகள் மடிகிறார்கள். பல சடலங்கள் அரசு ஆஸ்பத்திரிகளில் அழுகிய நிலையில் கிடக்கின்றன. அதை எரிக்கக் கூட யாரும் கிடையாது என்ற நிலை. அந்த அனாதைப் பிரேதங்களை மரியாதையுடன் தகனம் செய்வது, அஸ்வமேத யக்ஞயத்துக்குச் சமம் என்று கூறுவார் பெரியவர்.

ஸ்ரீரங்கத்தில் ஒருவர் அனாதைப் பிரேதங்களைத் தகனம் செய்வதையே ஒரு சேவையாகச் செய்து வருகிறார். அவரை நான் சந்தித்தபோது, காஞ்சிப் பெரியவர் கூறித்தான் நான் இந்த சேவையைச் செய்து வருகிறேன் என்று சொன்னார். அனாதைச் சடலங்கள் கிடைத்தால் போலீஸார் கூட அவர் குழுவுக்குத்தான் ஃபோன் செய்வார்களாம். 2012, 2013 செய்திப்படி, ஆண்டுக்கு தமிழகத்தில் 5000-க்கு மேலான அனாதைப் பிரேதங்கள் கண்டெடுக்கப்படுகின்றன (1). அனாதைப் பிரேத தகனம் அவ்வளவு முக்கியம். இது போன்ற சேவைகளைப் பணத்தால் செய்ய முடியாது. பணத்தைவிட மனமும், நேரமும்தான் அவசியம்.

(1) டைம்ஸ் ஆஃப் இந்தியா 2.7.2014

## புகழை விரும்பாத தலைவர் எல்.கே. அத்வானி

'**பு**கழை விரும்பாத தலைவர் யார்?' என்று **சென்னை-44-லிருந்து கோ.தேவராஜன்** என்ற வாசகர் கேள்வி எழுப்பியுள்ளார். புகழை விரும்பாத பலரை பா.ஜ.க.வில் பார்த்திருக்கிறேன். புகழ் வேண்டாம் என்று இருந்து புகழ் பெற்ற தலைவர் எல்.கே.அத்வானி. கூச்சப்படும் சுபாவம் உள்ள அவரைப் பற்றி நேரிடையாக நான் கண்ட ஒரு நிகழ்வைக் கூறுகிறேன். 1990-களில் வாஜ்பாய்-அத்வானி அரசியல் ஜோடி மிகவும் பிரபலமானது. விளம்பரங்களில் அவர்கள் இருவரது படங்களையும் சேர்த்தே போடுவர் பா.ஜ.க.வினர். 1999 பா.ஜ.க. தேர்தல் அறிக்கையில் வாஜ்பாய் படத்தை முகப்பிலும், அத்வானி படத்தை பின் அட்டையிலும் போடவேண்டும் என்று பிடிவாதமாகக் கூறினார் பா.ஜ.க. துணைத்தலைவரும் தேர்தல் அறிக்கை குழுவின் தலைவருமான சிக்கந்தர் பகத். அறிக்கை தயாரிக்க உதவிய நானும் அதை ஆமோதித்தேன். ஆனால், அத்வானி மறுத்துவிட்டார். பிரதமர் என்று வாஜ்பாயை கட்சி முன்னிறுத்தும் போது, குறிப்பாக தேர்தல் அறிக்கையில் தன் பெயரைச் சேர்த்துக் குழப்பம் ஏற்படுத்தக்கூடாது என்று கண்டிப்புடன் கூறினார் அவர்.

## அப்போது நடந்தது அடக்குமுறைக்கு எதிரான போராட்டம்

'**1970** மற்றும் 80-களில் காங்கிரஸை வீழ்த்த அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்ததற்கும், பா.ஜ.க.வை வீழ்த்த இப்போது 28 கட்சிகள் ஒன்றிணைவதற்கும் என்ன வித்தியாசம்?' என்று **சென்னை-18-லிருந்து மா.தே.ரவிகாந்த்** என்ற வாசகர் கேள்வி எழுப்பியுள்ளார். 1970-களில் எதேச்சதிகார ஆட்சி நடத்திய பிரதமர் இந்திரா, அரசாங்க அதிகாரத்தை வைத்து தேச விரோத தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் சேர்ந்து, காங்கிரஸை உடைத்து, காமராஜ், மொரார்ஜி, நிஜலிங்கப்பா போன்ற தூய தலைவர்களை நீக்கி, காங்கிரஸை தன் சொந்த குடும்பக் கட்சியாக்கினார். அதற்கும் மேல் ஒரு படி சென்று எமெர்ஜென்ஸி கொண்டு வந்து, அடிப்படை உரிமைகளைப் பறித்து, நீதிமன்றத்தை அடக்கி, பத்திரிகைகளை காலில் விழவைத்து, ஒட்டுமொத்த எதிர்க்கட்சித் தலைவர்கள், எம்.பி.க்களைச் சிறையில் அடைத்தார். அவரை வீழ்த்தி, மறைந்து போன ஜனநாயகத்தை மீட்டெடுக்க எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்தன. 1980-களில் 'மிஸ்டர் க்ளீன்' என்று தன்னை பிராண்ட் செய்துகொண்ட பிரதமர் ராஜிவ், திரைமறைவில் போஃபோர்ஸ் பேரத்தில் ஈடுபட்டு ஊழல் செய்தார். ஸ்வீடன் நாட்டு அரசாங்க ஆவணங்கள் அதை அம்பலப்படுத்தவே ராஜிவின் ஆட்சி கலகலத்தது. ஊழல் குற்றத்தில் சிக்கிய ராஜிவை எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து வீழ்த்தின. இப்போது எந்த முகாந்திரமும் இல்லாமல், மோடி துவேஷத்தால் மட்டுமே தூண்டப்பட்டு, அறிவிக்கப்படாத எமெர்ஜென்ஸி நிலவுகிறது என்று புறங்கூறி, அவரை வீழ்த்துவோம் என்று கோஷமிட்டு ஒன்று கூடியிருக்கின்றன எதிர்க்கட்சிகள். ●

# களத்தில் கண்ட காட்சிகள்!

**வழக்கமாக தேர்தல் கருத்துக் கணிப்புக்கு பின்னர், நாங்கள் களத்தில் சந்தித்த சில அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வது வழக்கம். அந்த வகையில் இந்த முறையும் நாங்கள் களத்தில் சந்தித்த சில தகவல்களை வாசகர்களோடு பகிர்ந்து கொள்கிறேன்:**

❖ கன்னியாகுமரி மாவட்டத்தில் எங்களிடம் அ.தி.மு.க.வுக்கு ஆதரவாகக் கருத்து கூறிய ஒரு சிலரே, 'நாங்கள் இங்கு மூன்றாவது இடத்தில்தான் இருக்கிறோம். நாம் தமிழர் கட்சியை விட வாக்கு குறைந்து நான்காவது இடத்திற்கு போய் விடக் கூடாது என்பது தான் எங்கள் கவலை' என்று மனம் திறந்து பேசினார்கள்.


நயினார் நாகேந்திரன்

❖ நெல்லை பகுதியில் ஹிந்துக்கள் மத்தியில் நயினார் நாகேந்திரனுக்கு நல்லதொரு ஆதரவு காணப்பட்ட போதிலும் தலித் பகுதிகளிலும், கடலோரப் பகுதிகளிலும் நயினாருக்கு பெரியளவில் ஆதரவு இருக்காது என்று கூறப்பட்டது. இதையடுத்து நாங்கள் அந்தப் பகுதியில் கள ஆய்வு மேற்கொண்டபோது, அது உண்மையே என்று உணர முடிந்தது. அதேபோல் நயினார் நாகேந்திரனும் இந்தப் பகுதிகளில் தனிக்கவனம் செலுத்தியதாகப் பின்னர் தெரிய வந்தது.

❖ தூத்துக்குடி தொகுதியை பொருத்தளவில் எங்களிடம் சைக்கிளுக்கு வாக்களிப்பவர்களும் சரி, இரட்டை இலைக்கு வாக்களிப்பவர்களும் சரி, 'இந்த தொகுதியில் கனிமொழிதான் வெல்வார்' என்று கொஞ்சம் கூட சஞ்சலம் இல்லாமல் குறிப்பிட்டார்கள். தமிழகத்தில் அறவே சந்தேகம் இல்லாத ஒரு தி.மு.க. தொகுதியாக தூத்துக்குடி திகழ்ந்ததை பார்க்க முடிந்தது.

❖ ரிஸர்வ் தொகுதியான தென்காசி பகுதியில் தேவேந்திரகுல வேளாளர்களின் ஆதிக்கம் அதிகம். வழக்கமாக இந்த வாக்குகள் டாக்டர் கிருஷ்ணசாமிக்கு அதிகம் விழுவதுண்டு. ஆனால் இந்த முறை அங்கு பா.ஜ.க. சார்பில் போட்டியிடும் ஜான் பாண்டியன், கணிசமான வாக்குகளை சேதாரப்படுத்துவார் என்பது எங்களது கள ஆய்வில் தெரிய வந்தது.

❖ நாங்கள் கருத்து கேட்கும்போது சின்ன, சின்ன கடைக்காரர்கள் பயமின்றி, எந்த கட்சிக்கு ஆதரவு என்பதை எங்களிடம் தெரிவித்தனர். ஆனால் சற்று பெரியளவில் முதல் போட்டு தொழில் செய்கின்ற வர்த்தகர்கள், 'மற்றவை' என்ற பகுதியில் 'டிக்' செய்து, தங்கள் வாக்கு யாருக்கு என்பது தெரியாமல் பார்த்துக் கொண்டனர்.


கனிமொழி

❖ இதே போல கிராமப்புறங்களில் வயதான தாய்மார்கள், 'இது ஏதோ கட்சிக்காரர்கள். நாம் யாருக்கு வாக்களிக்கிறோம் என்று கண்டு பிடிப்பதற்காக செய்த ஏற்பாடு. இங்கு நாம் ஏதேனும் ஒரு கட்சிக்கு வாக்களித்தால், பிற கட்சியினர் நமக்கு பணம் வழங்க மாட்டார்கள்' என்று ரகசியமாகப் பேசிக்கொண்டு பல இடங்களில் வாக்களிக்க மறுத்தார்கள்.

❖ சில ஊர்களில் நாம் இறங்கி கருத்துக் கணிப்பு கேட்க ஆரம்பித்தவுடன், வாக்காளர்களுக்கு பணப் பட்டுவாடாதான் நடக்கிறது என்று நினைத்து ஓடி வந்து ஏமாந்தவர்களும் உண்டு.

❖ சில மூதாட்டிகள், 'நீ யாருக்கு போட சொல்றியோ போடுறேன். எவ்வளவு கொடுப்ப?' என்று பேரம் பேசினார்கள்.


டாக்டர் கிருஷ்ணசாமி

❖ ஓரிரு இடங்களில் சில அதீத ஆதரவாளர்கள் நமது குழுவில் ஒருவரிடம் வாக்களித்து விட்டு, பின்னர் குழுவில் மற்றொருவரிடம் இன்னொரு ஸ்லிப்பை வாங்கி 'டிக்' செய்த சம்பவங்களும் நடந்தது.

❖ ஒரு சிலர் 'எனது வீட்டில் மொத்தம் நான்கு வாக்குகள். அவர்கள் எல்லோரும் யாருக்கு போடுவார்கள் என்று எனக்குத் தெரியும். எனவே நான்கு ஸ்லிப்புகளை கொடுங்கள்' என்று கேட்டதும், நாங்கள் சிரித்துக் கொண்டே மறுத்ததும் குறிப்பிடத்தக்க ஒரு தகவல்.

❖ இதுபோல ஆர்வம் அதிகமுள்ள இன்னும் சிலர், நண்பர்களுக்கு ஃபோன் போட்டு தகவல் சொல்லி விட்டு 'இரண்டே நிமிடம் பொறுங்கள். நான்கு பேர் வந்து கொண்டிருக்கிறார்கள்' என்று எங்களை தடுத்து நிறுத்த முயற்சித்த சம்பவங்களும் உண்டு.



**– எஸ்.ஜே.இதயா**

# பா.ஜ.க., காங்கிரஸ் ஏட்டிக்குப் போட்டி தேர்தல் வாக்குறுதிகள்!

நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் 'சங்கல்ப பத்ரா' என்ற பெயரில் பாரதிய ஜனதா கட்சியும், 'நியாய பத்ரா' என்ற பெயரில் காங்கிரஸ் கட்சியும் வாக்குறுதிகளை அளித்து தேர்தலை சந்திக்கின்றன. மூன்றாவது முறையாக நரேந்திர மோடி பிரதமராவது உறுதி என்று பா.ஜ.க. நம்புவதால், காங்கிரஸை போல கவர்ச்சிகரமான வாக்குறுதிகளையும் இலவசங்களையும் அளிக்காமல் எச்சரிக்கையாக செயல்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளாக நரேந்திர மோடி ஆட்சியில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் கொள்கைகளையும், திட்டங்களையும் கொஞ்சம் விரிவுபடுத்தி தேர்தல் வாக்குறுதிகளாக அறிவித்து, இவை மோடியின் உத்தரவாதம் என்று பா.ஜ.க. பிரசாரம் செய்கிறது.

பிரதமர் மோடி இந்தத் தேர்தலில் இலவசங்களை அறிவிக்கவில்லை என்று சில பத்திரிகைகளும், சில அரசியல் தலைவர்களும் பாராட்டுகின்றனர். ஆனால் ஆழமாகப் பார்த்தால் இதில் உண்மை இல்லை என்பது புலப்படும். சமீப காலமாக பல மாநிலங்களிலும் நடைபெற்ற சட்டசபை தேர்தலின்போது பிரதமர் நரேந்திர மோடி, காங்கிரஸ் மூத்த தலைவர் ராஹுல் காந்திக்கு போட்டியாக 'மகளிருக்கு மாதந்தோறும் உரிமைத் தொகை வழங்கப்படும். இல்லத்தரசிகளுக்கு சமையல் எரிவாயு சிலிண்டர் ரூ.500/-, ரூ.450/-க்கு வழங்கப்படும்' என்பது போன்ற பலவிதமான சலுகைகளை வாரி வழங்கினார். 'இது மோடியின் உத்தரவாதம்' என்று அறிவித்து மாநிலங்களில் பா.ஜ.க. ஆட்சியை நிறுவி விட்டார். பா.ஜ.க. ஆளும் மாநிலங்களிலும், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களிலும் இலவசங்கள் நடைமுறையில் உள்ளன.

அதனால் இப்போது நாடாளுமன்றத் தேர்தலில் எல்லா மாநிலங்களுக்கும் பொதுவாக இலவசங்களை, சலுகைகளை அறிவிக்கத் தேவையில்லை. அப்படி அறிவித்தால், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கும் இலவசங்களின் பலன் போய் சேர்ந்து விடும் என்று இப்போது இலவசங்களை தவிர்த்துள்ளார் மோடி என்பதே உண்மை.

'இலவசங்களால் நாட்டின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது' என்று மற்ற கட்சிகளை குற்றம் சொல்லிக் கொண்டே, பல மாநிலங்களில் நடைபெற்ற தேர்தலின் போது பிரதமர் மோடி இலவசங்களை வாரி வழங்கியதை, நடுநிலையாளர்கள் யாரும் மறந்து விட முடியாது. 'குடும்ப ஆட்சி, வாரிசு அரசியல், ஊழல்வாதிகளை ஒழிக்காமல் விட மாட்டேன்' என்று கூறிக் கொண்டே, மற்ற கட்சிகளில் இருந்து விலகி பா.ஜ.க.வில் சேரும் ஊழல்வாதிகளை சேர்த்துக் கொள்வதும், குடும்ப கட்சிகளுடன், ஊழல் கட்சிகளுடன் கூட்டணி வைத்துக் கொள்வதும் மோடியின் அரசியல் ராஜதந்திர பாணியாக இருக்கிறது!

'நாட்டின் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு பா.ஜ.க.வின் நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை அமைந்துள்ளது' என்று வேண்டுமானால் சொல்லலாம். 'சி.ஏ.ஏ. எனப்படும் குடியுரிமை திருத்தச் சட்டமும், பொது சிவில் சட்டமும் அமல்படுத்தப்படும். ஒரே நாடு ஒரே தேர்தல் முறை கொண்டு வரப்படும். பார்லிமென்ட் மற்றும் சட்டமன்றங்களில் பெண்களுக்கு 33 சதவிகித இடஒதுக்கீடு சட்டம் நடைமுறைப்படுத்தப்படும். அனைத்து தேர்தலுக்குமான பொது வாக்காளர் பட்டியல் உருவாக்கப்படும். விவசாயிகளுக்கு குறிப்பிட்ட விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்த்தப்படும். தேசிய கல்விக் கொள்கையின்படி பி.எம்.ஸ்ரீ, ஏகலைவா பள்ளிகள், பிற பள்ளிகள் அனைத்தும் உலகத்தரத்துக்கு உயர்த்தப்படும். 80 கோடி ஏழை எளிய மக்களுக்கு ரேஷன் கடைகளில் அரிசி, கோதுமை ஆகிய உணவுப் பொருட்கள் இலவசமாக வழங்கப்படுவது மேலும் 5 வருடங்களுக்கு நீட்டிக்கப்படும். பொருளாதாரத்தை சிதைக்கும் ஊழலுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும். வளர்ந்த பாரதத்தை உருவாக்கும் நான்கு தூண்களான இளைஞர்கள், பெண்கள், ஏழைகள் மற்றும் விவசாயிகள் வாழ்க்கைத் தரம் மேம்படுவதற்கு பா.ஜ.க. தேர்தல் அறிக்கை உத்தரவாதம் அளிக்கிறது' என்று கூறுகிறார் மோடி.

ஆனால் தேர்தல் நேரத்தில், கச்சத்தீவை இலங்கைக்கு தாரை வார்த்து கொடுத்ததாக இந்திரா காந்தி மீதும், கருணாநிதி மீதும் குற்றம் சாட்டிய மோடி, கச்சத் தீவை மீட்பது பற்றி தங்கள் தேர்தல் அறிக்கையில் கண்டு கொள்ளவே இல்லை. ரயில்களில் மூத்த குடிமக்களுக்கு கொரோனா முடிந்த பிறகு, 2020-ல் தனது அரசு ரத்து செய்த கட்டண சலுகை மீண்டும் கொண்டு வரப்படும் என்று அறிவிக்க, மோடிக்கு ஏன் மனம் வரவில்லை என்பது வியப்பாக இருக்கிறது! 12 கோடி முதியோருக்கு இந்த சலுகையை ரத்து செய்ததன் மூலம், ரயில்வே துறைக்கு வருடத்திற்கு 1667 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது என்று பா.ஜ.க. அரசு பெருமைபட்டுக் கொள்கிறது. காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் முதியோருக்கு இந்த ரயில் கட்டணச் சலுகை வழங்கப்படும் என்று, ராஹுல் காந்தி தேர்தல் அறிக்கையில் உறுதியளித்துள்ளார். பா.ஜ.க.வின் கொள்கைகளுக்கும், திட்டங்களுக்கும் எதிராக ஏட்டிக்குப் போட்டியாக அமைந்துள்ள காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையை அடுத்த இதழில் ஆராய்வோம்.



**(தொடரும்)**

**– கரிகாலன்**

# டியர் மிஸ்டர் துக்ளக்

## இரு பக்கமும் நியாயம்

❁ 24.4.2024 துக்ளக் இதழ் அட்டைப் படம்தான் தமிழக முதல்வரின் மைண்ட் வாய்ஸ். தன் கட்சிக்காகவோ, தனது சுயநலத்துக்காகவோ ஸ்டாலின் கேட்கும் கேரண்டியை 'மோடி'யால் தர முடியாது என்கிறபோது, அது மோடி பக்கம் நியாயமாகிறது. ஆனால் 9 தடவை தேர்தலையொட்டி விசிட் அடித்த பிரதமருக்கு, வெள்ள நேரங்களில் வரவும், நிவாரணம் தரவும் கேரண்டி தர முடியாதது ஸ்டாலின் பக்கம் நியாயமாகிறதே!

**- மருதூர் மணிமாறன்,**
**இடையன்குடி-627651**

## அலறல் மட்டும்தான்

❁ 'எச்சரிக்கை' மூலம் கச்சத்தீவு விஷயத்தில் காங்கிரஸ் நெளிவதையும், தி.மு.க. அலறுவதையும் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் வாஜ்பாய் + மோடி என்று 16 ஆண்டு கிடைத்த வாய்ப்பில், கச்சத்தீவு விஷயத்தில் ஒரு முன்னேற்றமும் ஏற்படவில்லை. மக்களின் இரு செவிகளுமே செவிடாகிப் போய் விட்டது. தேர்தல்தோறும் வரும் சப்தம் அது. யார் சப்தம் என்றாலுமே அலறல் மட்டும்தான் மீதம்.




**- எஸ்.எல்.ஜார்ஜ் அருண்,**
**சொக்கன்குடியிருப்பு-628653**

## மாற்றம் ஏற்பட வழிவகுக்கும்

❁ துக்ளக் இதழில் மூன்று வாரங்களாக 'டியர் மிஸ்டர் வாசகரே' என்று ஆசிரியர் எழுதியிருந்த தலையங்கம் படித்தேன். இந்திய நாட்டில் நடக்கும் அத்தனை ஒத்துக் கொள்ளக்கூடிய கருத்துக்களையும் விலாவாரியாக தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்துள்ளீர்கள். அதை கட்டாயம் படித்து விட்டு வாக்குச் சாவடிக்குச் சென்றவர்கள், திறமையானவர்களுக்கு வாக்களித்திருந்தால், நிச்சயம் நாட்டில் ஒரு மாற்றம் ஏற்படுவதற்கு வழிவகுக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**- ஏ.எஸ்.நடராஜன்,**
**சிதம்பரம்-1**

## கண்டிப்பாகத் தெரியும்

❁ 24.4.24 இதழ் படித்தேன். டியர் மிஸ்டர் வாசகரே என்ற தலையங்கம் படித்தேன். தேர்தல் களத்தில், அவர் அவர்களுக்குப் பிடித்தமான கட்சிகள் வெற்றி பெறும் என்று கூறி, வாக்குக் கணிப்பை வெளியிட்டு வரும் நேரத்தில், தமிழகத்தில் பா.ஜ.க. வின் வளர்ச்சி, இந்த தேர்தலில் அந்த கட்சி ஏன் வெற்றி பெற வேண்டும், அண்ணாமலையின் வரவிற்குப் பின் ஏற்பட்டுள்ள மாற்றம் இவை குறித்து, விரிவாக அலசி உள்ளதற்கு நன்றி. தேர்தல் கணிப்பை விருப்பு வெறுப்பு இன்றி அப்பட்டமாக தெரிவித்ததற்குப் பாராட்டுகள். முடிவுகள் எப்படி இருப்பினும், தமிழ்நாட்டில் பா.ஜ.க.வின் வளர்ச்சி கண்டிப்பாகத் தெரியும்.

**- பி.கே.ஜீவன்,**
**கும்பகோணம்-1**

## சரவெடிகள்

❁ தேர்தலை ஒட்டிய துக்ளக் என்பதால், ஒண்ணரைப் பக்க நாளேட்டில் பா.ஜ.க. வெற்றி என்று போட்டுக் கலாய்ப்பீர்கள் என்று நினைத்தேன். எதிர்பார்த்த மாதிரியே காமெடிகளை சரவெடிகளாகப் போட்டுத் தள்ளி விட்டீர்கள்.

**- ஆர்.ஜே.கல்யாணி,**
**திசையன்விளை-627657**

## வாசகர்களின் தியாகம்

❁ அட்டைப்பட கார்ட்டூன், சத்யாவின் அரசியல் கார்ட்டூன், அரசியல் சினிமா கார்ட்டூன் அனைத்தும் படித்து மனம் குளிரச் சிரித்து மகிழ்ந்தேன். துக்ளக்கில் இடப்பற்றாக் குறை வந்து விட்டால், 'டியர் மிஸ்டர் துக்ளக்' காணாமல் போய்விடுகிறது. வாசகர்கள் துக்ளக்கிற்காகச் செய்யும் தியாகமாக இதை எடுத்துக் கொள்ளலாம்.

**- கே.ஆர்.எஸ்.சம்பத்,**
**திருச்சி-17**

## நேர்மை, மனச்சாட்சிக்கு ஓர் எல்லை இல்லையா?

❁ கடந்த (24.4.2024) இதழில் தேர்தல் பற்றிய துக்ளக்கின் (உண்மைத் தன்மை என்றும் பெருமையாகச் சொல்லப்பட்ட) தேர்தல் கருத்துக் கணிப்பு சர்வே, பலரது புருவத்தை உயர்த்த வைத்தது.

இன்று அச்சு மற்றும் காட்சி ஊடகங்கள் (குறிப்பாக தமிழகத்தில்) இரு கோஷ்டியாகப் பிரிந்து, திரை மறைவில் வாங்குவதை வாங்கிக் கொண்டு... சற்றும் கூச்சமின்றி, ஆளும் கட்சியின் தவறுகளைக் கண்டிக்காமல் - அல்லது கண்டு கொள்ளாமல் - தன் போக்கில் விளம்பரம் ஒன்றே குறி, பிழைப்பு ஒன்றே நோக்கம் என்றே செல்கின்றன. சில எதிர்க்கட்சிகளைக் கொம்பு சீவி விடுவது, அவர்களிடம் ஆதாயம் பெறுவது என்று தங்கள் பங்கை கச்சிதமாக முடித்துக் கொள்கின்றன என்றும், ஊடகங்களைப் பற்றிச் சொல்லப்படுகிறது. இதில் பெரிதும் குழம்பி, ஏறத்தாழ மன நோயாளியின் நிலைக்குச் செல்வது சாமான்ய மக்களே.

துக்ளக் என்றும் நடுநிலை தவறாத பத்திரிகை. மனச்சாட்சிக்குப் பொதுவான கருத்தைச் சொல்வதில் தயங்கியதில்லை என்பது பலர் அறிந்த விஷயம்.

அதற்காக உண்மைத்தன்மைகளை அறியாமல், போகிறபோக்கில் சொல்லப்பட்டது போல் தெரிகிறது.

இதில் கவனிக்க வேண்டிய விஷயம், அ.தி.மு.க., பா.ஜ.க. என்னதான் முன்பு வலுவான கூட்டணியாக இருந்திருந்தாலும், தற்போது வலுவான கூட்டணியான தி.மு.க.வுக்கு உதவுவது போல், நாட்டின் நலன் பற்றி அறியாமல், இரு கட்சிகளும் 'ஈகோ' காரணமாக இருகூறாகப் பிரிந்திருப்பது ஒரு அவலம். இது ஒன்றே தி.மு.க.வுக்குப் பெரிய அனுகூலம்.

எது எப்படியோ... இது போன்ற கணிப்புகள் உண்மையாகி விடக் கூடாது என்ற பயமும், பல வாசகர்களுக்கு ஏற்பட வாய்ப்புண்டு என்பதே எனது கருத்து.

**- எஸ்.ஸ்ரீதர்,**
**சென்னை-59**

## கெத்துதான்

❁ 'கோவையில் கரன்ஸி, ஆளும் கட்சிக்கு கை கொடுக்குமா?' என்ற கட்டுரை படு ஜோர். அண்ணாமலைக்கு இவ்வளவு எதிர்ப்பா என்று நினைக்கலாம். அவர் போலீஸ் அதிகாரியாக இருந்தவர். அரசியலை இவ்வளவு சீக்கிரமாகக் கரைத்துக் குடித்து விட்டதே பெரிய விஷயம். ஓட்டுக்குப் பணம் கொடுக்க முன்வரும் கட்சிகளுக்கு அண்ணாமலை ஒரு சவால்தான். ஓட்டுக்குத் துட்டுத் தர மாட்டேன் என்று சொல்வதே கெத்துதான். எப்படியோ தேர்தல் ரத்தாகாமல் இருந்தால் பெரிய விஷயமே.

**- தே.மாதவராஜ்,**
**கோயமுத்தூர்-45**

## தேசத்திற்காக அர்ப்பணித்துக் கொண்டவர்கள்

❁ 'கன்னியாகுமரி டு காஷ்மீர்' என்ற கட்டுரையில், ஊழல் கறை படிந்த மற்றும் வாரிசு அரசியல் செய்யும் மாநிலக் கட்சிகளோடு பா.ஜ.க. கூட்டணி அமைத்ததைக் கடுமையாகச் சாடி இருந்தார் கட்டுரையாளர். முதலில் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். பா.ஜ.க. இங்கு அரசியல் செய்ய வந்துள்ளது. கதாகாலட்சேபம் செய்ய வரவில்லை. ஊழல் கறை படிந்த கட்சிகளோடு கூட்டணி வைத்தாலும், தன் மீது சிறிதளவேனும் ஊழல் கறை படிந்து விடக்கூடாது என்பதில் பா.ஜ.க. தெளிவாக இருக்கிறது. பா.ஜ.க. தலைவர்கள் அனைவரும் இந்த தேசத்திற்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள்; குடும்பத்திற்காக அல்ல. கட்டுரையாளருக்கு பா.ஜ.க. மீது குற்றச்சாட்டு வைப்பதை விட, காழ்ப்புணர்ச்சிதான் தெரிகிறது.

**- சந்திரசேகரன்,**
**சென்னை-80**




ஸ்ரீஹரி: ஓம் நமோ பகவதே ப்ரேமிகேந்திராய!

**ஸ்ரீ ஸாந்தீபனி குருகுலம் ஸ்ரீரங்கம் டிரஸ்ட்**

ஸ்ரீப்ரேமிக வேதாஸ்ரமம்,127,வடக்கு உத்திர வீதி, ஸ்ரீரங்கம் - 620006
போன்: 0431 - 4542299, செல்: 9444460079, 9841992022
மின்னஞ்சல்: srirangampadasalai@gmail.com

அன்புடையீர்,

பூலோக வைகுண்டமான ஸ்ரீரங்கத்தில் "ஸ்ரீ ப்ரேமிக வேதாஸ்ரமம்" 127, வடக்கு உத்திர வீதி என்ற இடத்தில் ரிக், யஜூர் வேத பாடசாலை, மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, ஸ்ரீ ஸாந்தீபனி குருகுலம் ஸ்ரீரங்கம் அறக்கட்டளையின் சார்பில் நடந்து வருகின்றது. இந்தவேத கைங்கர்யத்தை உங்களைப் போன்ற நல்ல உள்ளங்களின் ஆதரவுடன்தான் தொடர்ந்து நடத்த முடியும். அதனால் தாங்கள் முடிந்த அளவில் பொருளுதவி செய்து வேதநாராயணனின் பரிபூரண அருளுக்குப் பாத்திரர்கள் ஆகும்படி கேட்டுக் கொள்கிறோம்.

| | |
|---|---|
| வேத பாடசாலையின் ஒரு நாள் செலவு | ரூ.7,500 |
| ஒரு மாத பராமரிப்பு செலவு | ரூ.2,00,000 |




பாடசாலை வங்கிக் கணக்கு விவரம்:கரூர் வைஸ்யா பேங்க், ஸ்ரீரங்கம்.
SREE SANTHEEPANI GURUKULAM, A/c NO. 1276155000016800, IFS CODE. KVBL 0001276.

மேலே கொடுக்கப்பட்டுள்ள செலவு விவரம் தகவலுக்காக மட்டுமே. அன்பர்கள் அவரவர் விரும்பிய / இயன்ற தொகையினை செலுத்தி இந்தக் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளலாம்.

நன்கொடைகளை காசோலையாகவோ, மணி ஆர்டர் மூலமாகவோ, மின்னணுப் பண பரிமாற்றம் மூலமோ செலுத்தலாம். தங்கள் பெயர், நக்ஷத்திரம், முகவரி, தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியை மேற்கண்ட விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

நன்கொடையாளரின் குடும்பத்திற்கான சிறப்பு ப்ரார்த்தனை செய்து, அதன் ப்ரஸாதம் மற்றும் இரசீது அனுப்பி வைக்கப்படும்.

குறிப்பு: நன்கொடைகளுக்கு வருமான வரி சட்டப் பிரிவு 80 - G ன்படி வரிச்சலுகை உண்டு.- நிர்வாகிகள்

# கள்ள முதலீடு



கருப்புப் பணத்தை பிடிப்பதும், கானல் நீரில் குளிப்பதும் ஒன்றுதான் என்பதை கெட்டிக்கார அரசியல்வாதிகள் எப்போதோ உணர்த்திவிட்டார்கள். இருந்தாலும், மௌனியாக இருந்த ஸ்விஸ் வங்கியை வாய் திறக்கச் செய்தவர் பிரதமர் நரேந்திர மோடி. புதிய போக்கு கருப்புப் பணத்தை இரண்டு வழிகளில் சுழல விடுவது.

**விதேசி வழி:** பாதுகாப்புச் சோதனைகளிலிருந்து விலக்கு பெறும் அதிஉயர் அரசியல்வாதிகளான ஆட்சித் தலைவர்கள், ரூபாய் மூட்டைகளை வெளிநாடுகளுக்கு எடுத்துச் சென்று, அங்கே ரூபாய்க்கு டாலர் ஆடை அணிவித்து பினாமி முதலீடாக இங்கே கொண்டு வருவது. அசல் முதலாளிகள் இவர்களே. நாட்டை விட்டுப் போகும் போதே இந்தப் பணமூட்டைகளை பறிமுதல் செய்துவிட முடியும். தவறினால் வரும்போது பிடித்துவிடலாம். மத்திய புலனாய்வு அமைப்புகள் ஏன் இதைச் செய்யவில்லை? தவறு செய்பவர்கள் செய்யட்டும். அவர்கள் குடுமி நம் கையில் இருக்க வேண்டும் என்று பெரியண்ணன் நினைக்கிறாரா? அப்படித்தான் தெரிகிறது. இதன் பின்புலம் அரசியல்தானே, வேறென்ன? ஆக, கள்ள முதலீட்டுக்கு அரசியல் துணைப் போகிறது.

**சுதேசி வழி :** கருப்புப்பண முதலீடு உள்நாட்டிலேயே சுற்றிச் சுற்றி வருகிறதே. அது எப்படி? நேற்றுவரை சிறுகடை முதலாளிகளாக இருந்து சின்னஞ்சிறு வியாபாரத்தில் ஏதோ கொஞ்சம் லாபம் சேர்த்தவர்களை வளைத்துப் பிடிக்கும் கருப்புப்பண முதலைகளான அரசியல்வாதிகள், தங்கள் லஞ்சப் பணத்தை அவர்களிடம் கொடுத்து வியாபாரத்தை விருத்திச் செய்யச் சொல்கிறார்கள். முதலீடு அவர்களுடையது. முதலீட்டில் வாங்கும் சொத்து பினாமிகள் பேரில் இருக்கும். இப்படித்தான் திடீரென்று நகரில் முக்கிய பகுதிகளில் மாநிலத்தின் பெரிய நகரங்களில் அடுத்தடுத்து பிரமாண்டமான கிளைகள் உருவாகின்றன.

சில ஜவுளிக்கடைகள், நகைக் கடைகள், ஹோட்டல்கள் வெவ்வேறு ஊர்களில் இந்த வளையத்திற்குள்தான் வருகின்றன. இப்படி பினாமிகள் லட்சக்கணக்கான சதுரடி பரப்பளவில் உயர்ந்த கட்டடங்களைக் கட்டி சூப்பர் மார்க்கெட் நடத்துகிறார்கள். அரசாங்க விதிமுறைகள் இவர்களுக்கு வளைந்து கொடுக்கின்றன.

இது தெரிந்திருந்தும் சொத்து எப்படி வந்தது என்று அரசாங்கம் கேட்பதில்லை. வருமான வரி கட்டினால் போதும் என்று நினைத்தால், அரசாங்கமே கருப்புப் பண புழக்கத்தை ஊக்குவிப்பதாகிறது. இதை மாநில, மத்திய அரசாங்கத்தின் எந்தப் பொருளாதார புலனாய்வுத் துறையோ அல்லது தனியார் பொருளாதார அமைப்போ கண்டு பிடித்ததாகவோ, கண்டித்ததாகவோ தெரியவில்லை. ஆக, கருப்புப் பணம் குட்டிப் போட்டுக் கொண்டே போகிறது.

கள்ள முதலீட்டாளர்களுக்கு எந்த கவலையும் இல்லை. லஞ்சப் பணம் எங்கிருந்தோ வருகிறது. அதில் அவர்களது உழைப்பு இல்லை. ஆயிரம் கோடி கருப்புப் பணத்தை கொடுத்து விட்டு, 500 கோடி ரூபாய் வெள்ளைப் பணத்தை பெற்றுக் கொள்வதில் அவர்களுக்கு நஷ்டமும் இல்லை, கஷ்டமும் இல்லை. யாரோ கொடுத்த காசு யார் யார் மூலமோ சலவை செய்யப்படுகிறது. சலவை செய்து தரும் வர்த்தகர்களுக்கு எங்கிருந்தோ வரும் முதலீடு அதிஷ்டம்தானே, லாபம்தானே! அவர்களுக்கு வர்த்தகத்தை விருத்திச் செய்வது சுலபம். இவர்கள் பெரிய பெரிய கடைகள் கட்டி தொடக்கக் காலத்தில் சற்றே மலிவான விலையில் சரக்குகளை விற்று வாடிக்கையாளர்களை கவர்கிறார்கள். எப்படிப் பார்த்தாலும் கள்ள முதலீடு பெற்ற பினாமிகளுக்கான நிர்வாகச் செலவும் கருப்புப் பணத்தைச் சேர்ந்ததுதான்.

இந்தப் போக்கினால் வியாபார தர்மம் அடிபட்டுப் போகிறது என்பதே கொடுமை. காலம் காலமாக நியமங்களின்படி வியாபாரம் செய்து வருபவர்கள் புதிய பினாமிகளுடன் போட்டியிட முடிவதில்லை. எந்த தவறும் செய்யாத நேர்மையான வியாபாரிகள் ஏன் பினாமிகளினால் நஷ்டப்பட வேண்டும்? நியாயவான்கள் வியாபாரத்தை விட்டு வெளியேற வேண்டிய நிர்பந்தம் ஒரு அபாயம். அரசியல்வாதிகளே முகமூடி வியாபாரிகள், முகமூடி தொழில் அதிபர்கள் என்ற அதர்ம சூழ்நிலை உருவாகும். இப்போது பொருளாதாரம், அரசியலுக்கு சேவகனாக இருக்கிறது. இனி முழுமையான அடிமையாகிவிடும். அது தேசத்திற்கு நல்லதல்ல. விளைவுகள் மோசமாகும். அப்போது வீழ்ச்சியும் ஆபத்தாக இருக்கும். இந்தப் போக்கை எப்போது, எப்படி தடுப்பது? இப்போதே விழித்துக் கொள்ளாவிட்டால் வெகு விரைவில் இந்தியா சூடானாகவோ, சோமாலியாவாகவோ மாறக்கூடும். அபாயம் புரிகிறதா?



**– ஆர்.நடராஜன்**

# பா.ஜ.க., மோடியை ஒழிக்க நிதி

உலக அரசியல் வட்டாரத்தில் உலவும் செய்தி இது. பா.ஜ.க. மூன்றாம் முறையாக ஆட்சிக்கு வருவதையும், மோடி பிரதமராவதையும் தடுக்க சில வெளிநாடுகள் பணத்தை அள்ளி இறைக்கின்றன. இதற்காக நான்கு தனியார் பல்கலைக் கழகங்கள் குறி வைக்கப்பட்டு, அவற்றுக்கு அந்த நாடுகள் நிதியுதவிகளைத் தாராளமாக வழங்கியுள்ளன என்ற தகவல்கள் அடிபடுகின்றன.

## அமேதி தொகுதிக்கு அடிபிடி

காங்கிரஸ் கட்சியில் உ.பி.யிலுள்ள அமேதி தொகுதியில் போட்டியிட, அக்கட்சியிலுள்ள பல தலைகள் விரும்பின. காரணம் அமேதியில் காங்கிரஸுக்கு கணிசமான வாக்கு வங்கி இருக்கிறது. அதனால் வெற்றி பெறுவது எளிது.

'அமேதியில் நான் போட்டியிடுவேன்' என்று ப்ரியங்கா காந்தியின் கணவரான ராபர்ட் வாத்ரா பிடிவாதம் பிடித்தாராம். இது ப்ரியங்காவுக்குப் பிடிக்கவில்லை என்று கூறப்படுகிறது. வாத்ராவைப் போல் பலரும் அமேதியைக் குறி வைத்தனர்.



ராபர்ட் வாத்ரா

## மோடியின் கட்சிகள் ஒழிப்பு

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின் அல்லது இந்த ஆண்டு முடிவில், பகுஜன் சமாஜ் கட்சி முதலான எட்டு மாநிலக் கட்சிகளை மோடி ஓரம் கட்டி ஒழித்து விடுவார். இதில் வலது - இடது கம்யூனிஸ்ட் கட்சிகளும் அடங்கும் என்று கூறப்படுகிறது.

## மோடியும், இந்திக் கூட்டணியும்

இந்திக் கூட்டணியை முடிவுக்குக் கொண்டு வர மோடி முயற்சி செய்கிறார் என்பது புதிய செய்தியல்ல. டெல்லியில் கெஜ்ரிவால் சிறையிலிடப்பட்டதன் மூலம் ஆம் ஆத்மிக்குப் பெரிய சரிவு ஏற்பட்டுள்ளது. இதுபோல் தெலுங்கானாவில் சந்திரசேகர ராவின் பாரதிய ராஷ்ட்ரிய சமிதி கட்சியின் செல்வாக்கும், சந்திரசேகர ராவின் மகளான கவிதாவின் கைதினால் பெரும் சரிவுக்கு உள்ளாகியுள்ளது.

## அடுத்த இலக்கு தமிழ்நாடு

பா.ஜ.க.வை தமிழ்நாட்டில் பலப்படுத்தவும், தி.மு.க., அ.தி.மு.க. என்ற இரண்டு திராவிடக் கட்சிகளின் செல்வாக்கை முடிவுக்குக் கொண்டு வரவும் மோடி கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார். பா.ஜ.க.வின் இந்த முயற்சியை முறியடிக்க தி.மு.க. விடமோ, அ.தி.மு.க.விடமோ பெரிய அரசியல் தந்திரம் எதுவும் இல்லை. அவற்றுக்கு தற்போது நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறுவது ஒன்றே குறியாக உள்ளது.

## ராஹுலின் ஆட்கள் எங்கே?

இந்த நாடாளுமன்றத் தேர்தலில் ராஹுலுக்கு நெருக்கமான மூன்று காங்கிரஸ் பிரமுகர்களைக் காணோம். அவர்கள் கமல்நாத், சச்சின் பைலட், ஆதிர்ரஞ்சன் சௌத்ரி ஆகியோர்தான். மத்தியப் பிரதேச முன்னாள் முதல்வர் கமல்நாத், தனது மகனும் முன்னாள் எம்.பி.யுமான நகுல்நாத் இந்த முறையும் எம்.பி. யாக வேண்டும் என்பதற்காக தேர்தல் வேலைகளில் மும்முரமாக இருக்கிறார். மற்றவர்களின் நிலை என்னவோ தெரியவில்லை.

## போட்டி கடுமையாக உள்ள தொகுதிகள்


பா.ஜ.க.வைப் பொறுத்தவரை ஹரியானாவில் ஐந்து தொகுதிகளிலும், ராஜஸ்தானில் ஆறு தொகுதிகளிலும் போட்டி கடுமையாக இருக்கிறதாம். 2019 தேர்தலில் இரண்டு மாநிலங்களிலும் அனைத்து நாடாளுமன்ற தொகுதிகளில் பா.ஜ.க. வெற்றி பெற்றிருந்தது. இந்த முறை நிலைமை அப்படியில்லை.

ஹரியானாவில் உள்ள 10 தொகுதிகளில் ரோத்தக், சோனிபட், சிர்ஸா, ஹிஸார், கர்னால் ஆகிய தொகுதிகளில் போட்டி கடுமையாக உள்ளது. இதுபோல் ராஜஸ்தானில் உள்ள 25 தொகுதிகளில் பார்மர், சுரு, நாகுர், தௌஸா, டோன்க், காருளி முதலான தொகுதிகளில் போட்டி கடுமையாக இருக்கிறது.

## காணாமல் போகும் காங்கிரஸ்

உத்தராகண்ட்டில் கௌசார் என்ற இடத்தில் நடந்த பேரணியில் கலந்து கொண்ட மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங், 'வரும் காலத்தில் டயோனாஸரஸைப் போல் காங்கிரஸும் காணாமல் போகும்' என்று கூறினார்.

– டெல்லிவாலா




Printed and Published by K. Swaminathan on behalf of Nachiketas Publishers India Private Limited, 166, (Old No.46), Greenways Road, Chennai - 600 028 and Printed at Rasi Graphics Private Limited, No.40, Peters Road, Royapettah, Chennai - 600014. Editor : S.GURUMURTHY.

V.KRISHNAMOORTHY
Managing Trustee




# sri matha trust



**Our free "Namma Dharmasala" at Chennai since 2000...**

A real sanctuary for ailing poor cancer victims from outstations...a "Home" away from their homes with homely wholesome food served with motherly affection, while under treatment in the Cancer Institute, Adyar, Chennai.

நன்கொடையாளர்கள் விரும்பினால் நமது **நம்ம தர்மசாலா**விற்கு விஜயம் செய்து எங்களது செயல்பாடுகளை நேரில் கண்டறிந்த பின்னர் நன்கொடை வழங்கி, ஏழை புற்றுநோயாளிகளுக்கு தங்களது திருக்கரங்களால் உணவு பரிமாறி, தாங்களும் உண்டு, உணவின் தரம் அறிந்து உள்ளம் மகிழலாம்.



அன்பு நன்கெடையாளர்களுக்கு அநேக நமஸ்காரங்கள்... ஆதரவற்ற – ஏழை முதியோர்களுக்காகவும், புற்றுநோயிலிருந்து மீண்ட, வயது முதிர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையிலும் செங்கல்பட்டு மாவட்டம், மாமண்டூர் கிராமம், சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் முற்றிலும் இலவசமாக செயல்படக்கூடிய வகையில் நாம் நிர்மாணித்து வந்த **ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா வயது முதிர்ந்த – ஆதரவற்ற ஏழை மற்றும் புற்றுநோயாளிகளுக்கான இலவச மாற்று இல்ல** கட்டுமானப் பணிகள் தற்போது முடியும் தருவாயில் உள்ளது. மிகவும் பிரம்மாண்டமாகவும், இது போன்று ஒரு இலவச இல்லம் இதுவரை இல்லை என அனைவரும் பிரமிக்கும் வகையில் நூறாண்டுகள் கடந்தும் ஆதரவற்ற – ஏழை முதியவர்களுக்கு ஒரு அரணாக விளங்கப்போகும் இந்த இல்லம், மனிதநேய மனம் கொண்ட மனிதர்கள் மற்றும் சமூக அக்கறை கொண்ட பெருநிறுவனங்கள், ஸ்ரீ மாதா டிரஸ்டின் செயல்பாடுகள் மீது நம்பிக்கை வைத்து வழங்கிய நன்கொடையால் மட்டுமே இத்தனை பிரம்மாண்டமாக தலை நிமிர்ந்து நிற்கிறது என்றால் அது மிகையல்ல. **இம்மாபெரும் தர்ம கார்யத்திற்கு உதவிய ஒவ்வொரு உள்ளத்திற்கும் இருகரம் கூப்பி நன்றியை தெரிவிக்கும் அதே வேளையில், இந்த மாற்று இல்லத்தின் துவக்க விழா 26.4.2024 - வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற உள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.** நன்கொடையாளர்கள் அனைவரும் இவ்வினிய நிகழ்வில் பங்கேற்று இம்மாபெரும் தர்ம கார்யம் தொய்வின்றி தொடர எங்களுக்கு மேன் மேலும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

## நமது மாற்று இல்லத்தின் சிறப்பம்சங்கள்...



















**தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்**

- ரூ.**1,00,000/-** நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்
- ரூ.**75,000/-** நிதியளித்து வள்ளல் ஆகலாம்
- ரூ.**25,000/-** நிதியளித்து "**நம்ம தர்மசாலா**"வின் ஒரு நாள் செலவினை ஏற்கலாம்
- ரூ.**10,000/-** நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.**5,000/-** நிதியளித்து மதிய (அ) இரவு உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.**3,000/-** நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution to SRI MATHA TRUST by CHEQUE / NEFT / CASH / M.O.

| | | | |
|---|---|---|---|
| Account Name | SRI MATHA TRUST | Current A/c No. | 163502000001090 |
| Bank Name | INDIAN OVERSEAS BANK | IFSC Code | IOBA0001635 |
| Branch | Gandhi Nagar, Chennai-20. | Sri Matha Trust PAN Number | **AACTS9747G** |

வெளிநாட்டு வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் தங்களது நன்கொடையை எங்களது FCRA A/c-க்கு அனுப்பலாம்

| | |
|---|---|
| NAME : SRI MATHA TRUST | S.B. A/C No. : 40384754521 |
| BANK : STATE BANK OF INDIA | BRANCH : NEW DELHI MAIN BRANCH |
| IFSC : SBIN0000691 | SWIFT : SBININBB104 |

**தங்களது நன்கொடைக்கு வருமான வரி சட்டம் 80(G) படி வரிவிலக்கு உண்டு.**

ஸ்ரீ மாதா டிரஸ்டிற்கு நன்கொடை வழங்கும் அன்பர்கள், தங்களது விலாசம் மற்றும் **"PAN"** நம்பரை எங்களுக்கு அனுப்பவும்.

Admin Office: 95/42, Flat No.3, Ground Floor Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, [next to Harini Skin & Laser Clinic] Chennai - 600 020.
Tel: 044-24420727, 42661687 Mobile: 9500001065 / 9003247857

Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044-4509 8647

**vkrishnamoorthy.smt@gmail.com www.srimathatrust.org**

Thuglak - Weekly Magazine*Registered with the Registrar of Newspaper for India under No.17843/1970* Registered No.TN/CC(S)DN/123/24-26*
Licensed to post without prepayment under WPP No.TN/PMG(CCR)WPP/612/24-26* Published every Wednesday.


இப்போது GST கட்டணம் செலுத்துவது மிகச் சுலபம்



CUB மூலம் சில நொடிகளில் செலுத்தலாம்

இப்போது **GST** கட்டணத்தை உங்கள் **CUB Netbanking / Mobile Banking** மூலம் மிக எளிதாக, விரைவாக மற்றும் பாதுகாப்போடு செலுத்தலாம்.

**GST** போர்ட்டலில் **Challan** தயார் செய்து, தனிப்பட்ட **Common Portal Identification Number (CPIN)** எண்ணை இயற்றி, இந்த **CPIN** எண்ணை வைத்து, **City Union Bank** என தேர்வு செய்து, **CUB Netbanking / Mobile Banking** மூலம் பணம் செலுத்தலாம்.

செலுத்திய பணத்திற்கு உடன் ரசீதும் பெறலாம்.

இருக்கும் இடத்திலிருந்து GST கட்டணம் செலுத்தலாம், ஈஸியாக.

FASTag
CONVERSATIONAL CHAT BOT
SPEND ANALYSER
INTERNET / MOBILE BANKING
SOVEREIGN GOLD BONDS
WEALTH MANAGEMENT
EASY PAY
BBPS BILL PAYMENT
UPI SCAN AND PAY
THREE-IN-ONE ACCOUNT
POS
CARDLESS WITHDRAWAL
DEBIT AND CREDIT CARD
PREPAID / TRAVEL CARD
SOCIAL MEDIA BANKING
ONLINE ASBA
ALL IN ONE APP
ONLINE MUTUAL FUND
VIDEO KYC
UPI QR CODE FOR MERCHANTS
WHATSAPP BANKING
INSTA LOAN
WALLET
SET CARD LIMIT
GREEN PIN

CUB
TRUST AND EXCELLENCE SINCE 1904

சிட்டி யூனியன் பேங்க்

www.cityunionbank.com
ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000. Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.